216657

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

ஏப்ரல் 28, 1997 தொகுதி 35
எண் 1

C

D
V211,31N97
N97.35·1
216657

வெளியீடு 16-4-98 Issued 16-4-98

1167 - 98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 28, 1997 – தொகுதி 35 – எண் 1

**Monday the 28th April, 1997 – Volume 35 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

[Price Rs. 3.00

21.2.1997
2.3
216657.

# 28–4–1997

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் *(அகர வரிசைப்படி)* | xvii-xxvii |
| *1.* | ***வினாக்கள்-விடைகள்--*** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-48 |
| *2.* | ***கவன ஈர்ப்பு--*** | |
| | *(அ)* கடலூர் நகர குடிநீர்ப் பிரச்சினை | 48-51 |
| | *(ஆ)* கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கிராமிய நூற்பாலைகளில் பணிபுரியும் முது நிலை நூற்பாளர்களுக்கு தினக்கூலி | 51-53 |
| *3.* | ***அறிக்கைகள் அளித்தல்--*** | |
| | *(அ)* பொதுக் கணக்குக் குழு | 53 |
| | *(ஆ)* பொது நிறுவனங்கள் குழு | 53 |
| *4.* | ***அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--*** | |
| | *(அ)* தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு, *1997* | 54 |
| | *(ஆ)* தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, *1997* | 54-55 |
| | *(இ)* தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *3)* சட்டமுன்வடிவு, *1997* | 60 |
| | *(ஈ)* தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *4)* சட்டமுன்வடிவு, *1997* | 61 |

பக்கங்கள்

. அறிவிப்புகள்--

(அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88 (ஆ. இ.) — 55-56

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1997 (ஆ. இ.) — 59

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1997 (ஆ. இ.) — 60

. **மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88, வாக்கெடுப்பு--** — 56-59

. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997. — 61-135, 141-143

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 62,86, 108-135,142-143

திரு. சி. ஞானசேகரன் — 62-72

திரு. மா. இராமச்சந்திரன் — 72-77

திரு. ஜி. பழனிசாமி — 77-82

திரு. ஜி. நிஜாமுதீன் — 82-85

திரு. சி. வேலாயுதன் — 85-89

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 89-95

திரு. பெ.சு. திருவேங்கடம் — 95-101

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 102-103

*திரு. டி. அமரமூர்த்தி — 103-106

திரு. ச. அழகிரி — 106-107

(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 136-137

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 136-137


216657




பக்கங்கள்

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி**

(இ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 137-139

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 138-139

(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997 — 139-141

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் — 140-141

8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** — 143-144

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—செல்வி எம். பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேள்ாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே. என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பாற் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட)

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:
வனம், சின்கோனா, கால்நடைப் பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

| | | |
|---|---|---|
| 20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**<br>செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம். |
| 21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன்:**<br>இந்து சமய அறநிலையத் துறை. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**<br>சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**<br>ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**<br>சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**<br>கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**<br>மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Kalaignar M. Karunanidhi :**<br>Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports. |
| 2. **Minister for Education** | .. | **The Hon. Prof. K. Anbazhagan:**<br>Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. | **The Hon. Thiru Arcot N. Veerasamy:**<br>Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru Nanjil K. Manoharan:**<br>Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. | **The Hon. Thiru Ko. Si. Mani:**<br>Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugham:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Scheme.

| | | |
|---|---|---|
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi and Printing** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| **26. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

**பேரவைத் துணைத் தலைவர்**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 32. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | .. உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. டி.பி. | .. வீரபாண்டி |
| 24. | ஆறுமுகம், திரு. வீரபாண்டி, எஸ். | .. திருச்செங்கோடு |
| 25. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணாநகர் |
| 26. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 27. | இரகுமான்கான், திரு. அ். | .. இராமநாதபுரம் |
| 28. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 29. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 30. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 31. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. திருவாடானை |
| 33. | இராமசாமி, திரு. வை. | .. பண்ருட்டி |
| 34. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. கம்பம் |
| 35. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 36. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 37. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 38. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 39. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 40. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 41. | இராஜரெட்டி, திரு. ச. | .. தளி |
| 42. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |



| | | |
|---|---|---|
| 43. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 47. | கணேசன், திரு. இ. | .. எடப்பாடி |
| 48. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 49. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 52. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 53. | கல்யாணம், திரு. குத்தாலம், பி. | .. குத்தாலம் |
| 54. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 55. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 56. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 57. | கிட்டு, திரு. சைதை கா. | .. சைதாப்பேட்டை |
| 58. | கிருட்டிணன், திரு. பசும்பொன், தா... | சிவகங்கை |
| 59. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 60. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 61. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 62. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 63. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 64. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 65. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |

66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்
75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... சமயநல்லூர் (செ.வ.)
78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
80. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி



88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
90. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்
91. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
99. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்
107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை
109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருதாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி



134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் மனோகரன், திரு. கி. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே. என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)

162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

165. பெரியசாமி, திரு. என். கே. கே. .. ஈரோடு

166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)

168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்

170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்

171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

172. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. நெல்லிக்குப்பம், அ. .. நெல்லிக்குப்பம்

176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ. ஜெ. .. திருநாவலூர்

180. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்

181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு

183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

187. மாரிஅய்யா, திரு. .. புதுக்கோட்டை

188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்

193. முபாரக், திரு. பா.மு. .. கடலூர்

194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

196. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்

197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ். கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி. கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே. எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி. சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ. க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே. வே. ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப்பாளையம்



224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ். கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ. அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு. க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

வெங்கடபதி, திரு. கே.வி. .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 15, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 ஏப்ரல் 28, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*" முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும் "*

நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 701, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**701--**

### தாய்சேய் நல விடுதியை இயங்கச் செய்தல்

**2586--*திருமதி **ஆர். சரஸ்வதி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) தாராபுரம் தொகுதி, பூளவாடி கிராமத்தில், தாய்சேய் நல விடுதி கட்டி பல ஆண்டுகள் ஆகியும் அது இயங்காத நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இயங்கும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் வட்டாரம், பூளவாடி கிராமத்தில் தாய்சேய் நலவிடுதி எதுவும் செயல்படவில்லை. இக்கிராமத்தில் செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகமானது 1-7-1991 முதல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு அரசுக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகின்றது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதி, பூளவாடி கிராமத்தில் 1991-இல் ஆரம்பிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது. அதில் ஒரு ஆண் மருத்துவரும், ஒரு செவிலியரும் மட்டுமே இருக்கிறார்கள். படுக்கை வசதியும் இல்லை. பெண் மருத்துவரும் இல்லை. ஆகவே, அதிகப்படியான நோயாளிகள், சிகிச்சைக்குச் செல்ல வழியில்லாமல் இருப்பதால் கூடிய விரைவில் பெண் டாக்டரை அமர்த்தி, புதிய கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிதாக 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்கான இடத்தைத் தருவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வாரானால் அடுத்த மாதமே வேலைகளை எடுத்துக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் கட்ட அருகாமையிலே இடம் இருக்கிறது.





புதிய கட்டடம் கட்டி, படுக்கை வசதியும் ஏற்படுத்தித் தந்து, பெண் டாக்டரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இருந்தால் புதிய கட்டடம் கட்டி ஆறு படுக்கைகளை அங்கே அமைத்து நோயாளிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்கும். பெண் டாக்டரைப் பற்றிச் சொன்னார்கள். தேர்வாணையத்திலிருந்து இன்னும் பத்து நாட்களிலே பட்டியல் வந்துவிடும். வந்தவுடன் பெண் டாக்டர் அங்கே நியமிக்கப்படுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 702, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**702--**

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

*5560--**திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கீழப்பசளை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசு வரையறையின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 93,866 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகை அடிப்படையில் தற்போது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மக்கள் தொகை

[1997 ஏப்ரல் 28

அடிப்படையில் இவை போதுமானதாக உள்ளதால் கீழப்பசளை கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான அவசியம், சாத்தியக்கூறு எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, கீழப்பசளை கிராமத்தைச் சுற்றி ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற பகுதிகள் கிட்டத்தட்ட பத்து கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள பகுதியில் இருக்கிறது. கீழப்பசளையில் மட்டும் 5000-க்கும் உட்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். இது ஒரு மையமான பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தால் அந்த இடத்தில் இதுவரை ஒரு துணை நிலையம்கூட இல்லாத சூழ்நிலையிருக்கிறது. இதுசம்பந்தமாக 1989-லேயே அரசுக்குப் பரிந்துரையெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அரசு இதுசம்பந்தமாக மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழப்பசளை கிராம மக்கள் தொகை 2734. முத்தியனத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கீழப்பசளை கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் செயல்படுகிறது. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. ஏனென்று சொன்னால், 93,866 மக்கள் கொண்ட மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், துணைக் கேள்வி மூலக் கேள்வியைப் பற்றியதென்றால் கேட்கவிடுகிறேன் என்று. (குறுக்கீடு) அப்படி இல்லையென்றால் கிடையாது.

வினா எண் 703, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 28]

**703--**

## பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்

*6086--**திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கீழ்விளாகம் முதல் இடையாத்தூருக்கு பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போதைக்கு மேற்சொன்ன பகுதியில் தரைப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையாத்தூர் கிராமத்தைச் சுற்றி ஆறுகள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமாகக் கரும்பு பயிரிடப்படுகிறது. மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வரவேண்டுமானால், 7, 8 கிலோ மீட்டர் தூரம் வேறு பாதையில் சுற்றி வரவேண்டிய நிலைமையிருக்கிறது. சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பை அங்கே பயிர் செய்கிறார்கள். அதற்காகவாவது நம்முடைய அரசு இடையாத்தூருக்கும் கீழ்விளாகம் கிராமத்திற்குமிடையே--600 மீட்டர்தான் இருக்கிறது ஆற்றின் குறுக்களவு - அந்த இடத்திலே தரைப்பாலம் அமைத்தால் அந்த கிராம மக்கள் அதிகமாகக் கரும்பை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கின்ற அடிப்படையில் இந்த ஆண்டு இல்லையென்றாலும், அடுத்த ஆண்டாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்று அமைக்க 13-2-1997 அன்று ரூ. 189 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பொன்விளைந்தகளத்தூரிலிருந்து படாளம் சர்க்கரை ஆலை வழியாக உதயம்பாக்கம் செல்கின்ற சாலை. ஆகவே, ரூ. 189 இலட்சம்

[1997 ஏப்ரல் 28

13-2-1997 அன்று அனுமதிக்கப்பட்டு, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுகிறது. உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பாலத்தை அமைக்க வேண்டுமானால் 25 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பில்லை. அடுத்த ஆண்டு வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 704, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**704--**

**விவசாயத்தை மேம்படுத்த கருத்தரங்கங்கள்**

*6289--**திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் பாசன மற்றும் வேளாண்மைத் தொழில் நுட்பக் கருத்தரங்கங்கள் ஏற்பாடு செய்து, அதன் மூலம் விவசாயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆவன செய்யப்படும்.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோபிசெட்டிப்பாளையம் தொகுதி, கொடிபேரி பாசனத்திலும், பவானிசாகர் பாசனத்திலுமாக மேட்டுப்பாங்கான பூமியல்லாத தோட்டக்கால் பூமியோடு சேர்த்து 25 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெற்ற தொகுதியாகும். இன்றைக்கு இருக்கின்ற விஞ்ஞான வளர்ச்சியில் பொறியியலின் மூலம் எத்தனையோ முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். அந்த வகையில் அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு கருத்தரங்கு நடத்தி, அவர்களுக்கு விளக்கம் தந்து, அங்கே வேளாண்மைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் மாதம் ஒருமுறை, தொழில் நுட்பக் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது. அதைப் போலவே, இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, ஒன்றியந்தோறும் அதுபோன்ற தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று அந்தக் கருத்தரங்கை நடத்த வேளாண்மை இயக்குநர் அவர்கள் முயற்சி எடுக்கிறபோது அந்தக் கருத்தரங்கிற்கு வேளாண்மைத் துறை சார்புடைய அனைத்துத் துறை அலுவலர்களும் சென்று தொழில்நுட்பங்களையும், அரசு வழங்கக்கூடிய உதவிகளையும் அந்த விவசாயிகளுக்கு விளக்கிட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு அது இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு முன்னால், பெரியார் மாவட்டத்தில் விவசாயிகள் சார்பிலும், அதேபோல, அரசினுடைய விவசாயப் பொறியியல் துறையின் மூலமும் நீர்ப்பாசனக் கருத்தரங்கு நடைபெற்றது. அங்கே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, அந்தக் கருத்தரங்கை தொடங்கி வைத்துவிட்டு வந்தார்கள். அந்தக் கருத்தரங்கின் மூலம் என்ன ஆய்வு செய்யப்பட்டது, என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது, அரசினுடைய கவனத்திற்கு என்ன வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் நீர் மேலாண்மைக் கருத்தரங்கு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கிலே விவாதிக்கப்பட்டு, விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்து எப்படிப்பட்ட சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள், எப்படி அரசாங்கம் அந்த விவசாயிகளுக்கு உதவிட வேண்டும் என்பதற்கான சில பரிந்துரைகளை அனுப்பினார்கள். அந்தப் பரிந்துரைகள் குறித்து ஆய்வு செய்ய, நம்முடைய வேளாண்மைத் துறைச் செயலாளர், பொறியியல் துறை, மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் ஆகியோரை எல்லாம் கொண்டு சென்னையிலே வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திலே ஒரு கூட்டத்தைக் கூட்டச் சொல்லி, அதில் விவசாயிகளுடைய

பிரதிநிதிகளையும் அழைத்து, அந்தக் கருத்தரங்கிலே எடுக்கப்பட்ட முடிவுகளில் எதையெதை அரசாங்கம் பரிசீலிக்க இயலும் அல்லது இயலாது அல்லது விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, சில சட்ட முறைகள் இடையூறாக இருந்தாலும்கூட, அதை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சொல்லி விவாதிக்கப்பட்டு ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன விஷயங்களில் எப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றி விவரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய விரும்பினால் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 705, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.*

**705--**

### தண்ணீரைத் தேக்கி வைக்க திட்டம்

**612--***திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) சிறுபாசனத் திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் பகுதியில் உள்ள ஏரி, குளங்களில் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காலத்தில் தண்ணீரைத் தேக்கி வைக்க அரசு ஏதேனும் திட்டம் மேற்கொண்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதலூர் பகுதியில் அமைந்திருக்கின்ற ஏரிகள் அனைத்தும் தூர்ந்து போயிருக்கின்றன. அவை அத்தனையையும் தூர் வாரி,





மழை நீரைத் தேக்கினால் பாசனத்திற்கு அவை உதவுவதைப் போல், தஞ்சை போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில், நிலத்தடி நீரை அதிகரிக்கவும் அவை வழிவகை செய்யும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த ஏரிகளை வெட்டித் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை என்பது அல்ல; இதுவரையிலேயும் எங்களுக்குப் பிரச்சினையே வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கிறார்கள். எந்த ஏரிகளைத் தூர் வார வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டு ஏரிகளின் பெயர்களை எழுதிக்கொடுத்தால், அதுகுறித்து அரசு கவனிக்கும்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 130 ஏரிகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த ஆண்டே சில ஏரிகளை வெட்டித் தர வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே மொத்தமிருக்கிற 39,000 ஏரிகளையும் தூர் வாரி, கரைகளை பலப்படுத்தி, பாசனக் கால்வாய்களைச் செப்பனிட வேண்டும் என்பதற்காகத்தான் உலக வங்கியினுடைய கடனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். அதற்காக ஒரு Task Force Committee அமைக்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியிடமிருந்து பணம் பெறுவது குறித்து அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. பொதுப் பணித் துறையினுடைய ஏரிகளைப் பொறுத்தவரையிலே சுமார் 9,000 ஏரிகள் இருக்கின்றன. அதிலே, Tank Modernisation செய்வது போக, ஆண்டாண்டுக்கு அப்போதைக்கப்போது ரிப்பேர் செய்வது போக, இந்த ஆண்டு மேலும் 200 ஏரிகளை எடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே, படிப்படியாக இந்த ஏரிகளைத் தூர் வாருகிற வேலையைச் செய்வோம் என்பதை பல முறை தெரிவித்திருக்கிறேன். அதையே இம்முறையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏரிகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில ஏரிகளை பணிக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து ஏரிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, திருவாரூர்-ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், வடுவூரில் இருக்கின்ற பெரிய ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டும் இல்லாமல், ஒரு சிறப்புத் திட்டமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 10 கோடி ரூபாயை தஞ்சை மாவட்டத்தில் உள்ள கால்வாய்களைச் செப்பனிடுவதற்காகவும், 100 ஏரிகளில் தண்ணீர் தேங்குகிற விதத்திலே அவற்றைச் சீரமைப்பதற்காகவும் தந்திருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஏரி அந்தப் பகுதியிலே அடங்குமானால், அதை எழுதிக் கொடுத்தால், அதிகாரிகளிடம் தெரிவித்து எடுக்க வேண்டிய நிலை இருந்தால், அதை அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், தஞ்சை மாவட்டத்தைப் பற்றித்தான் கேட்கவேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மூலக்கேள்வி சேலம் மாவட்டத்தில் தொடங்கி, தஞ்சைக்குப் போய் இருக்கிற காரணத்தால் இப்போது வேலூருக்குப் போவதற்காக நீங்கள் அனுமதிக்க வேண்டும். காரணம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றித்தான் கேட்க வேண்டும்.

*முற்பகல் 9-45*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. அதுபற்றியே கேட்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கால்வாய்களைச் செப்பனிடுவதற்கான



1997 ஏப்ரல் 28]

நடவடிக்கைகளை எப்படி எடுக்கப் போகிறார்கள் என்று சொன்னார்களோ, அதைப்போல வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கால்வாய்கள் குறிப்பாக, வேலூரிலே ஓடிக்கொண்டிருக்கிற ஆறுகள் அத்தனையும் ஓட்டேரிக்கும், பாலாற்றுக்கும், சதுப்பேரிக்குமாகப் போகக் கூடிய கால்வாய்களெல்லாம் இப்போது அடைபட்டிருக்கின்றன. ஏற்கெனவே சாக்கடை நீரெல்லாம் வீடுகளிலே வந்துவிடக்கூடிய அவலநிலை இருக்கிறது. அவைகளிலே சாக்கடை நீர் போகிற காரணத்தினால், அவைகளை நகராட்சிதான் பராமரிக்க வேண்டுமென்று சொல்லி பொதுப்பணித் துறை அவற்றை கைகழுவி விட்டு விடுகிறது. நகராட்சி ஏற்கெனவே பணமில்லாமல் ஓட்டாண்டி ஆகியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பு நிதியாக ரூ. 3 கோடியை அதற்காக ஒதுக்கி, வேலூருக்குள்ளே ஓடுகிற அத்துணை கானாறுகளையும் தூர் எடுப்பதற்கும், செப்பனிடுவதற்கும் உத்தரவிடுவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை சேலம் மாவட்டத்திலே தொடங்கி, தஞ்சை மாவட்டத்திற்குப் போய், பின்னர் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகின்றேன் என்று சொன்னார்கள். அப்படியல்ல. கேள்வி தஞ்சை மாவட்டத்தில்தான் தொடங்கியிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் அல்ல. இது ஒன்று. அதிலும் குறிப்பாக பூதலூர், தஞ்சாவூர் மாவட்டம் என்று எழுதியிருக்கிறார்கள். இது இரண்டு. மூன்றாவது, சில கால்வாய்களிலே சாக்கடைகள் ஓடுகின்றன என்று சொன்னார்கள். சாக்கடை ஓடுகிற கால்வாய்களெல்லாம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவைகள் அல்ல. பொதுப் பணித் துறைக்கென்று சில கால்வாய்கள் இருக்கின்றன. அவைகள் பாசனக் கால்வாய்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கால்வாயைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்பதை விவரமாக எழுதிக் கொடுத்தால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரேயொரு கேள்விதான் ஒரு உறுப்பினருக்கு. நீங்கள் கேட்ட கேள்விகூட பொருத்தமில்லாத

கேள்வி. அடுத்து, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், நீங்களும் தஞ்சை மாவட்டத்தைப் பற்றித்தான் கேட்க வேண்டும். நம் ஊர்க்காரர் என்பதால் நான் அனுமதிக்க முடியாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி. இப்போது கண்மாய்களைச் சீரமைப்பதற்கும் வாய்க்கால்களைச் செப்பனிடுவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாயை அனுமதித்திருப்பதை ஏ'ரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில், பொதுப் பணித் துறைக் கண்மாய்கள், ரெவின்யூ கண்மாய்கள் போன்ற தமிழகத்திலுள்ள எல்லாக் கண்மாய்களையுமே இன்று பலபேர்கள் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியாமல் இன்றைக்கு அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை எல்லாம் இருந்துகொண்டு வருகிறது. ஆகையினால், ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக போலீசை வைத்தாவது இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இந்த அரசுக்கு இல்லை. பல இடங்களிலே ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே ஆக்கிரமிப்பாளர்கள் கோர்ட்டுக்குச் செல்கிற பிரச்சினை இருக்கிறது. நீதிமன்றத்திலே போய் ஸ்டே ஆர்டர் வாங்கி வந்து விடுகிறார்கள். இதனால் பணிகள் அப்படியே தொய்ந்து போய்விடுகின்றன. சில நேரங்களிலே வாய்தா அதிகமாகப் போட்டு விடுகிறார்கள். கோவையிலே ஒரு இடத்திலே ஒரு சாதாரண விஷயத்திற்கு 9 மாதங்கள் கழித்து வாய்தா போட்டிருக்கிறார்கள். அதுபற்றிக் கேட்டதற்கு நாங்கள் அப்படித்தான் போடுவோம் என்று சொல்லிவிட்டார்கள். என்ன செய்வது, நாங்கள் நீதிமன்றங்களிடமும் போராடிக்கொண்டிருக்கிறோம். வாதாடிக்கொண்டிருக்கிறோம். எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்தேயில்லை. நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே பார்த்தால், பாலாற்றிலே ஆண்டாண்டுக் காலமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த அந்த ஆக்கிரமிப்புகளை மாவட்ட கலெக்டர் அகற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக ஏரிகளிலும், கால்வாய்களிலும் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. அதைப்





பற்றி அரசு தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜாமடம் ஏரி, புறக்கரை ஏரி ஆகியவைகளின் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஏரிகளில் ஏற்கெனவே சில ஆக்கிரமிப்புகள் நடந்திருக்கின்றன. அவற்றை அகற்றினால்தான் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்ய முடியும். இந்த ஏரிகளுக்கு வருகின்ற தண்ணீர் பாசனத்திற்கு உபயோகப்படாமல் கடலிலே போய் வீழ்ந்து விடுகிறது. அந்த ஏரிகளை அகலப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது ஏரி என்றவுடன் அத்தனையும் பொதுப்பணித் துறையின்கீழ் வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுகிறார்கள். ஏரிகளிலே 3 வகைகள் இருக்கின்றன. (1) பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் (2) எக்ஸ் ஜமீன்ஸ் ஏரிகள் (3) பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான ஏரிகள். பல ஏரிகள் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான ஏரிகளாக இருக்கின்றன. அவற்றில் பொதுப்பணித் துறைக்கு எந்தவிதமான வேலையும் கிடையாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஏரிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று தெளிவாக எழுதிக் கொடுத்தால் அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானதா என ஆய்ந்து அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் இந்த ஆண்டு இருநூறு ஏரிகளை எடுத்துக்கொள்வதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். அந்தவகையில், கடும் வறட்சிக்கு இலக்காகியிருக்கும் என்னுடைய கொளத்தூர் தொகுதி போன்ற மிகவும் பின் தங்கியதொகுதிகளுக்கு இவற்றிலே முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 28

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே என்னுடைய மானியக் கோரிக்கையின்போது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அவ்வாறு தெரிவித்திருந்தேன். பொதுவாக, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளை படிப்படியாகச் சீரமைத்து ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தி, அவைகளைச் சீரமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் முதல் கட்டமாக இந்த ஆண்டு 200 ஏரிகளை எடுத்துக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. எந்தெந்த ஏரிகளை எடுத்துக் கொள்வது என்பதற்காக, நானே உட்கார்ந்த இடத்திலேயிருந்து, மாவட்டந்தோறும் உள்ள ஏரிகளில் இன்னின்ன ஏரிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று tick செய்து இருக்கக்கூடும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெறலாம் என்ற அடிப்படையில், ஒருக்கால் அவர்களுடைய தொகுதியில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர்கள் எழுதிக் கொடுத்தால் அது சௌகரியமாக இருக்கும் என்ற காரணத்தால் எல்லா உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதினேன். அக்கறையுள்ள பல உறுப்பினர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். மீதியுள்ளவற்றில் நாங்களே எந்தெந்த ஏரிகளை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம். ஆக, ஒரே ஆண்டில் எல்லாம் முடிந்துவிடாது. ஆனால், படிப்படியாக ஐந்தாண்டுகளுக்குள் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் அத்தனையும் சீரமைக்கப்படும் என்ற உறுதியை மட்டும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 706, திரு. பா. கோபால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**706--**

## தோனிமடுவு நீர்த்தேக்கம் அமைத்தல்

*3936--**திரு. பா. கோபால்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், வக்கம்பட்டி கிராமத்தில் தோனிமடுவு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1997 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்க வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தை அடுத்துள்ள இந்தத் தோனிமடுவு நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வரக்கூடிய கோரிக்கையாகும். நான் அந்த ஒன்றியத்தின் சேர்மனாக இருந்த நேரத்தில்கூட இதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத்தேன். அதற்குப் பிறகு, சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும்கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆகவே, இந்த அணைக்கட்டைக் கட்டுவதன் மூலம், சேலம் மாவட்டத்திலுள்ள கொளத்தூர் ஒன்றியமும் அதனையடுத்துள்ள பெரியார் மாவட்டத்தின் சில பகுதிகளும் பாசன வசதியைப் பெறக்கூடிய ஒரு பெரிய திட்டமாக இது அமையும். இது காடுகள் நிறைந்த பகுதி என்று தட்டிக் கழிக்காமல், வருவாய்த் துறையிடமிருந்து நாம் நிலத்தைப் பெறக்கூடிய சூழ்நிலையும் இருக்கின்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அந்தப் பகுதி பாசன வசதியைப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்கான சாத்தியக்கூறு உண்டா என்பதை முதலில் ஆய்வு செய்து பார்க்கவேண்டும். இன்னும் ஆய்வு நடத்தப்படவில்லை. காரணம் என்னவெனில், அந்த இடம் முழுவதும் வனத் துறைக்குச் சொந்தமானது. அவர்கள் ஆய்வு செய்வதற்கான அனுமதியைக் கொடுக்கவில்லை. முதலில் வனத்

[1997 ஏப்ரல் 28

துறையிடமிருந்து அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி கிடைத்த பிறகு ஆய்வு நடத்தப்பட வேண்டும். அதற்குப் பிறகு Implement செய்வதற்கு feasibility இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொண்டு, அப்படி feasibility இருந்தால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் சரபங்கா என்ற ஆற்றில் ஒரு அணை உள்ளது. அந்த ஆற்றிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிதாக ஒரு வாய்க்காலை அமைத்தால், இரண்டு ஏரிகளில் நீர் நிரப்பி அதன் மூலம் விவசாயிகளுக்குப் பாசன வசதியைச் செய்து கொடுக்க வழிவகை உள்ளது. எனவே, அதை அரசு செய்து கொடுக்குமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், தலைவர் மூலம் அறிய விரும்புகிறேன் என்றுதான் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை எழுதிக் கொடுத்தால், நிலைமை என்ன என்பதைக் கண்டறிந்து அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 707, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**707--**

### இரயில்வே கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்

*189--**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை-ஆலந்தூர் இரயில்வே கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை-ஆலந்தூர் இரயில்வே கடவில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு 2-8-1988-ல் ரூ. 250 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை தொடருகையில், நில உடைமையாளர்களால் உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டதால் பணி நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது தடை உத்தரவு நீக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி வருவாய்த் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலம் கிடைக்கப்பெற்றபின் முறைப்படி ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப்பாதை என்கிற காரணத்தாலும், பல இலட்சக்கணக்கான மக்களுடைய போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்ற காரணத்தாலும், இதை எடுத்துக்கொள்வதற்கு மத்திய அரசு, மாநில அரசிடமிருந்து சில எதிர்பார்ப்புகளுக்காகக் காத்து இருக்கிறது என்று சொன்னதால், இதுகுறித்து அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்களிடம் தெரிவித்தபோது அவர் அதற்குப் பதில் அளிக்கையில், அந்த வழித்தடத்தை மாற்றிக் கொடுத்து, நிலங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கையகப்படுத்தி நிதி ஒதுக்கித் தந்தால் மத்திய அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விரைவுபடுத்தித் தருவார்களா, அந்த வேலையை ஆரம்பிப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு நானும், அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த இடத்திற்கே சென்று பார்வையிட்டு வந்திருக்கிறோம். அதனுடைய அடிப்படையிலேதான் உச்சநீதிமன்றத்திலே போடப்பட்ட

வழக்குகள்கூட சமரசம் செய்யப்பட்டு அவைகள் எல்லாம் இன்று திருப்பி வாங்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, நம் அரசு நிலத்தைக் கையகப்படுத்தி அந்தப் பணியினை விரைவுபடுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றது. விரைவில் பாலம் கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 708, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**708--**

**சென்னை நகரில் ஆட்டோ கட்டணம்**

*3123--**திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை நகரில் ஆட்டோ ஓட்டுநர்கள் மீட்டருக்கு மேல் இரண்டு மடங்கு கட்டணம் கோருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை நகரில் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களில் பயணம் செய்யும் பயணிகளிடமிருந்து இரு மடங்கு பயணக் கட்டணமோ அல்லது மீட்டருக்கு மேல் அதிகக் கட்டணமோ வசூலிக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் மீதான புகார்கள்மீது போக்குவரத்துக் காவல் துறைப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டு அப்படிப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் அந்த ஆட்டோக்களின் உரிமையாளர்கள்மீது அபராதம் விதிக்கப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ஓட்டுநர் உரிமம் தற்சமயம் சென்னை மாநகரத்தில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? இதை



அதிகப்படுத்தினால் இந்த மாதிரியான பிரச்சினைகள் வராதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 35 ஆயிரம் பேர் சென்னை நகரத்தில் மட்டும் ஆட்டோ ஓட்டுநர்களாக இருக்கிறார்கள். இவைகளை அதிகப்படுத்துவதற்கு அவர்கள் உரிய முறையில் விண்ணப்பித்தால் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோ ஓட்டுநர் உரிமத்திற்கு பெண்கள் மனு செய்தால் காலதாமதம் ஆகிறது என்று கூறுகிறார்கள். எனவே, பெண்களுக்கும் உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிந்துரையை அரசு பரிசீலிக்கும். நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் குறிப்பிட்டு இருப்பதைப் போல, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கிற ஆட்டோ ஓட்டுநர்கள்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் கூப்பிட்டால் இரண்டு மடங்குக் கட்டணம் கேட்கிறார்கள். ஆகவே, அரசு இதைப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இதுபோன்ற பிரச்சினைகளைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நேரடியாக ஆட்டோ ஓட்டுநர்களை நானும், இத்துறையைச் சார்ந்த அதிகாரிகளும் சந்தித்து அவர்களிடம் கோரிக்கை, வேண்டுகோள் எல்லாம்கூட கொடுத்து அது பத்திரிகைகளிலும் வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்கள். அதுபோன்று எந்த ஆட்டோ ஓட்டுநராவது சட்டமன்ற உறுப்பினர்களிடம் கூடுதல் கட்டணம் கேட்கிறார்கள்

என்று சொன்னால், அந்த ஆட்டோவினுடைய எண்ணையும், ஓட்டுநருடைய பெயரையும் உடனடியாக எனக்குத் தெரிவித்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோவிற்கு எஃப்.சி. கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று பரவலாக ஒரு புகார் இருக்கிறது. எனவே, இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஆட்டோக்களுக்குரிய ஆவணங்களைக் கொடுத்தால் உடனடியாக அவர்களுக்கு எஃப்.சி. கொடுக்க வேண்டுமென்று அரசு விதிகளில் கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரத்திலே பணியாற்றுகிற வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அனைவரையும் அழைத்துப் பேசி இருக்கிறோம். ஆகவே, இதுபோன்று குறிப்பிட்ட நபர்களிடமிருந்து ஏதேனும் புகார்கள் வரும் என்று சொன்னால், நிச்சயமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வியில் சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய பிரச்சினைபற்றி கேட்கப்பட்டு இருக்கின்றது. எனக்கு இருக்கிற அனுபவம் என்னவென்றால், சில நேரங்களில் ரயிலில் இருந்து இறங்கியவுடன் பஸ் இருக்காது. சென்ட்ரலில் இருந்து தலைமைச் செயலகம் வருவதற்கு 25 ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கிறது. கொடுக்கவில்லை என்றால் சரியான நேரத்தில் வந்து சேர முடியாது. எனவே, இதை ஒழுங்குபடுத்த வேண்டும். சமீபத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் என்னவென்றால், நியூ ஹாஸ்டலில் இருந்து தலைமைச் செயலகம் வரவேண்டி இருந்தது; முதலில் அவர்கள் வரமாட்டேன் என்று சொன்னார்கள். பிறகு 20 ரூபாய் கொடுத்தால் வருகிறேன் என்று கூறினார்கள். இது இங்கு மட்டுமல்ல, மாநிலம் முழுவதிலும் இருக்கக்கூடிய ஒரு கொடுமையாகும். அண்டை



மாநிலமான கேரளாவில் ஆட்டோ ஓட்டுநர்கள் மீட்டருக்கு மேல் ஒரு காசுகூட வாங்குவதில்லை. இதை நாம் முறைப்படுத்துவதற்கு, ஒரு வலுவான நடவடிக்கையை, ஒரு உறுதியான நடவடிக்கையை அரசு எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17-7-1996-ல் நான் அனைத்து ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளை எல்லாம் அழைத்துப் பேசி இருக்கிறேன். அவர்கள் எல்லாம் ஒரு ஒப்புதலை அளித்த பிறகுதான் ஆட்டோவினுடைய குறைந்த கட்டணம்கூட உயர்த்தப்பட்டது. அவர்கள் உறுதியாகச் சொன்னார்கள். இனிமேல் நாங்கள் யாரிடமும் இரட்டைக் கட்டணத்தைக் கேட்கமாட்டோம், அழைத்தால் உடனே செல்கிறோம் என்றெல்லாம் உறுதிமொழியைச் சொன்னதற்குப் பிறகுதான் கட்டணம் உயர்த்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, இன்னும் பல இடங்களில் இது நடைமுறையில் இருப்பதை நானும் நன்கு அறிவேன். நானே அமைச்சராக இல்லாத கடந்த 5 ஆண்டுகளில்கூட இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு உள்ளானவன்தான். ஆகவேதான் அந்த உணர்வோடு அவர்களிடம் சொல்லி, செய்யவேண்டுமென்றோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஆட்டோ ஓட்டுநர்கள் பல்வேறு ஆட்டோ சங்கங்களைச் சார்ந்திருப்பார்கள். அந்தச் சங்கத் தலைவர்களிடம் இவைகளையெல்லாம் அறிவுறுத்துவதன் மூலமாகச் சரி செய்யலாம். சட்டத்தின் மூலமாகத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், பல்வேறு ஆட்டோ ஓட்டுநர்கள் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குவார்கள். இந்தக் காரணத்தினால்தான் இதைச் சிறிது விட்டுப் பிடிக்கலாம் என்ற நிலையில் அரசு அவர்களோடு பல முறை பேசியிருக்கிறது. தொடர்ந்து இந்த முறையிலேயே அவர்கள் செய்வார்கள் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கூறிய கருத்துக்களைக்கூட அவர்கள் செய்திகளிலே படித்துப் பார்த்து, தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் வருங்காலங்களில் கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 28

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, the same thing is happening everywhere. The rates have been fixed by the Auto drivers. Only if we pay they ply. This is true. It has become a menace not only for M.L.As but also for the general public. They are not at all bothered even if we mention that we are MLAs. The common people are suffering much. Therefore, I request the Hon. Minister to do something for this, because people from other States are......

**MR. SPEAKER:** What is your question? You are giving a lecture. Please tell us what your question is?

**THIRU B. VENKATASAMY:** I request the Hon. Minister to see that only prescribed meter rates are collected by the Auto drivers.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளோடும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளோடும், தலைமைச் செயலர் முன்னிலையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதிலே, ஒரு முறை தவறு செய்கிற ஆட்டோ ஓட்டுநர்களை மன்னித்து விடுவது என்றும், இரண்டாவது முறையாகத் தவறு செய்தால் எச்சரித்து விடுவது என்றும், மூன்றாவது முறையாகத் தவறு செய்தால் அவர்களுடைய அங்கீகாரத்தையே ரத்து செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவர்களிடம் சொல்லிப் பார்த்திருக்கிறோம். அவர்கள் திருந்தாவிட்டால் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இந்த அவையின் மூலமாக வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோக்களுக்குச் செல்கின்றவர்களிடம் அதிகமாகக் கட்டணம் கேட்கின்ற ஒரு குறைபாடு இருக்கின்ற அதே சூழ்நிலையில் வேறொரு குறைபாடும் இருக்கிறது. இந்த



1997 ஏப்ரல் 28]

ஆட்டோக்களிலே தனித்தனி இடங்களுக்குச் செல்கிறபோது இது தெரிவதில்லை. ஒரே இடத்திற்கு இரண்டு ஆட்டோக்களிலே செல்கின்றபோது, மீட்டர் கட்டணம் ஒரு ஆட்டோவிலே குறைவாக இருக்கிறது; மற்றொரு ஆட்டோவிலே அதிகமாக இருக்கிறது. இப்படி மீட்டர் கருவியிலேயே சில கோளாறுகள் பல ஆட்டோக்களிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்கின்ற பொறுப்பு யாருக்கு இருக்கிறது? அதைக் கண்காணித்து, தடுத்து நிறுத்துகிற நிலைமையை அரசு செய்து தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோக்களிலே பொருத்துகிற மீட்டர்களைப் பழுதுபார்ப்பதற்கென்று அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்ற சில கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளிலே அனுமதி பெற்ற மீட்டர்களைத்தான் ஆட்டோக்களிலே பொருத்த வேண்டும். அவர்கள் மூலமாக, வேகமாக ஓடுகின்ற அளவுக்கு மீட்டர்களை அட்ஜஸ்ட் செய்துகொள்கிறார்கள். அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்ற கடைக்காரர்களையும் இந்த அரசு அழைத்துப் பேசியிருக்கிறது. நானே நேரில் பேசியிருக்கிறேன். நீங்கள் இவ்வாறு மீட்டர்களைப் பொருத்துகிறபோது தவறு செய்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், உங்களுக்கு மீட்டர் பழுதுபார்ப்பதற்காக அளிக்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படும் என்று அவர்களுக்கும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் அவ்வாறு செய்வதில்லை என்று உறுதியளித்துவிட்டுத்தான் சென்றார்கள். எனினும் உரிமம் பெறாத சில பேர் மீட்டர்களைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான், மிகக் குறைந்த சதவிகித ஆட்டோக்களிலே இதுபோன்ற பழுதுள்ள மீட்டர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவைகளையும் கண்டுபிடித்து அப்படிச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதைப் போல, இதனைச் செய்வதால் ஏற்படுகிற சில சிக்கல்களை மனதிலே கொண்டு, திருத்தப் பார்த்திருக்கிறோம்; முடியாவிட்டால்-- மீண்டும் சொல்கிறேன்-- அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை நான் நாகூரிலிருந்து புறப்பட்டு சென்னை, மவுண்ட்

[1997 ஏப்ரல் 28

ரோட்டில் (குறுக்கீடு) மன்னிக்கவும். அண்ணா சாலையில் காமராசர் மாளிகை முன்பு இறங்கி, வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள எனது இல்லத்திற்குச் செல்வதற்காக தொடர்ந்து 10 ஆட்டோக்களையாவது நிறுத்தியிருப்பேன். அந்த இடத்திற்குச் செல்வதற்கு கட்டணம் அதிகபட்சம் 7 ரூபாய் ஆகும். ஆனால் அனைவரும் 30 ரூபாய் தாருங்கள், 30 ரூபாய் தாருங்கள் என்று கேட்டு, வருவதற்கு மறுத்து விட்டார்கள். இருமடங்கு மீட்டர் சார்ஜ் தருகிறேன் என்று கேட்டும் மறுத்துவிட்டார்கள். இறுதியாக ஒரு ஆட்டோவில் ஏறிச்சென்று, நான் இவ்வளவுதான் கட்டணம் தர முடியும் என்று மறுத்தும், என்னிடமிருந்து பிடிவாதமாக 30 ரூபாய் கேட்டு பிறகு 20 ரூபாய் கேட்டு 17 ரூபாயை வாங்கிக் கொண்டு, உங்களால் முடிந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். இது குறித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு தகராறு நடந்ததாகச் சொல்கிறீர்களே? ஆட்டோ நம்பரை நோட் பண்ணியிருக்கிறீர்களா?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஆட்டோ நம்பர் என்னிடம் இருக்கிறது.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அமைச்சரிடம் கொடுங்கள். அதற்கு ஏன் கேள்வி?

வினா எண் 709, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**709--**

**மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமலாக்குதல்**

*4895--**திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத் தமிழ்நாட்டில் அமலாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய திட்டக்குழு தயாரித்துள்ள மாதிரி கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் சிறப்பான தன்னாட்சிச் சங்கங்களை ஆரம்பிக்கும் வகையில் ஒரு புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தன்னாட்சிச் சங்கங்கள் என்றால் அரசின் பங்குத் தொகையோ, அரசு அதிகாரிகளோ இல்லாமல் கிராமப்புறங்களில் இருக்கிறவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு தன்னாட்சிச் சங்கங்களை உருவாக்குவதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1903–ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தை மத்திய நாடாளுமன்றத்திலே அறிமுகப்படுத்திப் பேசியவர்கள் கூட்டுறவுச் சட்டத்தினுடைய மெய்யான சாரத்தைப் பற்றித் தெளிவாக விளக்கியிருக்கின்றார்கள். ஆனால், கடந்த 70, 80 ஆண்டு கால அனுபவம் என்பது, எந்த நோக்கத்திற்காகக் கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டதோ அந்த நோக்கம் முற்றிலும் அழிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். எனவேதான், கூட்டுறவு இயக்கத்தினுடைய வரலாற்றில், தேவையை நிறைவு செய்வதற்காகவேதான் இந்த 'மாடல் ஆக்ட்' என்பது மத்திய திட்டக் குழுவால் முன்மொழியப்பட்டிருக்கிறது. எனவே, அந்த 'மாடல் ஆக்ட்'-ஐ அப்படியே ஏற்று சட்டமாக்குவதற்கு--ஆந்திர மாநிலத்திலேகூட அப்படிச் சட்டம் ஆக்கியிருக்கிறார்கள்-- நமது அரசும் மத்திய திட்டக் குழு முன்மொழிந்துள்ள அதே அடிப்படையிலேயே இந்த 'ஆக்ட்'-ஐக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசானது சிறந்த கூட்டுறவாளராகிய பிரஹ்ம் பிரகாஷ் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு தயாரித்தளித்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை ஏற்று மாநில அரசுகளுக்கும் பரிந்துரை செய்தது. மாதிரி கூட்டுறவுச் சட்டத்தின் ஒரு சில கூறுகளை ஒரிசா, மத்தியப் பிரதேசம்,

[1997 ஏப்ரல் 28

உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் தங்களுடைய மாநிலச் சட்டத்தில் சேர்த்துக் கொண்டன. அவற்றை ஆய்வு செய்தபோது மத்திய அரசு சொன்ன அனைத்து கோரிக்கைகளும் அவற்றால் ஏற்கப்படவில்லை. எனவே, அந்தச் சங்கங்களும் சரியாக இல்லையென்று முடிவெடுத்து, நாமே தனியாக ஒரு குழுவை அமைத்து, மற்ற எந்த மாநிலங்களில், மத்திய அரசு அறிவித்த சட்டத்தை ஏற்றிருக்கிறார்கள் என்பது பரிசீலிக்கப்பட்டது. ஆந்திராவிலே 292 சங்கங்கள் 'மாடல் ஆக்ட்' -ன் கீழ் பதிவு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூடியவிரைவிலே ஆந்திர அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி, அவற்றை அறிந்து, தமிழ்நாட்டிலேயும் தன்னாட்சிச் சங்கங்களை உருவாக்கக்கூடிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 710, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**710--**

**குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றுதல்**

*7487--**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றி அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 711, திரு. எஸ். டேவிட் செல்வின், திரு. ஜி. பழனிசாமி, திரு. இ. புகழேந்தி,



1997 ஏப்ரல் 28]

திரு. டி. மணி மற்றும் திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**711--**

**சிறைக்காவலர்களுக்குப் பணி நேரம் முறைப்படுத்துதல்**

*1093--**திரு. எஸ். டேவிட் செல்வின் :**
**திரு. ஜி. பழனிசாமி :**
**திரு. இ. புகழேந்தி :**
**திரு. டி. மணி :**
**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாளொன்றுக்கு 18 மணி நேரம் பணிபுரியும் இரண்டாம் நிலை சிறைக்காவலர்களின் பணி நேரம் 8 மணி நேரம் என முறைப்படுத்தப்படுமா?

(ஆ) இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு காவல் துறை போன்ற பதவி உயர்வு கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம்

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த பதிலின்படி, ஏற்கெனவே தீர்ப்பாயத்தில் அவர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வந்தாலும், ஜெயலலிதா ஆட்சியில் ஒரு அரசாணை மட்டும் பிறப்பிக்கப்பட்டு, இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. எனவே, அவர்களெல்லாம் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் நம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் கலைஞர் என்று சொல்லுங்கள்.

[1997 ஏப்ரல் 28

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் எல்லாம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை நம்பியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டாம் நிலைக் காவலர்களுடைய 8 மணி நேர வேலையைப் பொறுத்தது. அவர்களுடைய பதவி உயர்வையும் பொறுத்தது. ஏற்கெனவே சிறைத் துறையில் இரண்டாம் நிலைக் காவலர்கள் 2,400 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு முதல் நிலைக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு, 356 இடங்கள்தான் இருக்கின்றன. அந்த இடங்கள் போதாது என்று கருதி, மேலும் 100 இடங்கள் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களிலேயிருந்து, மேலும் 'சீஃப் வாடர்' என்ற பதவி உயர்வும் அளிக்கப்படுகிறது. எனவே, அவர்களுடைய பணியும் பதவி உயர்வும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுடைய பணி நேரமென்பது, 18 மணி நேரம் ஆகும். அந்த 18 மணி நேரப் பணியானது 8 மணி நேரமாகக் குறைக்கப்படுமா என்பது பற்றி அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் இல்லை. இதுபோன்று, சிறைக் காவலர்கள் 18 மணி நேரம் பணியில் இருப்பதால், சிறைக் கைதிகள் தப்பிப்பதற்கு வாய்ப்பாகவும் அமைந்து விடுகின்றது. உண்மையாக, சிறைக் கைதிகளாகவே அந்தக் காவலர்கள் இருக்கின்ற நிலையிலிருந்து அவர்களை விடுவிக்கின்ற வகையில் அவர்களது பணி நேரம் 8 மணி என்று அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று, 18 மணி நேர வேலை யாருக்கும் கொடுக்கப்படவில்லை. ஆனால், 16 மணி நேர வேலை, கடந்த காலத்திலே கொடுக்கப்பட்டது என்ற உண்மையை நான் ஒப்புக் கொள்கிறேன். இவற்றையெல்லாம் மாற்றி, 8 மணி நேரம்தான் எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை, இந்த அரசு ஏற்றிருக்கிறது. ஏற்கெனவே 8 மணி நேர வேலை என்ற கொள்கை முதலில் சேலம், மத்திய சிறைச்சாலையிலே இருந்தது. அதற்குப் பிறகு, முதற்கட்டமாக, சென்னை, மதுரை, இரண்டாவது கட்டமாக, கோவை, வேலூர் இவற்றிலே அமலாக்குவதற்கு 303 பேரைத் தேர்வு செய்வதற்கான தேர்வுகள் எல்லாம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்தத் திட்டத்தை மற்ற சிறைகளுக்கும் விரிவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மூன்றாவது கட்டமாக, கடலூர், திருச்சி ஆகிய சிறைச்சாலைகளுக்கும் இன்னும் 'வாட்ச் டவர்' என்று சொல்லப்படுகிற 'கண்காணிப்புப் பரண்'களுக்கும், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 8 மணி நேர வேலை என்ற அடிப்படையில், மூன்றாவது கட்டத்திற்கு 236 பேரையும், 'கண்காணிப்புப் பரண்' களுக்கு 196 பேரையும் ஆக, 8 மணி நேர வேலை என்ற திட்டத்தின்கீழ், மொத்தம் இப்போது 735 பேரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்வு செய்ய இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள சிறைகளில் அடுத்த கட்டமாக, நான்காவது கட்டமாக, 8 மணி நேர வேலை என்ற திட்டம் அமல் செய்யப்படும் என்பதையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலைக் காவலர்களாக 2400 பேர்கள் இருப்பதில், அவர்களுக்கு முதல் நிலை பதவி உயர்வு அளிக்க 356 இடங்கள் உள்ளன. அதைத் தொடர்ந்து மொத்தம் 456 பேரை தேர்வு செய்ய இருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்த 456 பேரையும் எடுக்கிறபோது, அவர்களின் தேர்வுக்கான தகுதிகள் என்ன என்பதையும், மூன்றாவது கட்டமாக, 8 மணி நேரப் பணி என்பது கடலூர், திருச்சி ஆகிய சிறைச்சாலைகளில் பணிபுரியும் காவலர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும், அது அமல்படுத்தப்படும் என்றார்கள். அந்த மூன்றாவது கட்டப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவி உயர்வுக்கான இடம்-- மொத்தம், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு 2400. இவர்களுக்கு பதவி உயர்வுக்கான

[1997 ஏப்ரல் 28

இடம்-- ஏற்கெனவே இருப்பது, 356. இப்போது, அவர்கள் அந்த இடத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அது போதாது என்று 100 பேர் புதிதாக இப்போது தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுக்கென்று தேர்வு இருக்கிறது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் பணி செய்ய வேண்டுமென்று இருக்கிறது. குறைந்தபட்சம் 20 ஆண்டு காலம், அவர்கள் பணி செய்ய வேண்டும். அதற்குப் பிறகு, அவர்கள் தேர்வு எழுதி, அதிலே வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் அவர்கள் முதல்நிலைக்கு உயர்த்தப்படுவார்கள். கடலூர் சிறைக்கு மூன்றாவது கட்டமாக, இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்வதற்கு இப்போது அரசாங்கம் ஆணை பிறப்பிக்க இருக்கிறது. ஜூலை மாதத்திற்குள் அந்தப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 8 மணி நேர வேலை என்பது, படிப்படியாக ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல், 'சப்-ஜெயில்'--இந்தத் துறையிலே கீழே இருக்கிற 'சப்-ஜெயில்'-இலேகூட,--அதே அடிப்படையில், 8 மணி நேர வேலை என்று அரசு முறைப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் நிலைக் காவலர்கள் என்பது, மத்திய சிறை, கிளைச் சிறை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தற்போது கடைப்பிடித்து வருகிற இந்தச் சிறை சட்டம் என்பது, மிகப் பழைய ஒரு சட்டம். குறிப்பாகக் கைதிகளை அணுகும் முறைகளில் அடிப்படையான வேறுபாடுகள் வந்திருக்கின்ற இன்றைய நிலையில், மத்திய மனித உரிமைக் கமிஷன், மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது; அதாவது எல்லா மாநிலங்களிலேயும் சிறைச் சட்டத்தை காலத்திற்கு



1997 ஏப்ரல் 28]

ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டுமென்றும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய மாநில அரசும், மாநில அதிகார எல்லைக்குள் வருகிற இந்தச் சிறைச்சாலைகளில், ஒரு புதிய சிறைச் சட்டத்தின்மூலம் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான முன்மொழிவை, முன்மொழியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் தலைமையிலான தேசிய மனித உரிமைக் கமிஷனிடமிருந்து, சிறைச்சாலைகள் சீர்திருத்தம் பற்றிய ஒரு சட்டமுன்வடிவு, மாதிரி முன்வடிவு, எல்லா மாநில அரசுகளுக்கும் அனுப்பப்பட்டது. அதுபற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்து அடுத்த முடிவின்படி, அதிலே இருக்கிற நல்ல அம்சங்களை நாம் ஏற்றுக் கொள்ளலாம். தேசிய அளவிலே இதற்கு ஒரு சட்டம் தேவையில்லை. தேசிய அளவிலே அந்தச் சட்டத்தை அனுமதித்தால், அது மாநில அரசின் அதிகாரத்திற்குள்ளே செல்வதற்கு அனுமதித்ததாகிவிடும். நம்முடைய சுயாட்சிக்குப் பங்கம் விளைவித்துவிடும், எனவே இதிலிருக்கும் நல்ல அம்சங்களை நாங்களே ஏற்று எங்களுடைய சிறையிலே சீர்திருத்தம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று நாங்கள் தேசிய மனித உரிமைக் கமிஷனுக்குத் தெரிவித்திருக்கிறோம். அதனடிப்படையிலே எதிர்காலத்தில் இந்த அரசு, சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வரவிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, a small deviation from the main question. But it is connected with the question only Sir.

**MR. SPEAKER:** How is it connected?

**Dr. Kanchana Kamalanathan:** Mr. Speaker, Sir, I am coming to the question. நேற்று இரவு விஜய் டி.வி. பேட்டியில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சிறையில் இருந்தபோது அவருக்குச் சாப்பிடுவதற்கு அலுமினியத் தட்டு, தண்ணீர் குடிப்பதற்கு

[1997 ஏப்ரல் 28

அலுமினியக் குவளை கொடுத்ததாகச் சொன்னார்களே, அது உண்மையா? அதுவும் அல்லாமல், அவர் சிறையில் இருந்தபோது அவருடைய வீட்டிலிருந்து வந்த உணவே தரப்படவில்லையென்றும், சிறையில் கொடுக்கப்பட்ட உணவைத்தான் அந்த அம்மையார் சாப்பிட்டதாகவும், அடுக்கடுக்கான உண்மைக்குப் புறம்பான விஷயங்களைச் சொல்லிக் கொண்டே வந்தார்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதுகுறித்து உண்மையான நிலையை விளக்குவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் ஜெயலலிதா சொன்னது எல்லாம் உண்மை என்பது போலவும், இதுமாத்திரம்தான் உண்மை அல்ல என்பதைப் போலவும் உறுப்பினர் கேட்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் .சொல்வது எல்லாமே உண்மைக்கு அப்பாற்பட்டவைகள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 712, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**712--**

**பள்ளிப்பட்டில் நீதிமன்றம் அமைத்தல்**

*3924*--டாக்டர் **இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எம்.ஜி.ஆர். மாவட்டம், வட்டத் தலைமையிடமான பள்ளிப்பட்டில் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துறையிலிருந்து தரப்பட்ட விடையில் 'இல்லை' என்று தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விடை 'ஆமாம்' என்று இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 713, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 28]

**713--**

**கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் சில்லறை விற்பனை**

*4578*--**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் சில்லறை விற்பனை செய்வதற்கு ஏதேனும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யக்கூடிய கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. அப்படித் தள்ளுபடி மானியம் வழங்குவதில் சில வரையறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் 500 ரூபாய்க்கு மேல் துணி வாங்கினால் தள்ளுபடி மானியம் தரப்படுவதில்லை. 500 ரூபாய்க்கு மேல் பில் போடக்கூடாது என்று சொல்லப்படுகிற நிலைமையிருப்பதால், அந்த வரையறையின் அடிப்படையிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதைமாற்றி மொத்த வியாபாரத்திற்குத் தள்ளுபடி மானியம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். அதேபோல துணியின் விலை அதிகரித்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் ஒருவருக்கு 500 ரூபாய் வரை மட்டுமே தள்ளுபடி மானியம் என்று வழங்குவதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிக்கு அதிக அளவு 100 ரூபாய் என்றும், சதவிகிதக் கணக்கிலே 20% என்றும், பட்டு ஜவுளிக்கு

அதிகபட்சம் 200 ரூபாய் என்றும், சதவிகிதக் கணக்கிலே 20 சதவிகிதம் என்றும் இருக்கிறது. 200 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்ற நியதி பழைய கணக்கு. 1996-97-ஆம் ஆண்டுக்கு ரூ. 40 கோடியே 85 இலட்சத்து 55 ஆயிரத்துக்கு மேல், 2 கோடி ரூபாயை நலிவடைந்த சங்கங்களைக் கண்டறிந்து ஆய்ந்து கொடுப்பது என்ற முடிவு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலின்பேரில் எடுக்கப்பட்டுள்ளது. சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாயை கூட்டுறவுச் சங்கங்களிலே தவறான வழிமுறைகளிலே பயன்படுத்துகிற காரணத்தினால் எதிர்காலத்தில் சஸ்பென்ஸ் அக்கவுண்ட் வைக்காத அளவுக்கு அன்றாடம் தங்களுடைய கணக்குகளை முடித்து வங்கிகளிலே கணக்குகளைச் செலுத்துகிற பணி கடைப்பிடிக்கப்படும். கடந்த ஆண்டு கொடுத்ததைப் போன்ற இந்த ஆண்டும், 41 கோடி ரூபாய் அளவிலே ரிபேட் அளிக்கின்ற முறை உண்டு என்பதையும் இதிலே சஸ்பென்ஸ் அக்கவுண்ட் இல்லாமல், முறைகேடு நடைபெறவிடாமல் தொடர்ந்து அந்த ரொக்கத்தை வங்கிக்கு செலுத்துகிற முறையிலே 'Fool-Proof Method'-ஐக் கடைப்பிடிக்க இந்த ஆண்டு சில உத்தரவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், விரைவிலே அது கடைப்பிடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களின் விற்பனையில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றும், சரக்குகள் விற்றதைப்போல போலிக் கணக்குகளை எழுதி அரசு வழங்கும் தள்ளுபடி மானியத்தை முறைகேடாகப் பெறுகிறார்கள் என்றும் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இதற்கு ஒரு முடிவு காணும் வகையில் முதல் கட்டமாக சங்கங்களினுடைய அன்றைய ஆரம்ப, முடிவு சரக்கு இருப்புக் கணக்கை—Opening and Closing Stock-தினந்தோறும் சம்பந்தப்பட்ட துறையின் உதவி இயக்குநருக்குக் கட்டாயமாக அனுப்பி வைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதல்வர் அவர்களுடைய ஒப்புதலின் பேரில் 10 சதவிகிதம் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் என்ற வகையிலேயே சஸ்பென்ஸ் அக்கவுண்ட் 11 கோடியே 52 லட்சம் ரூபாய்க்குக் கண்டுபிடிக்கப்பட்டு இதுவரை 8 கோடி ரூபாய் உள்ளே செலுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்த சங்கங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, தேவையான சங்கங்களுக்கு அதை வழங்குகின்ற பணியும், தேவையற்ற சங்கங்களுக்கு அதைக் குறைக்கின்ற பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி மானியம் குறைந்தபட்சம் 100 ரூபாய் என்றும், 200 ரூபாய் என்றும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அதிலேதான் முறைகேடுகளே நடைபெறுகின்றன. அதை மாற்றி அமைப்பதற்கும் ஒட்டுமொத்த வியாபாரத்திற்கு மானியம் கொடுப்பதற்கும், 20 சதவிகிதம் என்பதை கொஞ்சம் குறைத்துக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமானால் இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க முடியும். அதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையொட்டித்தான் எதிர்காலத்திலே சஸ்பென்ஸ் அக்கவுண்ட்டே கூட்டுறவுச் சங்கங்களில் வராத அளவுக்கு வழிமுறைகளைக் கையாளுகின்ற புரசீஜரை வகுக்க நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறைகள் முடிந்தவுடன் உடனடியாக, தெளிவான ஒரு உத்தரவின் மூலம் தெரிவிக்கப்படவிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 714, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 28

**714--**

**பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச மனைப்பட்டா**

*4770--**திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் இலவச மனைப்பட்டா வேண்டி விண்ணப்பித்து காத்திருக்கும் மிகவும் பிற்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) மனைப்பட்டா பெற்றவர்களுக்கு வீடுகட்டிக்கொள்ள அரசு கடன் உதவி வழங்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் 2976 மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவர்கள் இலவச வீட்டுமனைப்பட்டா வேண்டி விண்ணப்பித்துக் காத்திருக்கின்றனர்.

(ஆ) மனைப்பட்டா பெற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள அரசு கடன் உதவி வழங்க திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை. திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குகின்ற பொறுப்பு ஆதிதிராவிடர் நலத் துறை வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் நலத் துறையையும் அவர்கள்தான் கவனிக்கிறார்கள்; பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையையும் அவர்கள்தான் கவனிக்கிறார்கள். இதனால் யாருக்குமே சரியான முறையில் அவர்களால் பணியாற்ற முடியவில்லை. எனவே வட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோருக்கு எனத் தனியாக வட்டாட்சியரை நியமித்து வீட்டுமனைப்பட்டா வழங்குவதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலமாக ஜே.வி.வி.டி. திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதிலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்கீடு கிடைக்கின்ற வகையில் அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகக் கொள்கை முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான விடை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, அவர்கள் அறிவிக்கின்றபடிதான் அறிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 715, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**715--**

**சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் திறத்தல்**

*3697--**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், தெற்குப்பட்டு கிராமத்தில் மூடப்பட்டுள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*1997 ஏப்ரல் 28*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், தெற்குப்பட்டு கிராமத்தில் மூடப்பட்டுள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. திருப்பத்தூர் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசால் லாபகரமாக நடத்த இயலாத காரணத்தால், இதனை பகிரங்க டெண்டர் முறையில் தனியாருக்கு குத்தகைக்குவிட முன்பு முடிவு செய்யப்பட்டது. ஆனால் வேலூர் சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன், நாட்ராம்பள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஆர். மகேந்திரன் மற்றும் பலர் இந்த மன்றத்திலே வைத்த வேண்டுகோளின் பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைக்கு இணங்க, இவ்வாலையை மீண்டும் திறந்து அரசே நடத்துவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், தெற்குப்பட்டு என்ற இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட சந்தன எண்ணெய் தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்ற நிலையை நாங்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லி, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. ஆனால், ஏற்கெனவே திருப்பத்தூர் டெப்போவில், நம்முடைய அரசு கணக்குப்படி ரூ. 68 கோடிக்கு சந்தன மரக் கிடங்கில், நாம் மரங்களை இழந்திருக்கிறோம். மற்றொரு கிடங்கிலேகூட நிறைய மரங்கள் இருந்திருக்கின்றன. இதனால் நமக்கு நட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நட்டம் ஏற்பட்டிருந்தாலும் கூட, நமக்கு இருக்கக்கூடிய இயற்கை வளத்தை, அந்த வசதியை நாம் வைத்துக்கொண்டு மேலும் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற வகையில் பணியினைத் தொடர்ந்திடவேண்டும். மேலும் எப்போது அந்த ஆலை திறக்கப்படும்? இன்னும் ஒரு வார காலத்திற்குள் திறக்கப்படுமா? காரணம் 10 மாதங்களுக்கு முன்பே திறக்கப்படும் என்று சொல்லப்பட்டது, ஆனால் இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றது.



*1997 ஏப்ரல் 28*]

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலை ஒரு வாரத்திற்குள்ளோ அல்லது 10 நாட்களுக்குள்ளோ திறக்கப்படும் என்கிற அறிவிப்பினை அறிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உறுதி மொழிக் குழுத் தலைவர் மாதிரியே கேள்விகளையெல்லாம் கேட்கக்கூடாது. அமைச்சர் பதில் சொல்கிறபோது, முதலிலே 'இல்லை' என்று சொன்னார். பிறகு நீங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு திறப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார். பிறகு 'எப்போது' என்று அடுத்த கேள்வியைக் கேட்டால் எப்படி? காலவரம்பு எல்லாம் சொல்ல முடியாது. அமைச்சர் அவர்கள், இந்தக் கேள்விக்கு பதில் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலையில் பழுது பார்க்கும் பணிகள் எல்லாம் முடிந்து, மே மாதத்தில் ஏதாவது ஒரு நாளில் ஆலை திறக்கப்படும் என்கிற நல்ல செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 716, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**716--**

**சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்துதல்**

*3853--**திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தண்டராம்பட்டு தொகுதியில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 28

தண்டராம்பட்டு தொகுதியில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் கல்வராயன் மலை மற்றும் சேராப்பட்டு மலைத் தொடர்ச்சி பகுதிகளில் உள்ள சுவாமி மலை, வலசமலை போன்ற பகுதிகளில் ஏராளமான சந்தன மரங்கள் விளைகின்றன. அவைகளில் காய்ந்து எரிந்து போகும் மரங்களையும் மற்றும் கடத்தல் மரங்களையும் சேர்த்து--என்னுடைய தண்டராம்பட்டு தொகுதியில் ஒரு தொழிற்சாலையும் இல்லாததால், படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையிலோ அல்லது அரசுக்கு இலாபம் பெறுகின்ற வகையிலோ--அங்கு சந்தன எண்ணெய் தொழிற்சாலையினை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன ஆலையில் ஏராளமான பேர்களுக்கு வேலை கொடுக்க முடியாது. ஒரு கோடி ரூபாய் செலவு செய்து, ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தாலும் 10 அல்லது 15 பேர்களுக்கு மட்டுமே வேலை கொடுக்க முடியும். ஆகவே, தெற்குப்பட்டில் உள்ள தொழிற்சாலையினுடைய ஓட்டத்தை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 717, திரு. இ. கணேசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**717--**

### சிறு தொழில் கடன் வழங்குதல்

*5818--**திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பூலாம்பட்டி என்ற பகுதியில் செயற்கை வைரங்களைப் பட்டை தீட்டும் தொழில் முனைவோருக்கு சிறுதொழில் கடன் வழங்க அரசு முன்வருமா?



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எடப்பாடி தொகுதியில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில் ஏதும் நடைபெறவில்லை. அப்படி, அந்தத் தொழிலைத் தொடங்க முன்வந்தால், சேலம் மாவட்டத் தொழில் மையம், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும். அவ்வாறு அங்கே நிலத் தன்மையிருந்தால், அவர்களுக்கு தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தின் மூலமாகவும் 'தாட்கோ' வங்கி மூலமாகவும் ரூ. 2 இலட்சம் வரை கடன் வழங்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இந்தத் தொழில் அங்கு நடைபெறவில்லையென்று சொல்கிறார்கள். சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி, கடக்கல், குப்பனூர் போன்ற பகுதிகளிலே கிட்டத்தட்ட 25 ஆண்டுக் காலமாக 20 குடும்பங்களுக்கும் மேலாக இந்தக் கருப்பு கல்லுக்கு பட்டை தீட்டி செயற்கை வைரக் கற்களாக மாற்றி வரும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். அதேபோல, கிடைக்கக்கூடிய கலர் கல்லையெல்லாம் செயற்கை வைரக்கல்லாக மாற்றும் அற்புதத் தொழிலை அந்த 20 குடும்பங்கள் செய்து வருகின்றன. அரசு, அந்தத் தொழிலைச் செய்யக்கூடியவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியம் கிடைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல எடப்பாடி பகுதியிலே கடக்கல் என்ற இடத்திலே கருப்பு கற்களுக்கு பட்டை தீட்டுகின்ற பணியிலே 50 குடும்பங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. அவர்கள் நிலத்தினை குத்தகைக்கு எடுக்கவும், மற்றும் கற்களை விற்பனை செய்வதற்கும் வேண்டிய 'சர்வீஸ் சொசைட்டி'யை-சேவை செய்யும் ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கத்தை-- அமைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

[1997 ஏப்ரல் 28

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை வைரத்திற்கு பட்டை தீட்டுகின்ற தொழிலானது, திருச்சி, புதுக்கோட்டை போன்ற வட்டாரங்களிலே தொடங்கப்பட்டு நலிவடையக்கூடிய நிலைமை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அந்தப் பகுதிகளிலே இந்தத் தொழிலானது நலிவடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவற்றை மும்பை சந்தையிலே கொண்டுபோய் விற்பதற்கு தரம் பிரிப்பது என்ற முறையிலே பல வடநாட்டு வியாபாரிகள் இடைத்தரகர்களாக இருந்து, இன்று அந்தத் தொழில் நலிவடையக்கூடிய அளவுக்கு, நட்டம் ஏற்படக்கூடிய அளவுக்கு அங்கே முறைகேடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஐரோப்பா. அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்தச் செயற்கை வைரக் கற்களுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கின்ற காரணத்தால், அரசே இதைக் கொள்முதல் செய்து, நலிவடைந்து கொண்டிருக்கிற இந்தச் செயற்கை வைரத்தை பட்டை தீட்டுகின்ற தொழிலை மேம்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இந்தத் தொழிலை மேம்படுத்த, இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1990-ஆம் ஆண்டு திருச்சி ஜெம் பார்க் என்ற அமைப்பை ஏற்படுத்தி, செயற்கை வைரங்களுக்கு பட்டை தீட்டும் தொழிலை இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் செய்கின்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்பதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகளை எடுத்து, சமயநல்லூரில் 10 ஏக்கர் நிலத்தை எடுத்து, ஒரே இடத்தில் பட்டை தீட்டுவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். பிற்காலத்திலே அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 16-7-1996-ஆம் நாளன்று தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் இதைப் புனரமைப்பதற்காக ஒரு குழு அமைத்து-- திட்டக் குழு உறுப்பினர் திரு. ஜி. சிதம்பரம் அவர்கள் தலைமையிலே இரண்டு



1997 ஏப்ரல் 28]

உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்து--அதன் மூலம் புனரமைப்பதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெறுவது போன்று இந்தத் தொழில் நடைபெறுவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஜெயப்பூரில் இருந்துதான் பூலாம்பட்டிக்கு வருகை தந்து செயற்கை வைரக் கற்களை மிகக் குறைந்த விலைக்குப் பெற்றுச் செல்கிறார்கள். அந்தத் தொழிலில் படித்த இளைஞர்கள் ஈடுபடுவதால் அரசுத் துறைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மேலும், கனிம வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அங்கே விற்பனைச் சந்தை ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். ஒரு சேவைக் கூட்டுறவு மையம் அமைத்து, தொழில் திறனை உயர்த்த நிலத்தை குத்தகைக்கு எடுத்து, கற்களை நல்ல விலைக்கு விற்றுத் தருவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 718, திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன் மற்றும் திரு. கு. மனோகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**718--**

**தருமபுரியில் பொருட்காட்சி நடத்துதல்**

*3173--**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:**
**திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரியில் இவ்வாண்டு அரசு சார்பாக பொருட்காட்சி நடத்திட ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தினுடைய தலைநகரம் கிருஷ்ணகிரியில் ஆண்டுதோறும் மாங்கனி கண்காட்சி நடைபெறுகிறது. தற்போது ஓசூரில் நகரசபை சார்பாக பொருட்காட்சி ஒன்று நடந்து முடிந்திருக்கிறது. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சியை அரசு சார்பில் நடத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சிகள் மாவட்ட அளவில் நடைபெற்றபோது ஏராளமான அளவுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, 1991 முதல் 1996 வரை அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 27 பொருட்காட்சிகள் நடைபெற்றதில், 7 மாவட்டங்களிலே மட்டும் 50,38,000 ரூபாய்க்கு நட்டம் ஏற்பட்டதாகக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. ஆகவேதான், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஆண்டுக்கு ஒருமுறை சேலம், மதுரை, கோவை ஆகிய இடங்களில் பொருட்காட்சியினை நடத்தவும், வேலூர், நெல்லை ஆகிய இடங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசு நலத் திட்டங்களை எடுத்துச் சொல்லுகின்ற வகையில் பொருட்காட்சியினை நடத்த ஆணையிட்டு அறிவுரை வழங்கிய காரணத்தினால்தான், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இப்போது பொருட்காட்சியினை நடத்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல புத்தகங்களைப் படிப்பதைவிட ஒரு பொருட்காட்சிக்குச் சென்று வருவது சிறப்பானது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார். அந்த வகையில் அரசின் நலத் திட்டங்களையும், அரசின் கொள்கைகளையும், அரசின் பல்வேறு சலுகைகளையும் மக்கள்





அறிந்து கொள்ளும் வண்ணம் பொருட்காட்சியை, குறிப்பாக, எனது தர்மபுரி தொகுதியில், தர்மபுரியில் நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்ய முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை மூலமாக மாதம் ஒரு படத்தை எடுத்து, அரசின் நலவாழ்வுத் திட்டங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, பொருட்காட்சிகளில் புகைப்படக் கண்காட்சிகளை வைத்திருக்கிறோம். பல மாவட்டங்களில் நகராட்சிகளே பொருட்காட்சிகளை நடத்துகின்றன. செய்தித் துறையின் மூலமாக பொருட்காட்சிகளை நடத்துகிறபோது பெருநஷ்டம் ஏற்படுகிறது. அந்தக் காரணத்தால், இந்தத் துறையின் மூலமாக பொருட்காட்சிகளை நடத்துவது என்பது இயலாது. நகராட்சிகள் நடத்த முன்வந்தால் அதற்கு இந்த அரசு அனுமதி வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 719, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**719--**

### ஜீவாவுக்கு உருவச் சிலை அமைத்தல்

*5430--**திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மாநகரின் இலக்கியப் பேராசான் ஜீவாவுக்கு முழு உருவச் சிலை அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு எப்பொழுது நிறுவப்படும்?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலக்கியப் பேராசான் ஜீவா அவர்களுக்கு மணிமண்டபம் எழுப்பி சிறப்புச் செய்திருக்கிறார்கள். அதற்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, சென்னை நகரில் பேராசான் ஜீவா அவர்களுக்கு முழு உருவச் சிலை அமைப்பதற்கான முன்முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு பல்வேறு தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்களை எழுப்பியிருப்பதை இந்த நாடு மிக நன்றாக அறியும். இன்னும் பல தலைவர்களுக்கு சிலை வைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவைகளுக்கு எல்லாம் உரிய நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில், இப்போது முதல்வர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில் சி.பி. இராமசாமி பூங்காவில் அமரர் ஜீவா அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்பதற்காக ரூ. 15,50,000-ஐ ஒதுக்கி, அந்தப் பணிகள் பொதுப் பணித் துறை மூலம் நிறைவேற்றப்படவிருக்கின்றன. இந்த ஆண்டுக்குள் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். முதலிலே மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு, அதற்குப் பிறகு மணிமண்டபங்கள் அமைப்பது பற்றி யோசிக்கப்படும் என்ற உணர்வோடு செயல்படுகிற காரணத்தால், அமரர் ஜீவா அவர்களுக்கு சிலை அமைப்பது குறித்து, எதிர்காலத்தில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களோடு கலந்து பேசி, அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 720, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.





**720--**

**சுற்றுலாத் தலங்களுக்கு அடிப்படை வசதிகள்**

*3510--**திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கப்பட்ட நகரங்களுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ள நகரங்களில் அந்தந்த நகரங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். யாத்ரிகர் விடுதி அமைத்தல்; இளைஞர் விடுதி அமைத்தல்; சாலையோர வசதிகள் ஏற்படுத்துதல்; சுற்றுலா வளாகம் அமைத்தல்; தங்கும் விடுதியுடன் கூடிய உணவகம் அமைத்தல்; நீர்நிலைகள் இருக்குமிடங்களில் படகுக் குழாம் அமைத்து படகு விடுதல்; அணைக்கட்டு போன்ற இடங்களில் தேவையான இடங்களுக்கு தொலைநோக்கி அமைத்தல்; நீர்விளையாட்டு சாதனங்கள் மற்றும் சாகசச் சுற்றுலாச் சாதனங்கள் வாங்கித் தருதல், சுற்றுலாப் பேருந்துகள் விடுதல்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னவைகள் ஒரு சில இடங்களில், குறிப்பாக- இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற-- காஞ்சி மாநகருக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்தத் துறையின் மூலமாக, சோடியம் விளக்கு வசதிகள் செய்யப்படும் என்ற கருத்து இருக்கிற காரணத்தால், சென்னை-பெங்களூர் சாலையிலுள்ள, காஞ்சி மாநகர் நுழைவாயில் என்று கருதப்படுகின்ற பொன்னேரிக் கரைக்கு சோடியம் விளக்கு வசதிகள் அமைத்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து, சோடியம் விளக்கு வசதி செய்து கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டிஅம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நத்தம் தொகுதி திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக அறிவித்து இருக்கிற அதேநேரத்தில், அங்கு மான்கள், மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகள் சரணாலயம் அமைப்பது, சுற்றுலாத் துறையின் மூலமாக முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆண்டி அம்பலம், நீங்கள் சும்மா இருந்திருக்கலாம் அல்லவா? (சிரிப்பு). வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. கவன ஈர்ப்பு

### (அ) கடலூர் நகர குடிநீர்ப் பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. 55-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் நகரக் குடிநீர்ப் பிரச்சினை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

**அறிக்கை**

கடலூர் நகரில், தென்பெண்ணையாற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. நகரினை இரு பகுதிகளாகப் பிரித்து குடிநீர் வழங்கப்படுகிறது. சாவடி-மஞ்சக்குப்பம் பகுதிக்கு வழங்கும் ஆழ்குழாய்க் கிணறுகளில் வெள்ளம் காரணமாக நடு நீர் உறிஞ்சு கிணறு சரிவர இயங்காமல் இருந்தது. இது தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய தென்பெண்ணையாற்றுத் தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 30 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. நகராட்சிகளில் குடிநீர்த் திட்டங்களுக்கு புத்துயிரூட்டல் திட்டத்தின்கீழ் (Rejuvenation) ரூ. 35.00 லட்சம் செலவில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் திருப்பாப்புலியூர் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வருகின்றன.

மேலும், கடலூர் நகருக்கு புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை மேற்கொள்ள உரிய ஆய்வுப் பணிகள் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-40

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையின்படி கடலூர் நகரத்தினுடைய குடிநீர் நிலையினை 2 பிரிவுகளாகப் பிரித்து பணிகள் செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடலூர் நகரம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், கடலூர் துறைமுகப் பகுதிக்கும் தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதுமட்டுமின்றி 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் வருகின்ற அந்தச் சூழலில், குழாய்களில் பழுது ஏற்பட்டு குடிநீர் சரியாக வர முடியாத ஒரு நிலையும் ஏற்பட்டு இருப்பதைச் சீரமைக்க புதிய

குழாய்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தையும், அதுமட்டுமின்றி கடலூரில் சிறைத் துறை வசம் இருக்கக்கூடிய பயன்படுத்தப்படாத சில பகுதிகளின் வழியாக திருப்பாப்புலியூருக்கு நல்ல குடிநீரைக் கொண்டுவருவதற்கான குழாய்கள் பதிக்கப்படுகின்ற சூழ்நிலையில் சிறைத் துறையினுடைய அனுமதியும் வேண்டும் என்பதையும் குறித்து, கடந்த 5 ஆண்டுக் காலமாக திருப்பாப்புலியூர் பகுதிக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் மூலமாக நம்முடைய முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் இன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சருமான அவர்கள் மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப சுருக்கமாகக் கேட்க வேண்டும்; நீங்கள் உரை நிகழ்த்தக் கூடாது.

**திரு. இ. புகழேந்தி:** கொண்டுவரப்பட்ட கூத்தப்பாக்கம் குடிநீர்த் திட்டமும் கவனிக்கப்படாமல் பாழ்படுத்தப்பட்டதால் இப்போது புதிய திட்டங்கள் கொண்டுவர வேண்டியதனுடைய அவசியத்தை வலியுறுத்தி புதிதாக ஜெனரேட்டர் ஒன்று நம்முடைய நகராட்சிக்கு வழங்குவதற்கு நிதிநிலையினைப் பெருக்கவும் அல்லது அனுமதியினை வழங்கவும் அரசு விரைவாக உத்தரவிட வேண்டும்; அதனுடைய அவசியம் அப்படி இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்பு என்பது 3 பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டது. கடலூர் பகுதிக்கு குடிநீர் அளிக்கின்ற புதிய வசதிகளைச் செய்து தர வேண்டும் என்பது ஒன்று. இன்னொன்று, ஏற்கெனவே அமலில் இருக்கிற திட்டம் பழுதடைந்து, குழாய்கள் புதுப்பிக்கப்படுகிற சூழ்நிலையில் இருப்பது. மற்றொன்று, கடலூர் பகுதி, விஸ்தரிக்கிற சிறைப் பகுதிகள், கடலோரக் கிராமங்கள்--இவைகள் பரிசீலிக்கப்படுமா என்பது. இந்த மூன்றில் ஒன்று, முதலில் பழுதடைந்து போனதை புனரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் 35 லட்சம் ரூபாய்ச் செலவில்--அந்தத் திட்டம் தற்போது பரிசீலிக்கப்பட்டு விரைவில் முடிவடையும்; அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க வேண்டாம்; அநேகமாக இந்த மாதத்திற்குள் அல்லது அடுத்த மாதம் 10, 15 தேதிகளுக்குள் அந்தப் பணி முடிந்துவிடும் என்று நான் கருதுகிறேன். ஆனால், இந்தப் புதிய திட்டம் என்ன காரணத்தாலோ விடுபட்டுப் போய் இருக்கிறது.



சென்ற முறை நாங்கள் ஆட்சியில் இருந்தபோது அந்த இடங்களை நேரில் பார்வையிட்டு நகராட்சி மன்றத்தின் மூலம் தீர்மானம் பெற்று, அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டும் 7 வருஷ காலமாக அதில் எதுவுமே செய்யாமல் இருந்து இருக்கிறது. அரசியல் குறுக்கீடா, அதிகாரிகள் தவறா என்பது, இப்போது போடுகிற திட்டத்தின் அடிப்படையில் அந்த விவரம் தெரியும் என்று கருதுகிறேன்; அந்த ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அதற்கான பணிகளை விரைவாகத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கிராமிய நூற்பாலைகளில் பணிபுரியும் முதுநிலை நூற்பாளர்களுக்கு தினக்கூலி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ரவி அருணன் கொண்டு வருவார். திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கிராமிய நூற்பாலைகளில் பணிபுரியும் முதுநிலை நூற்பாளர்களுக்கு தினக் கூலி உயர்த்த வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

கடந்த சில ஆண்டுகளாக கிராமிய நூற்பு நிலையங்களில் நூல் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு தேக்க நிலை உள்ளதாலும், உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளிலும் தேக்க நிலை

உள்ளதாலும், வாரிய நிதி நிலையினையும் கருத்தில் கொண்டு முதுநிலை நூற்பாளர்களுக்குக் கூலியை உயர்த்தும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பணிபுரிகின்ற முதுநிலை நூற்பாளர்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள தினக் கூலிகூட வழங்கப்படுவது இல்லை. 20 ரூபாய் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது ஏறியுள்ள விலைவாசியைக் கருத்திற்கொண்டு, 20 ரூபாயை வைத்து ஒருவர் எப்படிக் குடும்பம் நடத்த முடியும் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்த்து, அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதோடு, அவர்களுக்குக் குறைந்தபட்சமாக 50 ரூபாயாவது வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்பு, அவர்களுடைய அறிவுரையின்பேரில் கதர் வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்தும்--முந்தைய அரசாங்கம் உற்பத்தி செய்த பொருள்களும் வெளி மார்க்கெட்டில் கொள்முதல் செய்த பொருள்களும் சேர்ந்து ரூபாய் 38.36 கோடி வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. வாரியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்தும்--இன்றைக்கு முதுநிலை நூற்பாளர்களின் கணக்கு எடுக்கப்பட்டு, அடுத்த ஆண்டு அவர்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-45

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்திலே துணிகள் தேங்கிக் கிடப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேங்கிக் கிடக்கிற துணிகளை விற்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, இந்தப் பொருட்கள் வெளிமார்க்கெட்டில் 11 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. வெளி





மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படாத பொருட்களும் அங்கே உள்ளன. ஆக மொத்தம், 38.36 கோடி ரூபாய் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிற வகையில் தற்போது நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடத்திலேயும் பேசி, இதை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை முதல் நாற்பத்தொன்றாவது அறிக்கை வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) பத்து அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, 1996-97 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்திநான்காவது அறிக்கை முதல் இருபத்தாறாவது அறிக்கை வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) மூன்று அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[1997 ஏப்ரல் 28

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1986-87 மற்றும் 1987-88-ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்திகள் வரப்பெற்றுள்ளன:

"In pursuance of Clause 1 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of the amounts spent on certain services and purposes during the financial year, 1986-87 in excess of the amounts authorised or granted for those services and purposes for that year."

[பேரவைத் தலைவர்] [1997 ஏப்ரல் 28

"In pursuance of Clause 1 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands in respect of the amounts spent on certain services and purposes during the financial year, 1987-88 in excess of the amounts authorised or granted for those services and purposes for that year."

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1986-87 மற்றும் 1987-88, வாக்கெடுப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1986-87-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1986-87-ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-4-1997 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைக்கு மேற்படாத தொகை, 1986-87-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 28]

**நிறைவேற்றப்பெற்ற 1986-87-ஆம் ஆண்டிற்கான "மிகைச் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு :--** | |
| 6. பத்திரப் பதிவு | 5,43,185 |
| 11. மாவட்ட நிருவாகம் | 89,72,218 |
| 14. சிறைச்சாலைகள் | 30,85,400 |
| 18. மருத்துவம் | 76,43,043 |
| 19. பொதுச் சுகாதாரம் | 2,10,86,338 |
| 25. சின்கோனா | 1,61,615 |
| 31. ஆதி திராவிடர் - பழங்குடியினர் முதலியோர் நலன் | 1,50,06,815 |
| 32. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் முதலியோர் நலன் | 37,90,509 |
| 33. வீட்டு வசதி | 3,26,643 |
| 37. பொதுப் பணிகள்--கட்டடங்கள் | 1,71,98,422 |
| 39. சாலைகளும் பாலங்களும் | 52,24,475 |
| 43. பல்வகை | 58,64,785 |
| 46. இழப்பீடும் ஒதுக்கீடுகளும் | 99,04,522 |
| **மொத்தம்--அ. வருவாய்க் கணக்கில் செலவு.** | **9,88,07,970** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்--** | |
| 59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 13,26,20,415 |
| **பெருமொத்தம் ..** | **23,14,28,385** |

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் என்ற முறையில் திரு. அழகிரி அவர்கள் மிகைச் செலவுகள் பற்றிய சில விளக்கங்களைப் பெற வேண்டுமென்று என்னிடம் கேட்டார்கள். ஆனால் விதிகளைப் பார்த்தால் இன்று வாக்கெடுப்பில் எந்த விவாதமும் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆகவே, இதற்குப் பின்னால் வருகிற நேரத்தில் உங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்க வாய்ப்பு தருகிறேன்.

*1987-88-ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1987-88-ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26-4-1997-ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகை 1987-88-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்படுகிறது.



**நிறைவேற்றப்பெற்ற 1987-88-ஆம் ஆண்டிற்கான "மிகைச் செலவிற்கான" மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு--** | |
| 8. தேர்தல்கள் | 30,45,860 |
| 11. மாவட்ட நிர்வாகம் | 63,70,284 |
| 17. கல்வி | 84,06,996 |
| 18. மருத்துவம் | 55,42,967 |
| 21. மீனளம் | 22,96,727 |
| 31. ஆதி திராவிடர் - பழங்குடியினர் முதலியோர் நலன் | 1,25,81,359 |
| 37. பொதுப் பணிகள்-- கட்டடங்கள் | 42,93,860 |
| **மொத்தம்--அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **20,25,38,053** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்--** | |
| 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 2,39,29,944 |
| **பெருமொத்தம்** | **22,64,67,997** |

## 5. அறிவிப்புகள்--தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டமுன்வடிவு, 1997.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்--தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்து இருக்கிறார்கள்.





## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

**(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டமுன்வடிவு, 1997.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

**(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/1997), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1997 ஏப்ரல் 28

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1997) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். திரு. சி. ஞானசேகரன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலப் பொது நிதியிலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஒதுக்கப்படுகிற நிதியின் அடிப்படையில் அரசு நிர்வாகம் போகிற பாதையைக் குறித்து சில கருத்துக்களைச் சொல்வது என்னுடைய கடமை.

இங்கே மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்கு நாம் மாணவர்களைத் தேர்வு செய்கிறபோது அதற்காக ஒரு என்ட்ரன்ஸ் எக்சாமினேஷனை தமிழக அரசு வைப்பதற்கு பதிலாக, ஏற்கெனவே ப்ளஸ்-2 தேர்வில் மாணவர்கள் எடுத்திருக்கிற மதிப்பெண்களையே அடிப்படையாகக் கொண்டு நேரடியாக அவர்களுக்கு மருத்துவக் கல்லூரி அனுமதி வழங்குகிற ஒரு நிலையை உருவாக்கித் தந்தால் பிரச்சினை எளிதில் தீர்க்கப்படும் என்பது எங்களுடைய கணிப்பு.

முற்பகல் 10-55

நம்முடைய மாநிலத்தில் 29 மாவட்டங்கள் இருக்கின்றன. இந்த 29 மாவட்டங்களில் பொதுவாக நகரப்பகுதிகளில் அதிலும் குறிப்பாக மாநகரப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு மட்டும் மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் கிடைப்பது மிக எளிதாக இருக்கிறது. எங்களைப் போன்ற கிராமங்களிலிருந்து வரக்கூடியவர்கள், பொதுவாக தமிழ் மீடியத்தில் படிக்கக்கூடிய, கிராமப்புறப் பள்ளிகளில் படிக்கக்கூடிய



1997 ஏப்ரல் 28] [திரு. சி. ஞானசேகரன்]

மாணவர்கள் மருத்துவர்களாக வரக்கூடிய வாய்ப்புகள் மிகமிகக் குறைவாக இருக்கிற காரணத்தால்-- 29 மாவட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய மாணவர்களில் எவ்வளவு பேர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து-- இந்த 29 மாவட்டங்களுக்கும் அதைப் பிரித்து, இந்த மாவட்டத்திற்கு இத்தனை சீட்டுகள், அதிலேயும்கூட நகரப் பகுதிக்கு இவ்வளவு சீட்டுக்கள், கிராமப் பகுதிகளுக்கு இவ்வளவு சீட்டுக்கள் என்று பிரித்துக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் கிராமப்புறத்திலேயிருந்து வரக்கூடிய மாணவர்கள்கூட மருத்துவப் படிப்பை, பொறியியல் படிப்பை, சட்டப் படிப்பை, - இதுபோன்ற புரபஷனல் கோர்சஸ் என்று சொல்லக்கூடிய படிப்பை - படிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம் இந்த என்ட்ரன்ஸ் எக்சாம் என்று வைத்தாலே, மாணவர்கள் இரண்டு மாதம் பிரில்லியண்ட், எக்செல் போன்ற நிறுவனங்களுக்கு எல்லாம் சென்று, பல்லாயிரக்கணக்கான ரூபாயைக் கொடுத்து, அவர்கள் படித்துப் படித்து பாவம் தங்கள் வாழ்நாளை அதிலேயேகூட கழித்துவிடுவார்கள் போல் இருக்கிறது. எனவே, ஏற்கெனவே அவர்கள் பெற்றிருக்கக்கூடிய மதிப்பெண்களே போதும் அவர்களை அடையாளம் காட்டுவதற்கு. எனவே, அப்படி மதிப்பெண்ணை அடையாளமாகக் கொண்டு, அவர்களுக்கு மாவட்ட வாரியாக பிரித்துக்கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே கல்கி ஆசிரமத்தைப் பற்றி ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதிலே நேமம் என்ற பகுதியிலே பல படிக்கின்ற மாணவர்களை-மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள் போன்ற இளம் மாணவர்களைக்-- கொண்டு போய் அடைத்து வைத்து, வசியப்படுத்தி, மொட்டை அடித்து, அவர்களை எல்லாம் நாசப்படுத்தக்கூடிய, பாழ்படுத்தக்கூடிய நிலையை நான் இந்த மன்றத்திலே சொன்னபோது, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசுக்கும் புகார்கள் வந்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்தார்கள். இன்றுகூட

பத்திரிகையிலே பார்த்தேன். கரூர் பகுதியிலே இருக்கக்கூடிய சபீதா என்ற பெண்மணி, அவருடைய வீட்டிலேயிருந்து கல்கி ஆசிரமத்திற்குப் போன பெண், மொட்டை அடிக்கப்பட்டு சன்னியாசினி கோர்ஸ் என்று ஏதோ அவருக்குக் கொடுக்கப்பட்டு, பிறகு நிறைய மாணவர்கள் வந்துவிட்ட காரணத்தாலே, பெங்களூருக்கு நாங்கள் ஏற்றுமதி செய்து விட்டோம் என்றெல்லாம் சொல்லி, பிறகு கரூர் போலீஸ் எடுத்த நடவடிக்கையின் காரணமாக-- மோகன்குமார் என்பவர், அந்தப் பெண்மணியினுடைய அண்ணன் கம்ப்ளெயின்ட் கொடுத்தபின்--அந்தப் பெண் வரவழைக்கப்பட்டிருக்கிறார். அப்படி வரவழைக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பெண் ஏற்கெனவே வசியப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தாலே, மாந்திரீகம் போன்றவற்றை எல்லாம் வைத்து செய்யப்பட்டுவிட்டதால், அந்தப் பெண் இப்போது அண்ணன் வீட்டிற்குப் போக மறுக்கிற ஒரு நிலை இருக்கிறது. இப்போது நீதிமன்றத்திலே அந்தப் பெண் ஒப்படைக்கப்படுவதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

இந்து மதத்தில் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கிறபோது, சில பேர்கள் அதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பக்தி மார்க்கம் இருப்பதால் மக்கள் எதற்கும் ஏமாந்துவிடுவார்கள் என்று எண்ணி இப்படிச் செய்கிறார்கள். நீங்கள் இப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால், விஜயகுமார் போன்றவர்கள்-- இப்போது பெரிய ஆசிரமத்தை நடத்திக்கொண்டிருப்பவர்கள்-- மக்களை திசைதிருப்பிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல ஆசிரமங்கள் எல்லாம் இருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்தில்கூட தங்கால் என்ற பகுதியிலே, மயிலை குருஜி அவர்கள் மிகச் சிறப்பான ஒரு ஆசிரமத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். முன்னாள் மேதகு ஆளுநர் அவர்கள்கூட அங்கே போய் பார்வையிட்டிருக்கிறார்கள். உறுப்பினர் காந்தி அவர்களுடைய ராணிப்பேட்டை தொகுதியிலே அது வருகிறது. அப்படிப்பட்ட ஆசிரமங்களும் இருக்கின்றன.' இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், சில ஆசிரமங்கள், பிரேமானந்தா ஆசிரமங்கள் போன்று ஆகிவிடக்கூடாது என்பதற்காக என்னுடைய அச்சத்தை நான் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நேமத்திலே போய் ரெய்டு செய்தார்கள். அதனுடைய விளைவு என்ன என்பது தெரியவில்லை. போனார்கள், ரெய்டு செய்தார்கள் என்று சொன்னார்களேயொழிய வேறு எதுவும் தெரியவில்லை. அங்கிருந்த சன்னியாசினிகளை எல்லாம் பெங்களூருக்கு



அனுப்பிவிட்டதாகச் சொல்கிறார்கள். இதுகுறித்து அங்கே இருக்கக்கூடிய ஒரு தலைமைச் சீடர் அவர்கள் பத்திரிகை நிருபர்களை எல்லாம் அழைத்து, பேட்டி கொடுக்கிறார். அந்தப் பேட்டியைப் பார்த்தால், ஏதோ எல்லாமே அங்கே நியாயமாக நடப்பது போலவும், பத்திரிகைகள் எல்லாம் சரியான தகவல் இல்லாமல் ஏதோ தவறான தகவலைக் கொண்டு எழுதியதாகவும் சொல்லி இருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவை அனுப்பி, அதனுடைய நகலை எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். இப்படி இவ்வளவும் செய்து கொண்டிருப்பவர்கள் தைரியமாக பத்திரிகைகளை எல்லாம் அழைத்து, பேட்டி கொடுத்துவிட்டு, இன்னும்கூட வால்போஸ்டர்களை எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை தயவுசெய்து தவிர்க்கவேண்டும்.

வேலூர், ஆந்திர மாநிலத்தில் உள்ள சித்தூர் போன்ற இடங்களிலும் இவை இருக்கின்றன. இது நாடு தழுவி இருக்கிறது. நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டேன். மகாராஷ்டிராவிலே 4 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இங்கே யாரும் கைது செய்யப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி வசியப்படுத்தப்பட்டவர்கள் ஒரு வேளை மேஜர் என்று இருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்ற கருத்தைக்கூட நீதிமன்றம் சொல்லலாம். இருந்தாலும்கூட, நீங்கள் சி.பி.சி.ஐ.டி-யை வைத்து வழக்கைப் 'பதிவு செய்கிறபோது வசியம் செய்யப்பட்டவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு ஆட்படுத்துவீர்களானால், அவர்கள் வசியம் செய்யப்பட்டிருக்கிறார்களா, உண்மையான சுயபுத்தியோடு இருக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஏனென்றால், ஏராளமான மாணவர்கள் தங்களுடைய படிப்பை, அவர்களுடைய இளம் பருவத்தைப் பாழ்படுத்திக்கொண்டு, இதுபோன்ற இயக்கங்களிலே மாட்டிக்கொண்டு, இன்று அவஸ்தைபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை இழந்த பெற்றோர்களும் இன்று ஒன்றும் செய்ய முடியாமல், தற்கொலை செய்துகொள்ளக்கூடிய நிலைக்கு எல்லாம் ஆளாக்கப்பட்டதை நான் இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே தெரிவித்தேன். ஆகவே அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [1997 ஏப்ரல் 28

முற்பகல் 11-00

அடுத்து, விடுதலைப் புலிகளுடைய ஊடுருவல் தமிழகத்திலே வந்துவிடக் கூடாது என்கிற காரணத்தினாலே இந்த அரசு மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றுகூட இராமேஸ்வரத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உதயகுமார் என்பவரும், கமலநாதன் என்பவரும் யாழ்ப்பாணத்திலேயிருந்து வந்தவர்கள். படகிலே வந்து அவர்கள் இராமேஸ்வரம் பகுதியிலும், மண்டபம் பகுதியிலும் இருக்கக்கூடிய அகதிகளோடு அவர்கள் இருந்து, பிறகு கொஞ்சநாள் கழித்துத்தான் நம்முடைய காவல் துறை அவர்களைக் கைது செய்திருக்கிறது. அதற்கு பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை இப்போது செங்கற்பட்டு சிறையில் அடைத்து வைத்திருக்கிறீர்கள். ஆனால் நுழைவு வாயிலிலேயே அவர்களை ஏன் பிடிக்க முடியவில்லை? நாம் கடலோரக் காவல் படை, உளவுப் பிரிவுகள் எல்லாம் வைத்திருக்கிறோம். கடலோரத்தில் எவ்வளவோ பாதுகாப்பு வைத்திருக்கிறோம். இதற்காக, கோடி, கோடியாகப் பணத்தைச் செலவிடுகிறோம். இப்படி பணத்தைச் செலவிடுகிறபோது விடுதலைப் புலிகள் தமிழகத்தின் உள்ளே ஊடுருவி இங்கே இருக்கக்கூடிய அகதிகளோடு அகதிகளாக அவர்கள் இரண்டறக் கலந்துவிட்டு, விடுதலைப் புலிகள் என்பது தெரியாவண்ணம் இருந்துகொண்டு, இன்று தமிழகத்தையே சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். வெடிகுண்டுக் கலாச்சாரத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். கொலை, கொள்ளைகளை அவர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே எச்சரிக்கையோடு இருக்கவேண்டுமென்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தமிழன் ஒருவர் பிரதமராக வரமுடியவில்லையே என்கிற ஆதங்கத்தில் நேற்று எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு கொடும்பாவியை எரித்து, அதையொட்டி இரவு இரண்டு மணிக்குப் போய் காவல் துறையினர் அவரைக் கைது செய்திருக்கிறார்கள். காவல் துறையிலே வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கைது செய்திருக்கிறார்கள் என்பதை நான் குறையாகச் சொல்லவில்லை. இருந்தாலும், இரவு இரண்டு மணிக்குச் சென்று அவரைக் கைது செய்யக்கூடிய காவல் துறை, ஜெயலலிதா காலத்திலிருந்த அதே காவல் துறை வீரப்பனைப் பிடிக்கமுடியாமல் எப்படி இருந்ததோ, அப்படியே இன்றும், ஓராண்டு ஆகியும்கூட



1997 ஏப்ரல் 28] [திரு. சி. ஞானசேகரன்]

இந்த ஆட்சியிலேகூட வீரப்பனைப் பிடிக்கமுடியாமல் இருக்கிறதே, ஏன், அவன் பெயரிலே வீரம் என்று ஒன்று இருக்கிற காரணத்தினாலா! என்னவென்று எனக்குப் புரியவில்லை. இதே காவல் துறை இதிலே எப்படி வேகமாகச் செயல்படுகிறதோ, அதே வேகத்தை நீங்கள் ஏன் வீரப்பன்பால் செலுத்தமுடியவில்லை? இந்தக் காவல் துறைக்கு நாம் எவ்வளவு பெரிய கட்டமைப்பை வைத்திருக்கிறோம். எத்தனையோ ஐ.ஜி.க்கள், எத்தனையோ டி.ஐ.ஜி.க்கள், அதேபோல் எத்தனையோ டி.ஜி.பி.க்கள் என்று இத்தனை பேரை வைத்துக்கொண்டுகூட, எல்லோரும் இங்கே இருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் எல்லாம் போய் வீரப்பனைப் பேட்டி காணுகின்றார்கள், அவனைப் படம் எடுக்கிறார்கள்; வீடியோ எடுக்கிறார்கள். இவர்கள் எல்லாம் எடுக்கிறபோது, இவர்களுக்கு எல்லாம் கிடைக்கக்கூடிய வீரப்பன், நம்முடைய காவல் துறைக்கு மட்டும் ஏன் கிடைக்க மறுக்கிறான்? நம்முடைய காவல் துறை ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு இணையான ஒரு போலீஸ் என்று சொல்லியிருக்கிறோம். இப்படிப்பட்ட தரம் வாய்ந்த போலீசை வைத்திருக்கிற நாம், அந்தக் காலத்தில்தான் அவர்கள் செயலிழந்து இருந்தார்கள் என்று சொன்னால், இந்தக் காலத்திலும் ஏன் அவனைக் கைது செய்ய முடியவில்லை என்பதைக் கண்டறிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இப்படி நாம் காலம் தாழ்த்திக் கொண்டே போனால், நாம் அவனுக்குப் பொது மன்னிப்பு கொடுப்பதற்குத் தயாராகிவிட்டோம் என்ற பொருள்படும். மக்கள் நம் பேரில் திரும்ப சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள். ஆகவே நான் இதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மணல். மணலை பாலாற்றிலே எடுக்கிறார்கள். அதேபோல் காவிரியாற்றிலே, கரூர் பக்கத்திலே மாயனூர் என்ற இடத்திலே, ரூ. 10 லட்சத்திற்கோ, என்னவோ ஏலம் எடுத்துவிட்டு, ரூ. 25 கோடிக்கு புரொக்ளீன் எல்லாம் போட்டு எடுக்கிறார்கள். இயந்திரங்களைப் போட்டு மணலை எடுக்கக்கூடாது என்று ஏற்கெனவே விதி இருக்கிறது. அப்படி விதி இருந்தும்கூட, தண்ணீர்போகிற போக்கை எல்லாம்கூட மடை கட்டி, தண்ணீரை வேறு பக்கம் திருப்பி, அங்கு கிட்டத்தட்ட 10, 20 கிலோமீட்டருக்கு மேலே அவர்கள் மணலை அள்ளிக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னால், அங்கே நிலத்தடி நீர் கெடுகிறது. பாலாற்றிலே

நிலத்தடி நீரையெல்லாம் கெடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு அந்த ஆட்சியிலும் செல்லப்பிள்ளையாக இருந்தவர்கள் இந்த ஆட்சியிலேயும் செல்லப்பிள்ளையாக இருந்து, அவர்கள் விதிமுறைகளை எல்லாம் மீறி, மணலை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள்மீது நீங்கள் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்களுடைய லைசன்ஸை எல்லாம் ரத்து செய்து, உடனடியாக நீர்வளத்தைக் காப்பாற்றுங்கள். அங்கே இருக்கக்கூடிய ஆறு, குழி, குழியாக மாறிக்கொண்டிருக்கிறது.

இலவச வேட்டி, சேலை வழங்குவதில் இருக்கக்கூடிய பிரச்சினையை இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே நாங்கள் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்தோம். ஈரோட்டிலே பல லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இலவச வேட்டி, சேலைகள் எல்லாம் கைப்பற்றப்பட்டன. எங்களுடைய வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலேயே கந்திலி ஒன்றியத்திலே, லக்கநாயக்கன்பட்டியிலே ஒரு வி.ஏ.ஓ. ரூ. 12-க்கு இலவச வேட்டி, சேலையை விற்றுக்கொண்டிருக்கிறார். வி.ஏ.ஓ.க்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டதைப் பதுக்கிக்கொண்டு போய் முன்பு வியாபாரம் செய்தது ஒன்று. இப்போது அவர்களே தைரியமாக, ஓப்பனாக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்துத் தலைவரே ரூ. 12 கொடுத்து டெஸ்டிற்காக வாங்கி அவரும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதுபற்றிய புகாரை அனுப்பி இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நாட்டிலே இன்னும் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஏழை, எளியவர்களுக்கு ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே கொடுத்த இலக்கு அளவை விட தற்போது இலக்கு குறைந்திருக்கிறது. ஆகவே அந்த இலக்குக்கு நீங்கள் உயர்த்தி ஏழை, எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகளை இன்னும் யார் யாருக்கு எல்லாம் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு எல்லாம் கொடுக்கவேண்டும். அதேபோல், தவறு செய்யக்கூடிய அலுவலர்கள் மீதும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், 20 கிலோ அரிசியை பழையபடியே நீங்கள் எப்படியாவது, எப்பாடுபட்டாவது மக்களுக்கு தயவுசெய்து வழங்கிவிடுங்கள். கடந்த ஆட்சியிலே இருந்த





நிலையைவிட இப்போது குறைந்துவிட்டதாகச் சொல்லி ஏதோ இந்த ஆட்சியிலே அரிசியே கிடைக்கவில்லை என்று பூதாகரமாக இந்த விஷயம் வெளியிடப்படுகிறது. எங்கு பார்த்தாலும் அரிசி குறைக்கப்பட்டிருக்கிறது என்ற புகார் வந்துகொண்டிருக்கின்றது. நான்கூட அது தொடர்பான உயர்மட்டக் குழுவில் இருந்தபோது, அக்குழுவின் செகரட்டரி அவர்களிடம் இப்பிரச்சினையை எடுத்துரைத்திருக்கிறேன். அண்ணன் சுப. தங்கவேலன் அவர்களும் அதிலே உறுப்பினராக இருந்தபடியால் அவர்களுக்கும் இந்தப் பிரச்சினை பற்றி நன்றாகத் தெரியும். அரிசிப் பிரச்சினைதான் ஆட்சியின் அடித்தளமாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் எப்படியாவது 20 கிலோ அரிசியை.... (மணியடிக்கப்பெற்றது).

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் பேசினீர்கள். உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கும் மேலேயே நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லக்கூடிய கருத்துக்கள் இந்த ஆட்சிக்கு உதவிகரமாக இருக்கக் கூடிய கருத்துக்களாகும். மானியக் கோரிக்கைகள் எல்லாம் முடிந்துவிட்ட இந்த நேரத்தில் எங்களுடைய கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்வதற்கு அனுமதியுங்கள் என்ற என்னுடைய பணிவன்பான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுவரை நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எப்படிப்பட்ட கருத்தை வேண்டுமானாலும் சொல்லலாம். அது உங்களுடைய உரிமை. எனக்கு நேரம்தான் முக்கியம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷனில் கொடுக்கக்கூடிய அரிசியை, அது குடும்பத்தில் இருவர் என்று இருந்தாலும் சரி, மூவர் என்று இருந்தாலும் சரி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த விலை கொடுத்தாவது வாங்கி மாதம் 20 கிலோ அரிசியை நீங்கள் ஒரு குடும்பத்திற்கு வழங்கி விடுங்கள் என்ற என்னுடைய பணிவன்பான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சேல்ஸ் டாக்ஸ். எடிபிள் ஆயிலுக்கு 4 சதவிகிதம் என்று சேல்ஸ் டாக்ஸ் போடுகிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எது, எதற்கோ வரியைக் குறைத்திருக்கிறார்கள். பனியனுக்குக் குறைத்து இருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் வரியைக் குறைத்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அதேநேரத்தில், ஏழை, எளிய மக்களும் சரி, நடுத்தர மக்களும் சரி, தங்களுடைய உணவுக்கு அன்றாடம் பயன்படுத்துவது சமையல் எண்ணெய். அந்த சமையல் எண்ணெய்க்கு நீங்கள் 4 சதவிகிதம் வரியைப் போடுகிறீர்கள். தயவுசெய்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், சமையல் எண்ணெய்க்குப் போடுகிற அந்த 4 சதவிகித வரியைக் குறைத்தால், எண்ணெய் விலையும் குறையும். அந்த மக்களும் தங்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள். இந்த விலையேற்றத்தால் அவர்கள் சமையல் எண்ணெயை வாங்க முடியாமல் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

அடுத்து, மீன் வலைக்கு, என்றும் இல்லாத ஒரு வரியை கற்பனையாக நீங்கள் போடுகிறீர்கள். நான் இந்த மாமன்றத்தில், 11 சதவிகிதம் என்று இருந்ததை 4 சதவிகிதமாக மாற்ற வேண்டும் என்று சொன்னபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், 4 சதவிகிதம் என்று வாய் தவறிச் சொல்லி, பிறகு 8 சதவிகிதம் என்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராள மனதோடு, அமைச்சர் தவறாகச் சொன்ன அந்த 4 சதவிகிதமே இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொன்னார்கள். ஆனால், தமிழகத்திலேயே மீன் வலைக்கு இன்று வரை ஒரு பைசாகூட வரி வசூலித்ததாக வரலாறே இல்லை. நம்முடைய மீன் வளத் துறைக்கு என்று இருக்கக்கூடிய Tamil Nadu Fisheries Development Corporation-ல் தயாரிக்கக்கூடிய மீன் வலைக்குக்கூட--அதை 'மால்' என்று சொல்வார்கள். Fabrics என்று ஆங்கிலத்திலே சொல்லி, வலை என்று போடுகிறபோது-- அதிலே 4 சதவிகிதம் வரி போடுகிறீர்கள். இதுவரை 'tax exempted' ஆகத்தான் இருந்து இருக்கிறது. அரசுத் துறையைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அதிலே பில்லைப் போடுகிறபோது tax exempted என்றுதான் போடுகிறார்கள். இதுவரை ஒரு பைசாகூட வரி வசூலிக்கப்பட்டதாக வரலாறே இல்லாத காலகட்டத்தில் மீனவர்கள் எல்லாம் எங்கள்மீது கோபித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏதோ நாங்கள்தான் இல்லாத ஒன்றை--11 சதவிகிதம் என்று இருந்ததை 4 சதவிகிதமாகக் குறைத்து விட்டோம் என்று நாங்கள் பெருமிதத்தோடு இருக்கும்போது--நீங்கள்தான் சும்மா





இருக்கிற சங்கை எடுத்து ஊதிக் கெடுத்துவிட்டீர்கள் என்று எங்கள்மீது கோபித்துக்கொண்டு--வரியே இல்லாத ஒன்றைக் குறித்து உங்களை யார் இப்படி பேசச் சொன்னது என்று எங்கள் மீது கோபித்துக் கொண்டு--இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த 4 சதவிகித வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் மீன் வளத் துறை மானியத்திலே பேசுகிறபோது, அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இருந்தார்கள். அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்கள் வந்த பிறகு அவரோடு கலந்து பேசி ஒரு முடிவு எடுப்பதாகச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே நான் இப்போது கேட்டுக்கொள்வதெல்லாம், அரசுத் துறையிலே தயாரிக்கப்பட்டு விற்கப்படக்கூடியவைகளிலே நீங்கள் 'tax exempted' என்று குறிப்பிட்டிருக்கிற அந்த "மாலுக்கு" வரியை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏற்கெனவே இந்த அரசு பொறுப்பெற்ற பின்னாலே, தீயணைப்புத் துறையைச் சேர்ந்த ஹரிஹரன் என்பவரைக் கைது செய்தீர்கள். அதோடு ஜெயபெருமாள் என்பவர் எஃப்.ஐ.ஆரில், அக்யூஸ்டு-ஆக இருக்கிறவர், அவரை நீங்கள் இதுவரை கைது செய்யவில்லை. அவரையும் கைது செய்து அவர்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே யார், யார் எல்லாம் குற்றம் புரிந்திருந்தார்களோ, அவர்களையெல்லாம் கைது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான இன்பசாகரன், தியானேஸ்வரன், இராமச்சந்திரன் போன்றவர்களையெல்லாம்--இன்னும் யாரையும் கைது செய்யவில்லை. இவ்வளவு தூரம் நாட்டைக் கொள்ளையடித்து, நாட்டையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய இவர்களையெல்லாம் நீங்கள் உடனடியாகக் கைது செய்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அப்போதுதான் நாட்டு மக்களுக்கு நீதி வழங்கக்கூடிய நிலையிலே நீங்கள் செயல்பட முடியும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து எல்லாம் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலேயே அதிக நேரம் நீங்கள் பேசிவிட்டீர்கள்.

[1997 ஏப்ரல் 28

**திரு. சி. ஞானசேகரன்:** நான் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

*முற்பகல் 11–10*

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் 30 முடிந்து, ஏப்ரல் மாதம் 1-ந் தேதி தொடங்குகிற நிதியாண்டிற்கு நிறைவேற்றப்பட்ட மானியங்களுக்குத் தொகை ஒதுக்கப்படுகிற வகையில் உள்ள இந்தச் சட்டமுன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாட்டிலே கழக ஆட்சி வந்த பின்னால் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த ஆட்சிக்காலத்தில் ரௌடிகள் சாம்ராஜ்ஜியம் நடந்துகொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் 4, 5 ஆட்டோக்களிலே ஆட்கள் போவது, யாரை வேண்டுமானாலும் தாக்குவது, தாக்கிவிட்டு அவர்கள் அமைச்சர்களுடைய காரிலேயே பவனி வருவது என்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன. அவற்றில் ஒன்றுகூட இன்றைக்கு நடைபெறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி இந்தப் பரந்த தமிழகத்தில், பெரிய பூமியில், இந்த பூபாகத்தில் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் எங்கேயாவது நடைபெற்றால் அந்த நிகழ்ச்சிகள்மீது மறுநாளே காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கிறார்கள். மதுரையிலே நடந்த மாநகராட்சி உறுப்பினருடைய கொலை வழக்கிலே திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும், முத்துராமலிங்கம் என்ற பெயருடைய அந்த நபர் இன்றைக்குக் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். இது மனுநீதிச் சோழன் ஆட்சிதான். தன்னுடைய பிள்ளையாக இருந்தாலும் தேர்க்காலில் இட்டானே, அப்படிப்பட்ட மனுநீதிச் சோழன் ஆட்சிதான் இது. தமிழகத்தினுடைய வரலாற்றிலே சோழ சாம்ராஜ்ஜியத்தில்தான் இந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. சரித்திரங்கள் சொல்கின்றன. அப்படிப்பட்ட சோழ சாம்ராஜ்ஜியத்திலிருந்து வந்திருக்கின்ற என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள், தன்னுடைய மகனாக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்று இந்தச் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ஆட்சிதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறவர்,





ஒரு வட்டத்தினுடைய செயலாளராக இருக்கிறவர், இன்றைக்குக் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால் எவ்வளவு நேர்மையான ஆட்சி இந்த நாட்டில் நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு முன்னால் இருந்தவர்கள் ஆட்சிக் காலத்திலே கடற்கரை ஓரங்களிலே இருக்கிற விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு மின்சாரமே நிறுத்தப்பட்டது; யாருக்கும் தெரியாதா? இதற்கு முன்பு இருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா? வங்கக் கடற்கரை ஓரங்களில் பல மணி நேரம். மின்சாரம் நிறுத்தப்பட்டு, விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் வந்து செல்கிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள் இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள். யாருக்கும் தெரியாதா? காவல் துறைக்குத் தெரியாதா? சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா? ஆனால் இன்றைக்கு இலங்கையில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்குப் பயந்து ஒன்றிரண்டு பேர் வந்தால், அப்படிப்பட்ட தமிழர்கள் ஒதுங்குகின்ற நேரத்திலே அவர்களைப் பார்த்து இவர்கள் விடுதலைப் புலிகள் என்று சொல்வதுதான் இந்த நாட்டினுடைய நாகரீகமாகிவிட்டது. அப்படிப்பட்ட முறையற்ற செயல்கள் இந்த நாட்டில் நடைபெறக்கூடாது என்பதாலேதான்-- ஏன் கைது செய்தவர்களை மறைக்க முடியாதா?-- பத்திரிகைகளுக்குச் சொல்கிற அளவுக்கு வருகிறோம் என்று சொன்னால் நேர்மையாக, முறையாக இந்த ஆட்சி நடைபெற வேண்டும் என்று, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில் நடைபெற வேண்டும் என்று அவர் கருதுகிறார்.

ஆக, இப்படிப்பட்ட நல்ல ஆட்சி இந்த நாட்டில் நடைபெறுகிறது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை இவ்வருடம் வைத்திருக்கிறார். என்னிடம்கூட அந்தப் புத்தகத்தை வைத்திருக்க முடியவில்லை. பல புத்தகங்களை நான் வாங்கினேன். வருகிறவர்கள் எல்லாம், 'எனக்கு அந்த நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தைத் தாருங்கள், நாங்கள் படிக்க வேண்டும், இது சரித்திரத்திலே இடம்பெற வேண்டிய ஒன்று' என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த நிதியமைச்சர்கள் எல்லாம், எவ்வளவு வருமானம் வருகிறது; எவ்வளவு செலவாகிறது, இதிலே பாக்கி என்ன தொகை இருக்கிறது? இந்தத் தொகைக்கு என்ன வரி என்று, தான் கணக்குப் போடுவார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்படி எல்லாம் ஆய்வு செய்யாமல், அப்படிப்பட்ட ஒரு அக்கவுன்டன்ட் வேலை பார்க்காமல், ஒரு ஃபைனான்ஸ் செகரட்டரி

வேலை பார்க்காமல் இந்த நாட்டினுடைய நிலைமை என்ன? மக்களுக்கு எது உதவும், எது உதவாது, உதவுகிற எப்பொருளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும், உதவாத பொருள்களுக்கு வரியைப் போட வேண்டும் என்று கணித்து, பகுத்து, நல்லமுறையிலே ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த நாட்டிற்குத் தந்து, அந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் இங்கேயுள்ள மக்களெல்லாம் மிக மகிழ்ச்சியாக அதை ஏற்றுக் கொள்கிற ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது.

*முற்பகல் 11-15*

நேற்றுகூட, கும்பகோணத்திலே நிதிநிலை அறிக்கை விளக்கக் கூட்டம், எங்களுடைய முதலமைச்சர் கழகத் தலைவர் கலைஞரே கலந்து கொள்கிற நிகழ்ச்சி நடந்தது. பல இலட்சக்கணக்கானோர் வந்திருந்தனர். கும்பகோணமே நிறைந்து வழிந்தது. மகாமகம் என்ன? எத்தனை வந்தாலும் தலைவா, முதலமைச்சரவர்களே, உங்களை நாங்கள் காண வருவோம், இந்த நாட்டினுடைய மக்களுடைய தவப் புதல்வன் நீ, ஆகையினால்தான் நாங்கள் கூடுவோம் என்று நேற்று குடந்தையிலே கூடி, தலைவரவர்களுடைய உரையைக் கேட்டார்களே, அது நிதிநிலை விளக்கக் கூட்டம் அல்லவா?

இப்படிக் கூடுகிறார்கள் என்று சொன்னால், நிதிநிலை அறிக்கையை மக்களே வரவேற்கிறார்கள் என்றுதான் பொருள். இந்த மாமன்றம் மட்டும் அல்ல; இந்த மாமன்றத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; இந்த நிதிநிலை அறிக்கையை நேற்று மக்கள மன்றத்திலே வைத்தார். அந்த மக்களெல்லாம் இலட்சக்கணக்கில் கூடி, நாங்களும் உங்களை ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம், நீங்கள் கொண்டு வந்த இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்றுக் கொள்கிறோம்; என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், மக்களே வரவேற்கிற நிதிநிலை அறிக்கையை இந்த நாட்டிலே சமர்ப்பித்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்?

இன்றைக்கு எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் எந்த முதலமைச்சர் இன்றைக்கு இறங்கி எந்த நிகழ்ச்சியைப் பார்த்திருக்கிறார்? இன்றைக்கு ஆற்றினுடைய ஓரங்கள் எல்லாம் எப்படி வெட்டப்படுகின்றன, வடிகால்கள் எப்படி வெட்டப்படுகின்றன, நெய்வேலி காட்டாமணக்கு எப்படி அழிக்கப்படுகிறது? என்று நேரில்



பார்வையிட்டார். விவசாயம் முன்னேறினால்தான், பொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்று தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருந்தாரே, 73 வயதிலே சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லி, தன்னுடைய 73 வயதிலே-- விரைவில் 74-வது வயது வரப் போகிறது. அவர் காரிலிருந்து இறங்கி ஒவ்வொன்றையும், ஆற்றினுடைய வேலைகள் செய்யப்படுவதையும், புல்டோசர் வேலை செய்வதையும், அங்கு ஒவ்வொரு ஆளும் ஆற்றை ஆழப்படுத்துவதையும், வடிகால்கள் செப்பனிடப்படுவதையும் இறங்கிப் பார்த்துவிட்டு, மக்கள் கடலிலே மிதந்து கும்பகோணத்திற்கு வந்தார் என்று சொன்னால், இப்படிப்பட்ட முதலமைச்சரை யாராவது பார்த்திருக்கிறீர்களா? விவசாய வேலைகளைப், பொதுப்பணித் துறை செய்கிற வேலைகளை இறங்கிப்பார்க்கிற முதலமைச்சரை இந்த நாடு கண்டதா? ஆக, அப்படிப்பட்ட ஒரு சிறந்த முதலமைச்சரை, இந்த நாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும், தமிழ் மண்தான் பெரிது என்று கருதுகிறவர்களை, நாம் பார்க்க முடியாது.

இன்றைக்குக்கூடச் சொல்லலாம். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை, நீங்கள்கூட பிரதம மந்திரியாக வரலாமே என்று எல்லோரும் சொல்லலாம், ஆனால் இந்த மண்ணை விட்டுப் போகிற மனிதர் அல்ல அவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களிலே உரையை முடிக்க வேண்டும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** இந்த மண்ணை நேசிக்கிற மனிதர், வீழ்ந்தாலும் இந்தத் தமிழ் மண்ணில் வீழ்வேன் என்று கருதுகிறவர் இந்தியாவினுடைய ஜனாதிபதி பதவி கொடுத்தாலும், இந்த மண்ணை விட்டு விலகாதவர். அப்படிப்பட்ட மாமனிதரை இந்த மண் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை பேர், போனவுடனே சொன்னார்கள்? ஜோதிபாசுவே சொன்னார், 'நீங்கள் பிரதம மந்திரியாக வாருங்கள்', என தினமணியிலே 'ஞானி' எழுதினார். அரசியல் அனுபவம் நிர்வாகம் இவைகளெல்லாம் பெற்ற ஒரு சிறந்த மனிதர் இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சராக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார். அப்படிப்பட்ட இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர், இந்த மண்ணிலே இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர். இந்தியாவின் பிரதம மந்திரியாக வரும் எண்ணம் அவருக்கு இல்லை.

ஆனால், தமிழகத்தினுடைய முதல்வராக, இந்தத் தமிழகத்திற்கு உழைக்கிற ஒரு மாமனிதனாக இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் இன்றைக்குக் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள்.

அதேபோன்று, இந்த நாட்டிலே குடிநீருக்காக வேண்டியே எங்களுடைய அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் குடிநீருக்காக வேண்டியே--150 பேர் மக்கள் தொகை இருந்தால் அங்கே குடிநீர், சாலைகள் செப்பனிடப்படுவதற்குப் பணம் ஒதுக்கீடு செய்கிறார்கள். நான்கூட கிராமங்களுக்குச் சென்றேன். 150 பேர் மக்கள் தொகை இருந்தால் போதும், ஒரு மேல்நிலைத் தொட்டி என்று உங்கள் அமைச்சர் அறிவித்திருக்கிறாரே, என்று பெண்களெல்லாம் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்களெல்லாம் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலைகின்ற காலங்கள் போய்விட்டன. இந்த ஆண்டு எங்கே குடிநீர்ப் பிரச்சினை? நான் ஒரு நாள் விடுமுறை விடுகிறபொழுதுகூட கிராமங்களுக்குப் போகிறேன். அத்தனை கிராமங்களிலும் எங்களுக்குக் குடிநீர் இருக்கிறது. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி செப்பனிடப்பட்டிருக்கிறது என்ற கருத்து பரவியிருக்கிறது. மக்களுக்குத் தேவையானது என்ன? குடிநீர், விளக்கு, நடக்கச் சாலைதானே? இவையெல்லாம் இன்றைக்குச் செப்பனிடப்பட்டு, அத்தனை சாலைகளையும் தார்ச்சாலைகளாக ஆக்குகிறோம், இரண்டு ஆண்டுக்காலத்தில் முடிக்கிறோம் என்று ஒரு பெரிய வைராக்கியத்தோடு நடக்கிற நிகழ்ச்சியை நாம் பார்க்கிறோம். அதற்கு நிதியெல்லாம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பரந்த பூமி தமிழகம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன் :** இதோடு பேசி முடித்துவிடுகிறேன். ஒன்றிரண்டு அங்கங்கே நடக்காமல் இருக்க முடியாது. அந்தக் கால்த்தில் நடந்தவைகள்தான் இந்த கஸ்டடி டெத். இதெல்லாம் அந்தக் காலத்தில் நடந்தவைகள்தான். ஆனால் பத்திரிகைகள் இப்படிப் பூதாகரமாக பிரச்சினைகளை எழுதுகிறபோதுதான், அதில் என்னவோ தவறு நடந்துவிட்டதுபோல கருதுகிற ஒரு சூழ்நிலை வருகிறது. ஆனால், அந்தமாதிரி நிகழ்ச்சிகள் நடக்கிறபோது அதைத்





தடுக்கின்ற நிலையில், சட்டம்--ஒழுங்கு பரிமளிக்கின்ற வகையில், சட்டம்--ஒழுங்கு நிலைநாட்டப்படுகின்ற விதமாக, தமிழகம் இன்றைக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு நல்ல ஆட்சி இந்த நாட்டில் நடைபெறுகிறது என்பதை மறுக்க முடியாது என்று சொல்லி, இந்த அறிக்கையை வரவேற்று, விடைபெறுகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற நான் விழைகின்றேன். சுமார் 62 துறைகளுக்கு 18,131 கோடியே 10 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற நேரத்தில், மாண்புமிகு முதல்மைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றிரண்டு கருத்துக்களை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, அலுவலகச் செலவினங்கள், அரசு ஊழியர்களுடைய ஊதியங்கள், பல்வேறு இனங்களுக்கான செலவினங்களெல்லாம் போக, மக்களுடைய நலத் திட்டங்களுக்காக ஒதுக்கக்கூடிய அந்த நிதி, காலத்தோடு அரசு எண்ணக்கூடிய திட்டங்கள் மக்களைச் சென்றடைவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு உருவாகும் விதத்தில் நம்முடைய அரசு முனைப்பு காட்டியிருந்தபோதிலும்கூட சிலவற்றை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை, மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது, மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களைக் கூட்டி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய தொகுதியில் இருக்கின்ற நிலைகளை, பணிகளைக் குறித்து நிகழ்ச்சி நிரல்களைப் பெற்றுக் கொண்டு, அனைத்துத் துறை அதிகாரிகளிடமிருந்தும் பதில்களைப் பெற்று அவற்றை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே பரிசீலித்து நேரிடையாக சம்பந்தப்பட்ட துறையினுடைய அலுவலர்கள் பதில் சொல்லக்கூடிய நிலையிருந்தது. ஏற்கெனவே, அந்தப் பணிகள் இவ்வாறு திட்டமிடப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருந்தன. தேக்க நிலையில் இருந்த போதிலும்கூட, உடனடியாகச் செய்யக்கூடிய, துரிதப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருந்தன.

ஆனால், சமீபத்தில், உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல் நடந்த பின்னர், இன்றைக்கு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டம் நடக்காத காரணத்தினால், தொகுதியில் நடக்கக்கூடிய நலத் திட்டங்களாக இருந்தாலும் சரி, மக்களுடைய திட்டங்களாக இருந்தாலும் சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சொல்கிற திட்டமாக இருந்தாலும் சரி, மக்களைச் சென்றடைய முடியாத நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தை மீண்டும் நடத்துவதற்கான உத்தரவினையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிச் செய்தால்தான் நாம் எந்த எதிர்பார்ப்போடு மக்களுக்கு நிதி ஒதுக்குகிறோமோ அது சென்றடைவதற்கான நல்ல வாய்ப்பு கிடைக்கும். இன்னும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சிக்கன நடவடிக்கையைக் கையாண்டிருப்பதை கடந்த நிதிநிலையிலே எங்களால் காண முடிந்தது. முன்னாள் இருந்த அரசில், அமைச்சர்கள், முதலமைச்சர் அவர்களுடைய விமானப் பயணத்திற்காக 1 கோடியே 71 இலட்சம் ரூபாய் ஊதாரித்தனமாக செலவு செய்ததை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சாதாரணமாக 25 இலட்சம் ரூபாய் என்று குறைத்து, இன்றைக்கு சிக்கனப்படுத்தி அது மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகக் கொண்டு வந்திருப்பது என்பது ஒரு சரியான சிக்கனத்தைக் காட்டுகிறது.

*முற்பகல் 11-25*

அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும் சரி, அவர்களை எல்லாம், அழைத்து 'நீங்கள் விமானத்திலே போக வேண்டாம், இரயிலிலே செல்லுங்கள், காரிலே செல்லுங்கள், மக்களை நேரிடையாகச் சந்தியுங்கள்' என்று சொல்லி, அப்படிப்பட்ட ஒரு நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்ற தடவை இருந்த அமைச்சர்கள் எல்லாம், தமிழகத்திலே விமானத்திலே சுற்றிச் சுற்றித் திரிந்ததினுடைய விளைவாக 1.71 கோடி ரூபாய் ஆண்டிற்குச் செலவு செய்யப்பட்டது. அதை, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 இலட்சம் ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். எனவே, அந்த நிதி நேரிடையாக மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோல, எவ்வளவுதான் நிதியை நாம் மக்களுக்குக் கொண்டு சென்றாலும், நம்முடைய நாட்டில், தமிழ்நாட்டில், சாதி மத மோதல்கள் இருக்காமல் பாதுகாப்பதற்காக, சட்டம்-- ஒழுங்கை நிலைநாட்டுவதில் பிரதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படையாக இருக்கக்கூடிய மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியது என்பது இன்றைக்கு அவசியமானதாகும். கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததன் விளைவாக, எங்கே போனாலும் குடிதண்ணீர் வேண்டும், எங்கே போனாலும் மருத்துவ வசதி வேண்டும், எங்கே போனாலும் சாலை வசதி வேண்டும். எங்கே போனாலும் மக்களுக்கு நலத் திட்டங்கள் வேண்டும் என்று மக்கள் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவைகளை படிப்படியாக நிறைவேற்றக்கூடிய விதத்தில் நடவடிக்கைகளை எடுக்கிறபோது, அந்த நிதி மக்களைச் சென்று அடைவதற்காக நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும். அத்துடன் சாதிய மோதல்கள், வகுப்புக் கலவரங்கள் ஆகியவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளிலேயும் நமது அரசு ஈடுபட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கோவையிலேகூட நம்முடைய மரியாதைக்குரிய விஞ்ஞானி திரு. டி.எஸ். ஆனந்தன் என்பவர் உள்ளார். அவர் நில அதிர்ச்சிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு விஞ்ஞானி. அந்த விஞ்ஞானிக்கு இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய விஞ்ஞானிகள் எல்லாம் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அகில உலக அளவிலே இருக்கக்கூடிய விஞ்ஞானிகளும் பாராட்டுக்களை எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். திரு. டி.எஸ். ஆனந்தன் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரிடையாகச் சந்திப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். அவரிடமிருக்கின்ற திறமைகள் என்ன என்பது பற்றி நம்முடைய அரசு கண்டறிந்து, உரிய ஆலோசனைகளையும் உதவிகளையும் அளிக்கும் விதத்தில் அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, ** அதிலே கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சுயேச்சதிகாரம் பெற்ற பல்கலைக்கழகம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் மூத்த சட்டமன்ற உறுப்பினர். அது பற்றி ஏதாவது உங்களிடம் விவரம் இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமோ, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமோ தனியாகச் சொல்லுங்கள். சட்டமன்றத்திலே அதைச் சொன்னதாக இருக்கக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நான் யாருடைய பெயரையும் சொல்லவில்லை, நபர்கள் பெயரையும் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களில், பலபேர் ஏற்கெனவே கோரிக்கைகளை எல்லாம் வைத்திருக்கிறார்கள். அன்றுகூட, காலையிலே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பளம்கூட கொடுக்க வேண்டியதில்லை என்று. ஆனால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அன்றையதினமே அறிவிப்பார்கள் என்று நினைத்திருந்தேன். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்களை கண்டிப்பாக நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மந்திரிகளுக்கு நிறைய பேர் உதவியாளர்களாக இருக்கிறார்கள். மந்திரிகளுக்கு இரண்டு, மூன்று பி.ஏ.-க்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்களுடைய பி.ஏ.-க்களையும் நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டும். அவர்களிடமிருந்து இன்னும் சரியான பதில்கள் வரமாட்டேன் என்கிறது. அனேகமாகப் பார்த்தீர்கள் என்றால் அமைச்சர்களுடைய பி.ஏ.-க்களே அமைச்சர்களாக ஆகிவிடுகிற நிலைமை எல்லாம் இருக்கிறது; அவர்களே, அமைச்சர்களாகி பதில் சொல்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. இதையெல்லாம் மாற்ற வேண்டும். இன்னும் பழைய நிலைமையிலேயிருந்து மாறாமல் இருக்கிறது. இதையெல்லாம் மாற்றுங்கள்.

இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்களை கண்டிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமிக்க வேண்டும்



என்று கேட்டுக்கொள்கிறேன். என்ன செலவானாலும் சரி, அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் எல்லோரும் அதைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்குக்கூட, கண்டிப்பாக இதன்மீது பேச வேண்டும் என்று சொன்னார்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அரசியல் பாகுபாடு இல்லாமல், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று சொல்லாத அளவிற்கு உதவியாளர்களை நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனவே, உதவியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்ப்யூட்டர்கள் எல்லாம் பிறகுகூட வாங்கிக்கொள்வோம். கம்ப்யூட்டர் பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அந்தக் கம்ப்யூட்டர்களை யார் சரியாகப் பயன்படுத்துகிறார்களோ அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதை வழங்கலாம். ஏனென்றால், பயன்படுத்த முடியாதவர்களுக்கு, பயிற்சி இல்லாதவர்களுக்கு கம்ப்யூட்டர், கணினிப் பொருட்களைக் கொடுத்து, அரசுக்குச் செலவினத்தை ஏற்படுத்துவதனாலே எந்தவொரு பயனும் இருக்கப் போவதில்லை. ஆகவே அதற்கான ஒரு பயிற்சியைக் கொடுக்கலாம்.

முற்பகல் 11-30

நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். மதியம் 2.00 மணி அளவிலே கடுமையான, கொடுமையான வெயிலிலே, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்து தந்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்டகாலமாக எனக்குத் தெரிந்து இதுவரையிலும், ஆறுகளை ஆழப்படுத்தும் பணி, கால்வாய்களைச் சீரமைக்கும் பணி நடந்தது இல்லை. 10 கோடி ரூபாய்க்கு மேலே செலவு செய்து, புதிய கால்வாய்களை வெட்டுவதைப் போன்று, கால்வாய் சீரமைக்கும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நிதிப் பற்றாக்குறையின் காரணமாக பல இடங்களிலே பாதி வெட்டப்பட்ட நிலையிலுள்ள கால்வாய்கள் அப்படியே நின்றுவிடுமோ என அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள். இன்னும் கொஞ்சம் பணம் செலவானாலும் பரவாயில்லை கூடுதல்

[திரு. ஜி. பழனிசாமி] [1997 ஏப்ரல் 28

நிதியை ஒதுக்கித் தந்து, இந்த ஆண்டே அந்தப் பணிகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எங்களுடைய மருத்துவமனையைப் பற்றிய முழு விவரங்களையும் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது அந்த மருத்துவமனை. இன்றைக்கிருக்கிற மக்கள் தொகைப் பெருக்கத்தில் 3, 4 தாலுக்காக்களுக்காக உள்ளது திருத்துறைப்பூண்டி மருத்துவமனை. அந்த மருத்துவமனை மிகவும் சிறிய இடத்தில் உள்ளது. தினமும் 2,000, 3,000 பேர் வருகிறார்கள். அந்த மருத்துவமனையை மாற்றம் செய்ய வேண்டும். நேற்றைக்குப் போகிறபோது, படம் எடுக்கிற கருவி ரிப்பேர் என்றும், பிலிம் இல்லை என்றும், தனியார் மருத்துவமனைக்குப் போகச் சொல்கிறார்கள் என்றும் மக்கள் குறைபட்டுக் கொண்டார்கள். நான் நேரிடையாக நம்முடைய அமைச்சரிடத்திலே எழுத்து மூலமாகக் கொடுத்து விடுகிறேன். அதிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இச்சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களைப் பேச அழைப்பதற்கு முன்னால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். வருங்காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் பேச அனுமதி வேண்டுமென்று பேரவைத் தலைவரைத்தான் கேட்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் போய் தொந்தரவு செய்யக்கூடாது. அமைச்சர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்கக்கூடாது. கட்சித் தலைவர்களை அழைத்துக் கொண்டு வந்து என்னிடம் சொல்லக்கூடாது. அந்த முறையை இனிமேல் கடைப்பிடிக்கக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி, திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களை அழைக்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி, நான் உங்களிடம்தான் வந்து கேட்டேன். நீங்களும் அனுமதி தந்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அது அல்ல. கடைசி நாள், உங்கள் கட்சித் தலைவர் கொஞ்சம் கோபமாகி விடுவார். நான் அதற்குமேலே கோபமாகி பதில் சொல்வேன். அதனால், சுமூகமாக முடிக்கலாம் என்றுதான் சொன்னேன். நீங்கள் பேசுங்கள்.



1997 ஏப்ரல் 28]

**Thiru M. Abdul Latheef:** No, No. This is an Appropriation Bill, and it would be most appropriate, if a chance is given to all the parties. That is why, I asked. He is a young Member and, therefore, he should be encouraged. That is why, I just signed and I do not fight with the Hon. Speaker.

**Mr. Speaker:** I know what is appropriate and I will abide by it. You are a senior Member, I will take your advice. I have only said that the method of approach should be proper. They should not bother the Hon. Chief Minister. Some people have the habit of approaching the Hon. Chief Minister and saying 'please ask the Speaker to give us an opportunity'. The Hon. Chief Minister has so much of work. Then they will approach the other Hon. Ministers. Then they will bring their party leaders to my Chamber and start arguing. This method should be avoided in future. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை வரவேற்று, நேற்றையதினம் தனது சொந்த மண்ணைப் பார்த்து வந்த ஆனந்தத்திலே அமர்ந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்பது கடைமடைப் பகுதியாகும். பெரும்பாலும் கடற்கரை ஓரமான பகுதியாக இருப்பதால், காவிரியிலே நீர் திறந்துவிட்டால், அங்கே நீர் வந்து சேராமல் வழியோரங்களில் உள்ளவர்கள் நீரைத் திறந்துவிடுவதால், விவசாயம் பொய்த்து விடுகிறது. ஆகவே, காவிரி நீரைத் திறந்துவிட்ட பிறகு கடைமடைப் பகுதிகளுக்கு வந்து சேரும் வரை மேலேயுள்ளவர்கள் அந்த நீரை எடுக்கக்கூடாது என்ற உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நாகையிலே, தொழில் துறையினுடைய வளர்ச்சி போதுமானதாக இல்லை. பல தொழிற்சாலைகள் அங்கிருந்து பிற மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டும், சில தொழிற்சாலைகள் மூடப்பட்டும் வேலைவாய்ப்பை இழந்து அங்கே மக்கள் அவதிப்படுகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நாகை-காயிதே மில்லத்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1997 ஏப்ரல் 28

மாவட்டத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதேபோல, சமையலுக்குப் பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெய்க்கு வரிவிலக்கு அளிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிற மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய்க்கு அதிகமான வரி விதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல, திருமண அழைப்பிதழ்கள் மற்றும் வாழ்த்து அட்டைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி, முறையாக இல்லை. பிரின்ட் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகளுக்குக் குறைவாகவும், வரி இருப்பதால், பிரின்ட் செய்யப்படாத வாழ்த்து அட்டைகளுக்கு அதிகமாகவும் பிரின்ட் செய்யப்பட்டது என்று கூறி, வணிகர்கள் விற்பனை செய்வதற்கு வாய்ப்பாக இருப்பதால், ஒரேவிதமான வரியை விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நாகைப் பகுதியிலே மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசல் அளவு போதவில்லை என்ற கருத்து அந்த மக்களிடையே இருந்து வருகிறது. அதுகுறித்தும் அவர்கள் இந்த அரசை அணுகி வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களது கருத்தை இந்த அரசு பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, நாகூரில் வெட்டாற்றின் குறுக்கே உள்ள பாலம் சுமார் 130 வருடங்களைத் தாண்டிய பழைய பாலமாகும். அது மிகவும் பழுதுபட்ட நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அதையும் புதுப்பித்து கட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கப்படுவதைப்போல, நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்கும் தொகுப்பு வீடுகளை வழங்கி அவர்களுடைய துயரைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 28] [திரு. ஜி. நிஜாமுதீன்]

சற்று முன்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் வேண்டுமென்று. நமது அண்டை மாநிலமான பாண்டிச்சேரியிலேகூட, அங்கேயுள்ள இதே திராவிட முன்னேற்றக் கழக அரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குக் குளிர் சாதன வசதியையும், உறுப்பினர்களுக்குக் கார் வசதியையும் வழங்கியிருக்கின்றது. இங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆண்டு கொண்டிருக்கின்றது. குளிர்சாதன வசதியைச் செய்து தரவில்லையென்றாலும் பரவாயில்லை; கார் வசதியைச் செய்து தரவில்லையென்றாலும் பரவாயில்லை, ஒரு உதவியாளரையாவது கொடுங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களே, திருவாரூரில் திருமண நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "உறவினர்களைவிட, நண்பர்களைவிட, எனக்குக் கட்சிதான் பெரிது" என்று குறிப்பிட்டார்கள். அப்படி கட்சியைப் பெரிது என்று நினைக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தங்கள் கட்சிக்காரர்கள் தவறு செய்தால், யார் என்றும் பாராமல், தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். இந்த நேரத்தில் அவர்களுக்கு, 25-ஆம் தேதி நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இளையாங்குடியிலே சில அடிப்படை வசதிகளைக் கோரி தாசில்தார் அலுவலகத்திற்குச் சென்ற மக்கள், காவல் துறையினரால் தாக்கப்பட்டு, தடியடி நடத்தப்பட்டு, சிலர் கைது செய்யப்பட்டு, மீண்டும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்ட மக்கள், அடிபட்டவர்கள் தண்ணீர் கேட்கும்போது, ** என்று காவலர் கூறியிருக்கிறார். இது போன்ற சம்பவங்களை கவனத்தில் கொண்டு, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு விவாதிக்கப்படுகின்ற நேரத்தில், ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு துறையைப் பற்றி சில கருத்துக்களைக் கூறக்கூடும். நான் ஏற்கெனவே அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்; எல்லா அமைச்சர்களும் அவையிலே இருந்தால், அவர்களுடைய துறைகளைப் பற்றி உறுப்பினர்கள் விமர்சிக்கின்ற நேரத்தில் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும் என்று. எனவே, தயவு செய்து எல்லா அமைச்சர்களும் அவைக்கு வரவேண்டுமென்று வேண்டி, விரும்பி, விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. வேலாயுதன் அவர்கள் சரியாக 5 மணித்துளிகளுக்குள் பேசி முடித்து விடவேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை நான் ஆதரித்து வரவேற்கின்றேன். இன்று, பத்திரிகையிலே, அன்னிய நாட்டைச் சேர்ந்த 15 பேர் தமிழகத்திற்கு வந்தபோது கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கின்றது. இதேபோன்று, பாரத நாட்டின் பல இடங்களிலேகூட இதற்கு முன்னால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அவர்கள் நம்முடைய நாட்டிற்கு வருவதற்கு முன்னாலேயே, அவர்களைத் தடுக்க, அல்லது கைது செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், மாவட்டத்தினுடைய மத்தியப் பகுதியாகிய, தக்கலையில் அரசு மருத்துவமனை ஒன்று, கிட்டத்தட்ட வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்டது; 103 ஆண்டுகள் ஆகின்றன. அதனுடைய தாய்க் கட்டிடம், ஏராளமான அளவில் சேதமடைந்திருக்கிறது. அதைச் சரிசெய்து தரவேண்டுமென்று கேட்டதன் அடிப்படையில், அரசாங்கத்தின் அதிகாரிகள் வந்து பார்வையிட்டு, அதனைக் கட்டித்தர, அரசாங்கத்திற்கு அதன் இசைவைக் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே, அரசு, அதை வெகுவிரைவில் கட்டித் தரவேண்டும். அது மாவட்டத்தினுடைய மத்தியப் பகுதி என்பது





மட்டுமல்ல; தேசிய நெடுஞ்சாலையோடு சேர்ந்திருக்கிற மருத்துவமனை. அந்தப் பகுதியில் ஏராளமான விபத்துக்கள் நடந்தாலும்கூட, விபத்திற்குள்ளானவர்களை உடனே அங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கு வாய்ப்புள்ள இடம். தற்போது அங்கு வரக்கூடிய, விபத்துக்குட்பட்டவர்களை, மருத்துவர்கள், மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய நிலை இருக்கிறது. எனவே அதை உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. காவல் துறை மானியத்திலேகூட நான் கேட்டிருந்தேன். என்னுடைய மாவட்டத்தில், மாவட்டத் தலைமை மருத்துவமனையாகிய கோட்டாறு அரசு மருத்துவமனையில், கடந்த ஆண்டு ஒரு கைதி அவனுடைய எதிரிகளால் ஏற்கெனவே அடிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டு, ஆஸ்பத்திரியிலே நோயாளியாக அனுமதிக்கப்பட்டபோது, அந்த ஆஸ்பத்திரியிலேயே வந்து, அவனுடைய எதிரிகள், அவனை வெட்டிக் கொலை செய்துவிட்டார்கள். காவலாளிகள் இரண்டு பேர்; காவலுக்கு இருந்த அவர்கள்மீது, நடவடிக்கை எடுத்து, அவர்கள்கூட பணிநீக்கம் செய்யப்படப்போவதாக அறிகிறேன். அந்த அளவுக்கு அந்த விஷயம் முற்றியிருக்கிறது. எனவே, அரசாங்கம் ஒவ்வொரு தலைமை மருத்துவமனையிலேயும் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க, உள்நோயாளிகளாகவுள்ள அந்தக் கைதிகளைப் பாதுகாக்க, அவர்களுக்குச் சிகிச்சையளிக்க, தனியாக ஒரு 'வார்டு' அமைத்தால், காவலர்கள் அவர்களைப் பாதுகாக்க ஏதுவாக இருக்கும். நூற்றுக்கணக்கான மக்கள் சிகிச்சை பெறும்போது, அவர்களைப் பார்க்க நிறைய பேர்கள் வரும்போது, அவர்கள் யாரைப் பார்க்க வருகிறார்கள் என்பதைக் கவனிப்பதற்குக் காவலர்களுக்குக் கடினமாக இருக்கிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையிலும், இதுபோன்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தினால், இத்தகைய கோரமான சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இருக்க வாய்ப்பாக இருக்குமென்பதால், அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. காவல் துறையைப் பொறுத்தமட்டில், நம் நாட்டினுடைய பாதுகாப்பு, அவர்களுடைய கையிலேதான் இருக்கிறது. ஆங்காங்கே நடக்கக்கூடிய, சாதி சமயக் கலவரங்களில், சில காவலர்கள், அவர்களுடைய சாதியைப் பார்த்து, அல்லது சமயத்தைப் பார்த்து, ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறார்கள்

என்றெல்லாம்கூட செய்தி இருக்கிறது. எனவே, அரசாங்கம், காவல் துறையைப் பொறுத்தமட்டில், அவர்களைப் பணிக்கு எடுக்கும்போது, சாதி சமய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிறார்களா என்பதைக் கண்காணித்து, அவர்களுக்கு சாதி சமய உணர்வுகள் எந்தெந்த வகைகளிலெல்லாம் வர வாய்ப்பிருக்கிறது. அவற்றை எப்படிப் போக்க வேண்டும் என்பதற்கெல்லாம் பயிற்சி கொடுத்து, சாதி சமய உணர்வுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு அவர்கள் இந்த நாட்டினுடைய நலனுக்காக, அனைத்து மக்களையும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய சூழ்நிலையோடு அவர்களுக்குத் தக்க பயிற்சியளித்து, அந்தக் கண்ணோட்டத்தில், அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையில், இதுபோன்ற சாதி சமய உணர்வுகளுக்கு இடம்கொடுக்கும் வகையில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள்மீது வரக்கூடிய புகார்கள் உண்மைதானா என்பதைத் தக்க முறையில் பரிசீலித்து, உண்மையிலேயே அவர்கள் அப்படி இருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்து, அப்படியிருந்தால், அது நம்முடைய நாட்டிற்குக் குந்தகமாக அமையும் என்று கருதி, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், எங்களது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு ஒரு ரப்பர் தொழிற்சாலையை அமைத்துத்தர ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அது வருவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று தெரியாது. ரப்பர் சம்பந்தமான சிறுதொழில்களை, ஆங்காங்கே வெகுவிரைவிலே, மற்ற நாடுகளினுடைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அவற்றை ஆரம்பித்தால், அந்த மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலேதான், உலகத்திலேயே, மிகவும் நயமான ரப்பர் உற்பத்தியாகிறது. அந்த ரப்பர், வேறு மாநிலங்களுக்கு, வேறு நாடுகளுக்குச் செல்லாமல், நம்முடைய மாவட்டத்திலேயே, அவற்றைப் பயன்படுத்தி குறைந்த விலையிலேயே, 'கார் புஷ்' போன்றவற்றையெல்லாம்-- குடிசைத் தொழிலாகவே இங்கு உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள்; எனவே, அவற்றை-- இங்கேயே செய்தால், எங்களது மாவட்டத்து மக்கள் அதிகமாகப் பயனடைய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டம், ஓரளவுக்குச் செழிப்பாக இருந்தாலும், அடிக்கடி தண்ணீர்ப் பஞ்சம் வரும்போது, வெகுவிரைவிலே பாதிக்கப்படுகிறது. காரணம், செழிப்பாக வாழ்பவர்கள், ஓரளவுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டாலுங்கூட, அதிகமான உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இந்தப் பிரச்சினை தீர்வதற்கு, எங்களது மாவட்டத்தில் பல ஆண்டுகளாகவே கோரிக்கை நிலையில் உள்ள மாம்பழத்து அணைத் திட்டத்தை, வெகுவிரைவிலே, முடித்துத் தந்தால், கன்னியாகுமரி மாவட்டம், நல்ல ஒரு செழிப்பான நிலைக்கு உருவாகி வறுமையிலிருந்து விடுபட்ட ஒரு மாவட்டமாகி, எப்படிப்பட்ட தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டாலும் அதனால் அங்கே பாதிப்பு வராத நிலை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அது என்னுடைய தொகுதியிலே அமைந்திருக்கிறது; என்னுடைய தொகுதிக்கென்று இதுவரை எதுவும் விசேஷமாகச் செய்யவில்லை என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கருத்திற்கொண்டு, வரக்கூடிய நிதியாண்டில், மாம்பழத்து அணைத் திட்டத்தைச் சேர்த்து, எங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன்.

*" வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித் திருநாடு*
*வந்தே மாதரம், வந்தே மாதரம்'.'*

*" பாரத் மாதா கி ஜே!"*

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக அரசினுடைய இடஒதுக்கீட்டுக் கொள்கையானது 69 சதவிகிதத்தை வலியுறுத்துகிற வகையிலே உறுதிப்பாடாக இருக்கிறது என்பதை நான் வரவேற்கின்ற அதே நேரத்திலே இந்த மாமன்றத்தின் மூலமாக உடனடியாக நாம் செய்திட வேண்டிய ஒரு கட்டாயக் கடமையைக் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு இந்தச் செய்தியினை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு 22-7-1996-லேயும், 14-8-1996-லேயும் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்புக்களின் வாயிலாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு ஒரு பேராபத்து வந்துகொண்டிருப்பதை நாம் அனைவரும் ஆழ்ந்த கவலையோடு சிந்திக்க வேண்டிய ஒரு கடமை ஆகும். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது மொத்த இட ஒதுக்கீடானது 50 சதவிகிதத்திற்கு மேலே இருக்கக்கூடாது என்பதையும், அதேபோல பிற்படுத்தப்பட்டோரிலே உள்ள வளர்ந்த பிரிவினரை அந்தப் பட்டியலிலே இருந்து நீக்கிவிட வேண்டும் என்றும் அதேபோல 15-11-1997 முதல் பதவி உயர்விலே இட ஒதுக்கீடு முறை இருத்தல் கூடாது என்றும் இந்த 3 ஆபத்தான செய்திகளை அந்த உச்சநீதிமன்ற தீர்ப்புகள் வழங்கியிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த வகையிலே இன்றைக்கு உச்சநீதிமன்றம் செய்த வரையறை என்றாலும்கூட, அது நீதித்துறை செய்த ஒரு சட்டம் என்ற முறையிலே அரசியல் சட்டத்திற்கு ஒப்பான வலிமையுடையது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதுகுறித்து நாம் என்ன செய்திடல் வேண்டுமென்பது பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு, தமிழகத்திலே உள்ள இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையிலே ஆழ்ந்த பற்றுள்ள பெரியாரிய-- மார்க்சிய பொதுவுடமைக் கட்சியினுடைய பொதுச் செயலாளராக இருக்கிற ஐயா ஆனைமுத்து அவர்கள்கூட இதுகுறித்து மனு அனுப்பியிருப்பதாக நாங்கள் அறிகிறோம். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் 1995-லே நாடாளுமன்றத்திலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்திருத்தத்தின் மூலம் பதவி உயர்விலே இட ஒதுக்கீடானது இருந்திடல் வேண்டும் என்பதை அவர்கள் அத்திருத்தத்தின் மூலமாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. 15-11-1997-க்குப் பிறகு பதவி உயர்விலே இட ஒதுக்கீடானது இல்லாமல் போகிற ஒரு ஆபத்து இருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த நாடாளுமன்றக் கூட்டத்திலேயே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பதவி உயர்விலே அந்த இட ஒதுக்கீடானது நீட்டிக்கப்பட வேண்டுமென்பதற்கு நம்முடைய தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒரு திருத்தத்தை நாடாளுமன்றத்திலே முன்மொழிந்து அந்த முறையை தக்க வைத்துக்கொள்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, இந்த இட ஒதுக்கீடு முறையானது பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால் மாற்று ஏற்பாடு ஒன்றுதான் அதற்குச் சாலச் சிறந்தது. கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த இட ஒதுக்கீட்டைக் காப்பாற்றிவிடுகிறோம் என்று ஒரு பொய்யான வாக்குறுதியை மக்கள் மத்தியிலே சொல்லி, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை அரசியல் சட்டத்தின் விதி 31(பி)-யின்கீழ் ஏற்றி அது நீதிமன்றத்தினுடைய ஆய்வுக்கு ஆட்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக 31(சி)-யின்கீழ் அதை உருவாக்கி, இதை இந்திய அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையின்கீழ் சேர்த்துவிட்டால் நம்முடைய 69% இட ஒதுக்கீடானது பாதுகாக்கப்பட்டுவிடும் என்று சொல்லி, கடந்த ஆட்சிக் காலத்திலே ஒரு மாயையான, போலியான ஒரு சூழல் உருவாக்கப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது. எங்களுடைய கட்சியின் நிறுவனராக இருக்கிற டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் கடந்த ஆட்சிக் காலத்திலே இந்தப் பிரச்சினை குறித்து ஆழ்ந்த கவலையோடு இதிலே ஈடுபட்டு இந்த 69% இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கிற நடவடிக்கையிலே ஈடுபட்டதையும் நாம் மறந்துவிட இயலாது.

முற்பகல் 11-50

ஆனால், இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசானது 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கடந்த ஆண்டு வழங்கியிருந்தாலும்கூட, அதுகூட உச்ச நீதிமன்றத்தில் யாராவது வழக்கு போடுகின்றபோது அடிபட்டுப் போகின்ற ஒரு ஆபத்து இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதை எல்லாம் திருத்திடல் வேண்டும். இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டை பாதுகாத்திடல் வேண்டுமென்று சொன்னால் ஒரு மாற்று ஏற்பாடாக இந்த மாமன்றத்தின் மூலமாக நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மைய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திட தமிழக அரசு முன் வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், இன்றைக்கு இருக்கின்ற இட ஒதுக்கீட்டை முழுமையாக 100 சதவீதத்தையும் நாம் வகுப்பு வாரியாகப் பிரித்து வழங்குகின்ற வகையிலே அதற்கான திருத்தத்தை

நாடாளுமன்றத்திலே கொண்டு வந்தாலொழிய, அரசியல் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்தாலொழிய இந்த இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க முடியாது என்பதுதான் உண்மையான நிலவரம் என்பதை நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1921-லேகூட தமிழ்நாட்டில் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டமானது இயற்றப்பட்டு, 1927-லே அமலாக்கப்படுகிறபோது 100-க்கு 100 பங்கீடு செய்யப்பட்டதை நாம் மறந்துவிட இயலாது. ஆகவே, அந்த அடிப்படையிலே எப்படி ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு ஒரு சிறப்பு ஏற்பாடு அரசியல் சட்டத்திலே உருவாக்கப் பட்டிருக்கிறதோ அதேபோல, ஒரு சிறப்பு ஏற்பாட்டை இந்த இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நாம் செய்திடல் வேண்டும் என்று நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வழியாக, ஒரு மாற்று ஏற்பாடாக, இருக்கின்ற 100 சதவிகித இட ஒதுக்கீட்டையும் 9 சதவிகித பிரிவினருக்கும் பிரித்து வழங்குகின்ற வகையிலே, முதலாவது பிரிவினரான பார்ப்பனர்களுக்கு 4 விழுக்காடும், பார்ப்பனர் அல்லாத இந்து முற்பட்ட வகுப்பினருக்கு 11 விழுக்காடும், இந்து பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 44 விழுக்காடும், (மணியடிக்கப்பெற்றது) தாழ்த்தப்பட்டோர்களுக்கு 17 விழுக்காடும், பழங்குடியினர் இனத்திற்கு 7.5 விழுக்காடும், இஸ்லாமிய முற்பட்ட பிரிவினருக்கு 3 விழுக்காடும், அதிலே இஸ்லாமிய பிற்பட்ட பிரிவினருக்கு 8 விழுக்காடும், கிருஸ்துவர், ஒடுக்கப்பட்டோர், தலித் பிரிவினருக்கு 1.5 விழுக்காடும் கிருஸ்துவர் முற்பட்ட வகுப்பினருக்கு 1 விழுக்காடும், சீக்கியர்களுக்கு 2 விழுக்காடும், பௌத்தர், சமணர், பார்சி ஆகியவர்களுக்கு ஒரு விழுக்காடும், ஆக இப்படியாக அந்த 100 விழுக்காட்டையும் பிரித்து வழங்குகின்ற வகையிலே இந்திய அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டு வருவதற்கு தமிழக அரசு சட்டப் பேரவை மூலமாக ஒரு தீர்மானத்தை இயற்றி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 17 சதவீதம் கொடுக்கவேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார். ஏற்கெனவே, இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதமும்





மலைவாழ் மக்களுக்கு 7½ சதவிகிதமும் மத்திய சர்க்கார் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைக் குறைக்கச் சொல்லவில்லை. அதனாலேதான் தலித் கிருஸ்தவர்கள் என்று சொல்லி, 1.5 விழுக்காடு என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதேபோல செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் இவ்வளவு பிரிவினர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்று சொன்னேன். அதேபோல தமிழகத்திற்கு என்று இந்த இட ஒதுக்கீட்டுப் பிரிவினையைச் செய்கிறபோது நாம் அதற்கு ஏற்றாற்போல் மாற்றம் செய்வதற்கு வழிவகை செய்திடல் வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆகவே அரசியல் சட்டம் திருத்தப்பட்டாலொழிய இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு எந்தவிதமான பாதுகாப்பும், உத்தரவாதமும் இல்லை என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து ஆகும். ஆகவே, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே, இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னோடியாகத் திகழ்கின்றவரும் முதன்மையாகத் திகழ்கின்றவரும் இந்த இட ஒதுக்கீடு எந்தக் காலத்திலும், எந்தக் காரணத்தாலும் பறிக்கப்படக் கூடாது என்பதிலே அழுத்தந்திருத்தமாக நம்பிக்கை கொண்டவருமானவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை உறுதியாக நாங்கள் நம்புகிறோம். ஆகவே இவர்தான்--ஏனென்றால் பல மாநிலங்களிலே இன்றைக்கு 50 சதவீதத்திற்கு மேலே இட ஒதுக்கீடு இருக்கிறது. அவை எல்லாம் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு ஒரு பேராபத்து இருக்கிறது--தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஒருவரால்தான் இந்தச் சூழ்நிலையில் இந்திய மாநிலங்கள் அனைத்துக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பாதுகாத்துத்தர முடியும் என்பதை நாங்கள் அழுத்தந்திருத்தமாக சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆகவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சிறப்புக் கூட்டத்தையாவது அல்லது இந்தக் கூட்டத் தொடரிலேயாவது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நாடாளுமன்றத்திற்கு, தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைக்க ஆவன செய்திடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்][1997 ஏப்ரல் 28 முற்பகல் 11-55*

அதேபோல காவிரி நீர்ப் பிரச்சினையிலேகூட, உடனடியாக அந்த இடைக்காலத் தீர்ப்பை அவர்கள் அமல்படுத்துவது குறித்து இப்போது மாநிலங்களுக்கு தாக்கீது அனுப்பி, அதன் பேரில் அவர்கள் ஏதோ செய்ய இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்களுக்கு என்னவோ அதிலே நம்பிக்கையில்லை. ஏனென்றால், கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் அல்லது நடுவர் மன்றத் தீர்ப்பையும் அவர்கள் மதிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், உடனடியாக அந்த இடைக்காலத் தீர்ப்பை அரசிதழிலே வெளியிட்டு, அதன் மூலமாக கர்நாடக மாநிலத்திற்கு ஒரு நெருக்கடியை அல்லது வற்புறுத்தலைச் செய்யும் வகையிலே அரசிதழிலே வெளியிடுவதற்கு தமிழக அரசு ஆவன செய்திடல் வேண்டும். அதிலே கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கச்சத் தீவுப் பிரச்சினையைக்கூட நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் தீர்த்து வைக்க வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்னாலேகூட நான் இது குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தேன். ஆனால், அது நேரம் இல்லாத காரணத்தினாலே, எடுத்துக்கொள்ளப்படவில்லை. நம்முடைய மீனவர்களும் அந்தப் பகுதியிலே போய் மீன்பிடிக்க முடியவில்லை. அதேபோல அங்கே பல பிரச்சினைகள் இருக்கின்றன. வழிபாடு நடத்துவதற்கான பல தடைகளெல்லாம் கூட, இன்றைக்கு செயற்கையாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தநேரத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்று சொன்னால், 1974-லே நீங்கள் மீன்பிடிக்கின்ற உரிமையையும் அதுபோல வழிபாடு நடத்துகின்ற உரிமையையும் பெற்றுத் தந்தீர்கள். ஆனால், அதற்குப் பின்னால், ஆளுநர் ஆட்சிக் காலத்திலே, அவசர நிலை காலத்திலே அந்த உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. எனவே, தமிழகத்தினுடைய உரிமையை மீட்க வேண்டுமென்று சொன்னால், அது தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருவராலே மட்டும்தான் முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இப்போது நீங்கள் அமைத்திருக்கிற, உங்களுடைய ஆதரவிலே



*1997 ஏப்ரல் 28][திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]*

அமைந்திருக்கிற ஒரு ஆட்சி இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தினாலே, உங்களுடைய செல்வாக்கினைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குப் பிரதமராக மாண்புமிகு திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இது போன்ற எல்லாவிதமான பிரச்சினைகளிலும் நல்ல ஈடுபாடு கொண்டவர், விவரம் அறிந்தவர். ஆகவே, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, இழந்த அந்த உரிமைகளை மீண்டும் பெற்றுத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய அலுவலகங்களுக்குப் போனால் மரியாதையே இருப்பதில்லை. மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடிய நாங்கள் போனால், எங்களை ஒரு மாற்றாந்தாய் பிள்ளைகளைப் போல அங்கு இருப்பவர்கள் பார்க்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலோ அல்லது முடியாவிட்டால் வட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ ஒரு அறையை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்......(குறுக்கீடு)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** ஊராட்சி ஒன்றியத்திலே கொடுக்க வேண்டுமென்று கேளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஊராட்சி ஒன்றியத்திலேதான் நான் கேட்கிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே ஒதுக்கித் தந்தாலும் பரவாயில்லை, அல்லது வட்டாட்சியர் அலுவலகத்திலேயாவது எங்களுக்கு ஒரு அறையினை ஒதுக்கி, மக்களுக்காக சேவைகளைச் செய்வதற்கு எங்களுக்கு நீங்கள் ஒரு வாய்ப்பு அளிக்க ஆவன செய்திடல் வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டு மசோதா மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தப்

புதிய ஆட்சி அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கடந்த 11 மாத காலமாக, செம்மையாக, சீராக தமிழகத்திலே ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஏழை ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட இலவச வீடுகளைக் கட்டுகின்ற திட்டத்தில் ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தவர்கள் பல கோடி ரூபாயைச் சூறையாடி விட்டார்கள். வீடுகளைக் கட்டவில்லை. அவைகளைப் பயனாளிகள் கூட எடுக்கவில்லை. ஆங்காங்கு இருக்கின்ற அந்தக் கட்சியினுடைய பிரமுகர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு, ஆதிதிராவிட மக்களுடைய நலன் கருதி ரூ. 50 கோடியை ஒதுக்கி இவைகளையெல்லாம் கட்டித் தாருங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய இருக்கையில் போய் உட்கார வேண்டும்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** எடுத்துச் சென்றவர்களிடமிருந்து பிறகு வசூலிக்கலாம் என்கிற நிலையிலே நடவடிக்கை எடுத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே அல்ல. ஏற்கெனவே ஓடு போட்டு கட்டிய வீடுகள் எல்லாம் இப்போது பாழடைந்து இருக்கின்றன. எனவே, அதற்குப் பல கோடி ரூபாய்களை இந்தத் திட்டத்திலே ஒதுக்கி, அதற்கான துரித திட்டத்தினை நம்முடைய ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. இன்றையதினம் இந்த ஆட்சி தமிழகத்திலே செம்மையாக, நடைபெற்று வருகின்றது. ஏழை, எளிய மக்கள், விவசாயிகள் ஆதிதிராவிட மக்கள், பாட்டாளிகள் மற்றும் பிற்பட்டவர்களிடத்திலே நல்ல பெயரை எடுக்கின்றது என்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத் சிலர், எப்படியாவது மக்களுடைய கவனத்தை வேறு திசையிலே திருப்ப வேண்டுமென்கிற காரணத்தினாலேதான், இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் படித்தால், டெல்லியிலே சர்க்காரியா என்கிறார்கள்.

*நண்பகல் 12-00*

இந்த அவையிலே சர்க்காரியா கமிஷனைப் பற்றி எல்லாம் பேசுகிறார்கள். இவையெல்லாம் தேவைதானா? இந்த 11 மாத கால ஆட்சியில் என்ன தவறு நடந்திருக்கிறது? இந்த ஆட்சி எதைச் செய்யவில்லை? எதைச் செய்ய இந்த ஆட்சி தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவார்களேயானால் நிச்சயமாக,





ஆளுங்கட்சியிலே இருக்கின்ற நாம் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், சர்க்காரியா கமிஷனில் புகார் கொடுத்தவரே 'எனக்குத் தெரியாது, இது வேறு ஒருவர் கொடுத்தது' என்று சொல்லி, இன்று அவை பரண் மேல் ஏறிவிட்ட நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தேர்தல் நேரத்தில் விவசாயிகளிடம் நாம் வாக்குகள் கேட்கின்ற நேரத்திலே அவர்கள் என்ன சொன்னார்கள்? கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் கரும்பு பயிரிடச் சொன்னார்கள்; நாங்களும் கரும்பைப் பயிரிட்டு விட்டோம். ஆனால் கரும்பை வெட்டுவதற்கு எந்த ஆலையும் முன்வரவில்லை. எப்படியாவது ஆலைகளில் கரும்பை வெட்டி எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். உடனேயே நம்முடைய முதல்வர், வேளாண்மைத் துறை அமைச்சர், ஆகியவர்களுடைய முயற்சிகளால், கூட்டுறவுத் துறை ஆலைகளுக்கும், தனியார் ஆலைகளுக்கும் விவசாயிகளுடைய கரும்புகள் அனைத்தும் வெட்டி அனுப்பப்பட்டன. பிறகு நிலைமை என்ன? அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. கூட்டுறவுத் துறை ஆலைகளில் பணம் இல்லை. தனியார் ஆலைகளிலும் சில ஆலைகளில் பணம் கொடுக்காமல் இருந்தார்கள். ஆனால், நம்முடைய அரசு எடுத்துக்கொண்ட உரிய நடவடிக்கையின் காரணமாக, இன்றையதினம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைத்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டப் பகுதியில் ஒரு ஆலையில் பணம் கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். முதல்வர் அவர்கள் அந்த நேரத்திலே சொன்னார்கள். 'இது விவசாயிகளுடைய ஆட்சி; நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்; உங்களுடைய பணம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்' என்றார்கள. இன்றைய தினம் பணம் கிடைத்துவிட்டது. இப்போது அனுப்பப்பட்ட கரும்புகளுக்குக்கூட அந்த ஆலையின் அதிபர் பணம் கொடுக்கக்கூடிய நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே நன்றியுள்ளத்தோடு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில், இங்கேகூட பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, கரும்புக்கான விலையை உயர்த்தித் தாருங்கள்

என்றார்கள். நாம் தேர்தல் நேரத்திலேயே இதுபற்றிச் சொல்லியிருந்தாலும், இந்த ஆட்சியினுடைய 5 ஆண்டுக் காலத்தில் உரிய விலையைத் தரும் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில் விவசாயிகள் சார்பில் ஒரு சிறு வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன். இப்போது 10 கிலோமீட்டர் தூரத்திற்கு கரும்பை எடுத்துச் செல்லும் செலவை ஆலை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளாது, விவசாயிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 10 கி.மீ. அல்லது 10 கி.மீட்டருக்கு மேல் என்று வரையறை ஏதுமின்றி, விவசாயிகள் ஆலைகளுக்குக் கரும்பை எடுத்துச் செல்லுகின்றபோது, அதற்கான போக்குவரத்துச் செலவை, கூட்டுறவுத் துறையானாலும் சரி, தனியார் ஆலையானாலும் சரி, அந்த ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிபுரியும் வகையில் நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, என்னுடைய மாவட்டத்திற்கு புதிய சர்க்கரை ஆலையைத் தந்திருக்கின்றீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய மாவட்டத்திற்கு செண்பகத்தோப்பு அணை, குப்பநத்தம் அணை ஆகியவற்றையும், அதேபோன்று தீயணைப்பு நிலையங்கள் புதிய காவல் நிலையங்கள் ஆகியவற்றையும் தந்திருப்பதற்கு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது, கள்ளச்சாராயம், கள்ளச்சாராயம் என்று கூறினார்கள். ஏதோ, இந்த 11 மாத காலத்தில்தான் கள்ளச்சாராயம் அதிகமாகி விட்டது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று சிலர் துடிக்கின்றார்கள். நான் ஒரு சிறிய நிகழ்ச்சியைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் இதிலே கடுமையாக இருக்கிறார். சில அதிகாரிகள் கடுமையாக இருக்கிறார்கள். கள்ளச்சாராயத்தை அறவே ஒழிக்க வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். அதை நாம் மறுக்க முடியாது. ஆனால், காவல் துறையிலே எல்லோருமே கள்ளச்சாராயத்தைத் தீவிரமாக ஒழிக்கின்ற எண்ணத்துடன் இருக்கின்றார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். கடந்த 11 மாத காலத்தில்தான் கள்ளச்சாராயம் பெருகிவிட்டது



என்று நாம் நினைக்கக்கூடாது. 1965-ஆம் ஆண்டிலே அப்போது திருவண்ணாமலையில் ஒரு காவல்துறை அதிகாரி இருந்தார். நான் அப்போது ஒன்றியத்தினுடைய துணைத் தலைவராக இருந்த நேரம். என்னுடைய தொகுதியில் மாண்புமிகு திரு. முருகையன், சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது அந்த அதிகாரியைப் போய் நாங்கள் பார்த்தோம். அந்த அதிகாரியிடம் சட்டமன்ற உறுப்பினர், என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அப்போது அந்த அதிகாரி ஏன் உங்கள் பகுதியிலே எதுவுமே பிரச்சினை இல்லையா, நான் இங்கே பொறுப்பேற்று ஆறு மாத காலமாகிறது, நீங்கள் இதுவரை என்னைப் பார்க்க வரவில்லையே என்றார்கள். அப்போது நான் மதுவிலக்கு அமலில் இருக்கிறதா இல்லையா என்பதுதான் என்னுடைய சந்தேகம் என்று சொன்னேன். உடனேயே அவர் உங்கள் பகுதியில் இருக்கும் சில ஊர்களுடைய பெயர்களை எழுதித்தாருங்கள், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். அவர் நேர்மையான அதிகாரிதான், அதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், எழுதித் தந்ததற்குப் பிறகு நான் ஊருக்குச் செல்லுகின்ற வழியில் அந்தக்காவல் நிலையத்திலிருந்த காவலர்கள் கிராமம் கிராமமாகச் சென்று இதுபோன்று துரை அவர்கள்--அவர்கள் காவல் அதிகாரியை துரை என்று சொல்கிறார்கள்--நடவடிக்கை எடுக்க வருகிறார்கள். அதுவரையில், கள் இறக்க வேண்டாம், தெளிவு இறக்குங்கள் என்று சொல்லிவிட்டு வருகிறார்கள். அப்படி வருகின்ற அந்தக் காவலர்களை நான் சந்திக்கின்ற வாய்ப்பு கிட்டியது. நீங்கள்தான் காவல் துறை அதிகாரியிடம் சொல்லியிருந்தீர்கள்; நாங்கள் அதற்காக எல்லா இடங்களுக்கும் சென்று தகவல் அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். நான் கேட்டேன், இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று. அந்தக் காவலர்கள் சொன்னார்கள், நீங்கள் டி.எஸ்.பி.யிடம் பேசிக்கொண்டிருக்கிறபோது, அங்கே இருக்கிற் ஆர்டர்லி எங்களுக்குத் தகவல் தருகிறார். நாங்கள் உஷாராகி விடுகிறோம், அந்த ஆர்டர்லிகளுக்கு மாமூல் கொடுக்கிறோம் என்று. இது 1965-ல் சொல்லப்பட்டது, 1997-லேயும் நீடிக்கத்தான் செய்யும். இதை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது. எனினும், கள்ளச் சாராயத்தை ஒழிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 28

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவாக இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும்கூட பார்த்தால், நம்முடைய ஆளுங்கட்சிக்காரர்கள்கூட இன்றையதினம் கள்ளச் சாராய அதிபதிகளாக இருப்பதில்லை. ஏற்கெனவே ஆட்சியிலிருந்தவர்களுடைய ஆதிக்கம்தான் இன்னும் கிராமங்களில் தொடர்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இறுதியாக ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கங்களில் ஏற்கெனவே ஆட்சியில் இருந்தவர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பினாமி பெயரில் கடன்களை வாங்கிச் சென்றிருக்கிறார்கள். அதனால், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படமுடியாத சூழ்நிலை இருக்கிறது. முழுமையாகச் சொல்ல வேண்டுமென்றால், நேரம் போதாது. ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் கமலபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்தின் கணக்கைப் பார்த்தால், 15 இலட்சம், 20 இலட்சம் ரூபாய் என்று ஒவ்வொருவரும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதனால் கூட்டுறவுச் சங்கம் நடைபெறுவதா இல்லையா என்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இது போன்றவைகளுக்காக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், உயர்பதவியில் உள்ள அதிகாரியை கூட்டுறவுத் துறையில் நியமனம் செய்து, இப்படிப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றையதினம், உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஒன்றியப் பெருந்தலைவர்கள், உள்ளாட்சித் தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்காக பல்வேறு மசோதாக்களை இந்த அவையில் தாக்கல் செய்திருந்தாலும், இந்த ஒன்றியக் குழுத் தலைவர்கள், ஒன்றிய அளவில் பணிகளை ஆற்றுகிறபோது, ஒவ்வொருநாளும், பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டிவரும். டி.ஏ. கிளெயிம் செய்ய



1997 ஏப்ரல் 28] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

முடியாது. ஆகவே குறைந்தபட்சம் 1500 ரூபாயாவது மாதம் பெறுகின்ற வகையில்--நிதி ஒதுக்கீடு அரசுக்குத் தருவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும்--ஒன்றிய நிதியிலிருந்து பெறுகின்ற அளவில் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், போன்றவர்களுக்கு நிர்ணயம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இறுதியாக, என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில் மின் அழுத்தக் குறைவு இருக்கிறது. இங்கே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். இதுபற்றி, சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகூட கொடுத்திருந்தேன். அந்தநேரத்தில் கவனித்தார்கள். மறுபடியும் மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற எங்கள் பகுதியில் அதிகமான அளவில் நெல் விளைகிறது. அதனால் உமி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு மூன்று நாட்களாக வடசென்னை, எண்ணூரில் இருக்கக்கூடிய அனல் மின் நிலையங்களிலே பழுதுகள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், 4800 மெ.வாட்டிலிருந்து 4100 மெ.வாட்டாக உற்பத்தி குறைந்துவிட்டது. இருந்தாலும்கூட, எல்லாப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்கு முறையாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், நாயுடுமங்கலத்தில் ஒரு துணை மின்நிலையம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

53-122—9

216657. D
V 21,31 N97
N97.354

பிற்பகல் 12-10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற்கண், கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, மே 1-ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த உள்ள சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகத்தை அமலாக்கிய தமிழக அரசுக்கு தங்கள் வாயிலாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீட்டினுடைய பங்கு என்ன என்பதைப்பற்றி வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று நான் தொடர்ச்சியாக இம்மாமன்றத்திலே வலியுறுத்தி வந்து இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்து, தமிழக அரசு இந்தக் கோரிக்கையினை ஏற்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 19 சதவித இட ஒதுக்கீட்டை முழுமையாக அமலாக்கக்கூடிய வகையில் வெள்ளை அறிக்கையையும் இம்மாமன்றத்திலே வைக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக நான் வற்புறுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

சென்னைக்கு அருகாமையில் திரிசூலத்திலே 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல் உடைக்கும் தொழிலாளர்கள் கடந்த 2 மாத காலமாக திடீரென்று வேலை இழந்து தவிக்கின்றார்கள். அவர்களுக்கு வேலை கிடைத்திடவும்-- அவர்களுக்கு, தாங்கள் செய்கின்ற தொழிலைத் தவிர வேறு எதுவுமே தெரியாத நிலையில்-- அவர்கள் பட்டினியால் வாடிக்கிடக்கின்ற நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திடவும் அரசு உடனடி நடவடிக்கை, தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, கயத்தாறு ஒன்றியத்தில் நடந்த பிரச்சினையைத் தொடர்ந்து, அமைக்கப்பட்ட மாணிக்கம் கமிஷனில், கடையநல்லூரில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 53 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு அவர்கள் விசாரிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிற சூழ்நிலையில் அங்கே பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகத்திலே இருக்கிறார்கள். எனவே, தமிழக அரசு அந்த மக்கள் எல்லோருக்கும் நீதி கிடைக்கக்கூடிய வகையில் ஒரு தகுந்த உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல ரேஷன் கடைகளில் இப்போது முழுமையாக 20 கிலோ அரிசி கொடுக்கப்படுவது இல்லை. இதனால் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்கள்தான். எனவே, குறைந்தபட்சம், அதிகபட்சம் என்று இல்லாமல் 20 கிலோ அரிசி எல்லாக் குடும்ப கார்டுகளுக்கும் கிடைப்பதற்கு ஆவன செய்யக் கேட்டுக்கொண்டு நான் விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக திரு. டி. அமரமூர்த்தி.

***திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பை அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டத்தில் தலைமை அலுவலகங்கள் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அரியலூரில் அமைப்பதாகச் சொன்ன 25 மாவட்டத் தலைமை அலுவலகங்களும் உடனடியாக அங்கு திறக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாவட்ட விளையாட்டு அரங்கையும் அரியலூரில் உடனடியாகத் திறந்திட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கத்தில், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில், பல கோடி ரூபாய் ஊழல் நடந்து இருக்கிறது. அன்றைய தலைவராக இருந்தவர் பல கோடி ரூபாய் ஊழல் செய்து சொத்துக்களைச் சேர்த்து இருப்பதாக தகவல் வந்து இருக்கிறது. உடனடியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தில் ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, கைது செய்து, சம்பந்தப்பட்ட சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் காவல் நிலையங்கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. போலீஸ் ஸ்டேஷனில் பணியாற்றுகின்ற போலீசுக்கே நியாயம் கிடைக்கவில்லை. உதாரணமாக, திருமானூர் காவல்

நிலையத்தில் பணியாற்றுகின்ற நல்லமுத்து என்கிறவர் தனது மகன் தவறான செயலில் ஈடுபடுகிறார் என்பதற்காக கூப்பிட்டு கண்டித்து இருக்கிறார். உடனடியாக பக்கத்தில் இருந்த ஒரு சமூக விரோதி, 'நீ என்னையா சத்தம் போடுகிறாய்' என்று கேட்டு அந்தப் போலிஸ்காரரைப் பேருந்து நிலையத்திற்கு முன்னாலே வைத்து அடித்திருக்கிறார். அந்தப் போலிஸ்காரர் உடனடியாக திருமானூர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் செய்திருக்கிறார். அந்தக் காவல் நிலையத்தில் பணியாற்றுகின்ற இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் என்பவரும், உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் என்பவரும், ஏட்டு மணி, ஏட்டு தட்சிணாமூர்த்தி ஆகிய நான்கு பேரும் சேர்ந்து கொண்டு புகார் செய்த அந்தக் காவலரை மிரட்டி, 'நீ அவர் மீது புகார் கொடுத்தால், அவரும் உன்மீது புகார் கொடுப்பார், உன்மீது புகார் வந்தால் உன்மீது எப்.ஐ.ஆர். போட்டு உன்னை சஸ்பெண்ட் செய்கிற நிலை ஏற்படும், ஆகவே நீ கொடுத்த புகாரை உடனடியாக வாபஸ் வாங்கிக்கொள்' என்று அந்த போலிஸ்காரரை மிரட்டி, புகாரை வாபஸ் வாங்க வைத்துவிட்டார்கள்.

*பிற்பகல் 12-15*

அதோடு மட்டுமல்ல அங்கே உன்னிகிருஷ்ணன் என்ற ஒருவர் இருக்கிறார். அவர் தனது இடத்தை அங்கே உள்ள அ.இ. அண்ணா தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஒருவருக்கு வாடகைக்கு விட்டிருந்தார். அந்த ஒன்றியச் செயலாளர் 10, 12, மாதங்களாக அந்த இடத்திற்கு வாடகைப் பணம் கொடுக்கவில்லை. இதைக் கேட்டதற்காக அந்த ஒன்றியச் செயலாளர், உன்னிகிருஷ்ணன் என்பவரைச் செருப்பாலேயே அடித்திருக்கிறார். அதற்குப் பின்னாலே உன்னிகிருஷ்ணன் என்பவர் காவல் நிலையத்திற்குப் போய் புகார் செய்ததற்குப் பின்னாலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நானும் இதுகுறித்துப் பலமுறை காவல் துறை கண்காணிப்பாளரிடமும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரிடமும் புகார் செய்தும், இன்றுவரை அந்தப் புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட திருமானூர் காவல் நிலைய ஆய்வாளர் மீதும் உதவி ஆய்வாளர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் உடனடியாக ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரவேண்டுமென்று நான் முதல் கூட்டத் தொடரிலேயே





முதலமைச்சர் அவர்களைக் கேட்டுகொண்டேன். இப்போது அங்கே இரண்டு தனியார் நிறுவனங்கள் அதற்கான அனுமதி கேட்டு விண்ணப்பத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எனது தொகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரண்மனை மானோடைப் பாலம் ஒன்றும், வெங்கனூருக்குப் புதியதாக காவல்நிலையம் ஒன்றும், வெங்கனூர் அருகில் புள்ளம்பாடி வாய்க்காலில் பாலம் ஒன்றும் வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் எனக்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. நான் இங்கே சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது, எனக்கு எந்தத் தகவலும் சொல்லாமலேயே அந்த அலுவலக அறையில் நான் பூட்டியிருந்த பூட்டை எடுத்துவிட்டு வேறு ஒரு பூட்டைப் போட்டு பூட்டிவிட்டார்கள். இதை அந்த அலுவலக மேலாளரும் கடைநிலை ஊழியர் ராமமூர்த்தியும்தான் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே சம்பந்தப்பட்ட அந்த ஒன்றிய மேலாளர் மீதும் கடைநிலை ஊழியர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ரெட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.) அ.இ.அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர். கடந்த தேர்தலில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா பிரச்சாரத்திற்கு வந்தபோது, அவர் உற்சாக பானம் அருந்திவிட்டு, அந்தப் பொதுச் செயலாளருக்குச் சால்வை அணிவித்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் பேசினார். அவர் சொன்ன வார்த்தை இது. 'மாண்புமிகு கலைஞர் அவர்களின் பெயரைச் சொல்லி, அவரோ அவரது சந்ததியினரோ எந்தக் காலத்திலும் ஆட்சிக்கு வரமுடியாது' என்று குறிப்பிட்டார். அந்த வி.ஏ.ஓ.வை உடனே பத்து பொதுமக்கள் சேர்ந்து அடிக்கப்போய்விட்டார்கள். அதற்குப் பின்னாலே இப்போது அவரே வெள்ள நிவாரணத்தில் ஊழல் செய்தார். நான், சம்பந்தப்பட்ட அவர் மீது ஊழல் புகாரை முதல்வரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கொடுத்தேன். கொடுத்ததும் அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால்

[திரு. டி. அமரமூர்த்தி] [1997 ஏப்ரல் 28

உடனே திரும்பவும் அதே ஊரில் அவரைப் பணியமர்த்தி விட்டார்கள். அவர் அங்கே இருக்கிற அரசாங்க நிலத்தையும் சுமார் 110 ஏக்கர் அளவுக்கு, அங்கே இருக்கிற அத்தனை புறம்போக்கு நிலத்தையும்--தனியார் பெயரில் பட்டா போட்டு அங்கே உள்ள சிமெண்ட் ஆலைக்கு விற்பனை செய்திருக்கிறார். இதில் பல கோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது கொடுக்கிற ரயில்வே பயணப்படி போதாது. ஆகவே, முதல்வர் அவர்கள் ரயில்வே பயணப் படியையும், டெலிபோன் படியையும் உயர்த்திக் கொடுக்கவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதை ஒதுக்குவதோடு, ஒரு உதவியாளரும், ஒரு டைப்பிஸ்டும் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக நியமித்துக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண நிதி ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். அதில் சில அதிகாரிகள் ஊழல் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அப்படி நடக்காமல் அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88-ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கையில் ஒரு விளக்கத்தை அரசாங்கத்திடமிருந்து பெற விரும்புகிறேன். 1987-88-ல் 22.65 கோடி ரூபாய்க்கு செய்யப்பட்ட மிகைச் செலவுக்கு 10 ஆண்டுக்காலம் கழித்துப் பேரவையினுடைய அனுமதி பெறப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்படி அனுமதியளிப்பது என்பது பேரவையினுடைய இறையாண்மையைப் பாதிக்காதா? அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி ஒரு ரூபாய் செலவு செய்தால்கூடப் பேரவையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டும். ஆனால் 22 கோடி ரூபாயை அரசாங்க அதிகாரிகள் எப்படி பேரவையினுடைய அனுமதியில்லாமல் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்தச்



1997 ஏப்ரல் 28] [திரு. ச. அழகிரி]

செலவு 1987-88-ல் மட்டுமல்ல. ஒவ்வோராண்டும் இதேபோல் 20 கோடி, 25 கோடி என்று பேரவையினுடைய அனுமதியில்லாமலேயே செலவு செய்து, அதன் பிறகு பேரவையினுடைய அனுமதியைக் கோருகிறார்கள். இதற்குக் காரணம், அரசாங்கம், அதிகாரிகள் மீது முழுமையான கட்டுப்பாடு வைத்திருக்கவில்லையா, அல்லது அரசாங்கமே பேரவையினுடைய இறையாண்மையை முழுமையாக அங்கீகரிக்கவில்லையா என்பது எனக்குப் புரியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உதாரணமாக, அகவிலைப்படி உயர்வு என்பது தவிர்க்கப்பட முடியாமல் கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. அப்படி வேண்டுமானால் அதைக் கொடுக்கலாம். ஆனால், மருத்துவத் துறையைப் பொறுத்தவரை ஒரு செலவு செய்யப்பட்டிருக்கிறது. உயரிய நவீன சாதனங்களுக்குக் குறிப்பிட்ட காலம் தோறும் சீர் செய்யும் பணிக்கான கட்டணங்களை வழங்குவது; இது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று. ஒவ்வோராண்டும் மருத்துவச் சாதனங்களைச் சீர் செய்வதற்காகத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு இருக்கிற ஒரு தொகை. எனவே, இதனைக்கூட முன் அனுமதி பெறாமல் எப்படி அதிகாரிகள் செலவு செய்திருக்கிறார்கள் என்பதனை நான் அறிய விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவுகளை வழங்க வேண்டும். ஏனென்றால் பேரவையினுடைய இறையாண்மை என்பதனை யாருமே மீற முடியாது. சில அதிகாரிகள் சில காரணங்களைச் சொல்லுகிறார்கள். ஆடிட் ரிப்போர்ட், சி.ஏ.ஜி. ரிப்போர்ட் காலம் கடந்து வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை சி.ஏ.ஜி. ரிப்போட் என்பது அந்தந்த ஆண்டு சரியாக வந்து விடுகிறது. சி.ஏ.ஜி. ரிப்போர்ட் எப்போதும் காலம் கடந்து வருவதில்லை. சி.ஏ.ஜி. ரிப்போர்ட் 10 ஆண்டு காலம் கழித்து வந்தது, எனவேதான் பேரவையினுடைய அனுமதியைப் பெறுவதற்குக் காலம் கடந்து விட்டதென்று சொல்வது முறையாக இருக்காது. எனவே, சி.ஏ.ஜி. ரிப்போர்ட் ஒவ்வோராண்டும் வருகிறது என்பதனை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எப்படி வங்கிகளிலே கணிப்பொறி அமைத்து அன்றாடக் கணக்குகளை அன்றன்றே முடிக்கிறார்களோ, அதேபோல அரசாங்க அலுவலகங்களிலும் கணிப்பொறிகளை அமைத்து, அந்தந்தக் கணக்குகளை அன்றன்றே முடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிகைச் செலவுகளை முறைப்படுத்துவது பற்றிய ஒரு குறிப்பை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்த பிறகுதான், அந்த அடிப்படையிலேதான் இந்த மிகைச் செலவுகள் பற்றிய கோரிக்கைக்கு அவையிலே அனுமதி தரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அனுமதிக்கப்பட்ட மானியத்திற்கும் அதிகமாக ஏற்பட்ட மிகைச் செலவுகளை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 205(1) என்ற பிரிவுக்கிணங்க முறைப்படுத்த வேண்டும். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், அனுமதிக்கப்பட்ட மானியத்திற்கு மேல் ஏற்பட்ட மிகைச் செலவு குறித்து அறிக்கை அளிப்பார். பொதுக் கணக்குக் குழு, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரால் அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது, துறை வாரியாக அளிக்கப்பட்ட மூலக் குறிப்புகள் மற்றும் சாட்சியத்தின்போது அளித்த விவரங்கள், விளக்கங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்து மிகைச்செலவுகளை முறைப்படுத்த சட்டமன்றப் பேரவையிலே மானியக் கோரிக்கைகளை அளிக்குமாறு பரிந்துரை செய்துள்ளது. பொதுக் கணக்குக் குழு அளித்த பரிந்துரையின்படி சட்டமன்றத்தில் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. 1986-87-ஆம் ஆண்டின் மிகைச் செலவு பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை சட்டமன்றத்தில் 1995 நவம்பர் 10-ஆம் தேதி அளிக்கப்பட்டது. 1987-88-ஆம் ஆண்டின் மிகைச் செலவு பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை சட்டமன்றத்தில் 1996 பிப்ரவரி 28-ஆம் தேதிதான் அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ஏன் இவ்வளவு இடைவெளி என்று கேட்டதற்குக் காரணம், பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகள் காலதாமதமாக, ஒன்று 1995 நவம்பரிலும், மற்றொன்று 1996 பிப்ரவரி 28-ஆம் தேதியும்தான் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகளுக்கான மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவுகளும் இந்தக் கூட்டத்திலே வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படுகின்றன. 1988-89 மற்றும் 1989-90-ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவு பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்டபின் அடுத்த கூட்டத் தொடரில் மானியக் கோரிக்கை மற்றும் நிதி ஒதுக்கத்திற்கு ஒப்புதல் பெறப்படும். இதற்குப் பின்வரும்





ஆண்டுகளுக்கான செலவினங்கள் பற்றிய ஆய்வினை விரைவுபடுத்தி, பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, மானியக் கோரிக்கை மற்றும் நிதியொதுக்கீட்டிற்கு சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு திரு. அழகிரி அவர்கள் இங்கு எழுப்பிய சில பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, இந்த மிகைச் செலவு குறித்த நிலைக்கு எவ்வாறு ஒப்புதலைப் பெறுவது என்பது பற்றிய சீரமைப்புகளைச் செய்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

**திரு.ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுக் கணக்குக் குழு, காலம் கடந்து சட்டப்பேரவையில் அறிக்கை தாக்கல் செய்ததாகச் சொன்னார்கள். உதாரணமாக தணிக்கைத் துறை அதிகாரிகளுடைய குறிப்பு வந்த பிறகு, மிகைச் செலவு ஏன் செய்யப்பட்டிருக்கிறது என்று பொதுக் கணக்குக் குழு அரசாங்கச் செயலாளரைக் கேட்கிறது. ஆனால் அரசாங்கச் செயலாளர் அதற்கு பதில் அளிக்க 3 வருடங்கள் கூட எடுத்துக் கொள்கிறார். அரசாங்கச் செயலாளரை அழைத்து பொதுக் கணக்குக் குழு விசாரணை செய்ய முடிகிறதேயொழிய அவருக்குத் தண்டனை அளிக்க முடிவதில்லை. உடனடியாக நீங்கள் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு பொதுக் கணக்குக் குழுவின் அதிகாரம் முடிந்துவிடுகிறது. அந்தச் செயலாளர் என்ன சொல்கிறார் என்றால், செலவு செய்தது வேறொரு செயலாளர், எனவே அதற்கு நான் உங்களிடம் வருத்தம்தான் தெரிவித்துக்கொள்ள முடியுமேயொழிய, உடனடியாக பதிலளிக்க முடியவில்லை என்று சொல்கிறார். எனவே, காலம் கடந்தமைக்குக் காரணம், பொதுக் கணக்குக் குழு காலம் கடந்து அறிக்கையைத் தாக்கல் செய்ததனாலல்ல. அரசாங்கச் செயலாளர்கள் பொதுக் கணக்குக் குழுவின் கோரிக்கையை ஏற்காமல் 3 ஆண்டுக்காலம், 4 ஆண்டுக்காலம், 5 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக்காலம் என்று காலம் கடந்து அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவிற்குக் கொடுப்பது தான் இந்தக் காலம் கடந்ததற்குக் காரணம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அரசாங்கச் செயலாளர்களுக்கு 15 தினங்களில் பொதுக் கணக்குக் குழுவோ அல்லது மற்ற குழுக்களோ சொல்கிற அறிக்கைகளை அளிப்பதற்கான வகையில் உத்தரவை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அதிகச் செலவு, அதாவது மிகைச் செலவு பற்றிய ஒப்புதலைப் பெறுவதற்கு வைக்கப்பட்ட இந்தக் குறிப்புகள் அனைத்தும் இந்த ஆட்சி அமைந்த பிறகு ஏற்பட்டதல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் மிக நன்றாக அறிந்தேதான் பேசுகிறார். 1986-87, 1987-88-ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவுகள் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இது கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறை. அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, இனி தொடர்ந்து அதுபோன்ற நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள அழகிரி அவர்கள் இங்கே அளித்த ஆலோசனை பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீட்டு மசோதாவின் மீது இன்று காலையிலிருந்து பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, அளிக்கப்பட்ட கருத்துக்களில் பலவற்றை ஆய்ந்து பார்த்தால் அவர்களுடைய தொகுதிகளைப் பற்றிய கருத்துக்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தனி அலுவலர் வேண்டுமென்று கேட்டோமே, அது என்னவாயிற்று என்ற சீற்றம் மிகுந்த வினாக்களாகவும் இங்கே இருந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

இதற்கிடையில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மணல் குவாரி எடுப்பதிலே நடைபெறுகிற கொடுமைகளை இங்கே எடுத்துக் கூறினார்; நானே அதை கொடுமைகள் என்றுதான் சொல்கிறேன். ஆனால் இதற்கு நாம் உடனடியாக எதுவும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், இந்த உரிமம் பல ஆண்டுகளுக்கு முன்பு கடந்த கால ஆட்சியில் அவர்களுக்குத் தரப்பட்டு, இத்தனை ஆண்டுகள் வரையிலே அந்த உரிமத்தை அனுபவிக்கலாம் என்று வரைமுறையும் செய்யப்பட்டிருக்கிறது. அதை நாம் தடுக்கிற முயற்சியில் ஈடுபட்டால் உடனடியாக அவர்கள் நீதிமன்றம் சென்று தடையாணையைப் பெற்று விடுகிறார்கள். சுரண்டல் லாட்டரிக்கே தடையாணை கிடைக்கிற இந்தக் காலகட்டத்தில், அவர்கள் மணலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கு அரசு எந்த நடவடிக்கை எடுத்தாலும்





உடனடியாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள், தடையாணையைப் பெற்று விடுகிறார்கள். மேலும் முறைகேடாக மணல் எடுப்பவர்கள்மீது ஆங்காங்கே சட்டத்திற்குட்பட்டு நடவடிக்கைகள் எந்த அள்வுக்கு எடுக்கமுடியுமோ அந்த அளவுக்கு எடுக்கப்பட்டு வருகின்றன. நேற்றைக்குக்கூட நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்கள் ஒரு குறைபாட்டை கன்னியாகுமரி மாவட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள். உடனடியாக நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதுபற்றி குறிப்பு எழுதிக் கேட்டு, அவரும் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற விவரத்தைச் சொல்லி இருக்கிறார். நிச்சயமாக, இந்த மணல் குவாரி மூலமாகக் குறைந்த அளவிலே அவற்றை ஏலம் எடுத்து விட்டு--ஓப்பன் டெண்டர் மூலமாகக்கூட அல்ல, அந்தக் கால ஆட்சியில் விருப்பத்திற்கேற்ப அவரவர்கள் ஏலம் எடுத்துவிட்டு-- ஆற்றையே இன்றைக்கு பாதாளங்களாக ஆக்கிக்கொண்டிருக்கிற பயங்கரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன்மீது எப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதை இந்த அரசு சட்டபூர்வமாக ஆராய்ந்து மேல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30

மற்றொன்றை அவர் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள்ளே நுழையும்போதே ஏன் கைது செய்யவில்லை என்று குறிப்பிட்டார். நுழைந்தவுடனாவது கைது செய்திருக்கிறோம் என்பதை அவர் பாராட்டினார். இருந்தாலும்கூட இங்கே கைது செய்யப்பட்ட இந்த விடுதலைப் புலிகள் உதயகுமார், கமலநாதன் என்ற இருவரும்--ஏற்கெனவே உதயகுமாருடைய மனைவி, மாமியார் ஆகியோர் 1996-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே, அதாவது ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே தமிழகத்திற்கு வந்து அகதிகள் முகாமிலே இருப்பவர்கள். அவருடைய நண்பன் கமலநாதன் 1-10-1996-ல் அகதியாகத் தமிழகத்திற்கு வந்திருப்பதாக விசாரணையிலே தெரிய வந்திருக்கிறது. இன்று அவர்கள்--கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நீண்ட கடற்கரையில், என்னதான் கப்பற்படையினுடைய காவல் இருந்தாலும்கூட, நம்முடைய காவல் துறையின் கண்காணிப்பு இருந்தாலும்கூட, அதையும் மீறி நீண்ட கடற்கரையில் எங்கோ ஒரு மூலையிலே அவர்கள் புகுந்து விட முடிகிறது. ஆனாலும் அவர்களைத் தடுத்து நிறுத்துகின்ற

முயற்சியிலும் அவர்களைக் கைது செய்கின்ற முயற்சியிலும், இம்மியளவும் எந்த பாரபட்சமும் காட்டாமல், தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது; தொடர்ந்து எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றொன்றை திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். வரியே இல்லாமல் இருந்த மீன் வலைகளுக்கு நீங்கள் வரியைப் போட்டு, அது எங்களுக்குத் தெரியாமல் போய், அதைக் குறைப்பதாகச் சொல்லி, நாங்களும் மகிழ்ந்து ஆரவாரம் செய்து இப்போது வரி இருப்பதாக மீனவர்கள் சொல்கிறார்களே என்று குறிப்பிட்டார். அவருடைய நினைவுக்கு நான் சொல்கிறேன். 15-8-1974 முதல் 28-2-1982 வரையில் இந்த மீன் வலைகளுக்கு 4% வரி இருந்து இருக்கிறது. அதற்கு வரியே இல்லை என்று சொல்வது தவறு. பிறகு 1-3-1982 முதல் 31-3-1990 வரை 5% வரி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. பிறகு 1-4-1990 முதல் 11-3-1993 வரை 8% வரி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. 12-3-1993 முதல் 4-4-1997 வரை 11% வரி என்று இருந்ததைத்தான் 5-4-1997-ல் குறைத்து 4% என்று இந்த அரசு அறிவித்து இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆனால் மீனவர்கள் வலை பின்னுவதற்காக 'மால்' வாங்குகிறார்கள். அது துண்டு துண்டாக இருக்கின்ற ஒன்று. அந்த 'மாலை' வாங்கி அந்த வலைகளைத் தயார் செய்யும்போது அந்த 'மாலுக்கு' வரி விதிக்கவில்லை. ஆனால் அந்த வியாபாரிகள், அந்த 'மாலை' வியாபாரம் செய்கின்றவர்கள், அதற்கு வரி வாங்குவதாக மீனவர்கள் புகார் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த வரியை வாங்காத ஒரு சூழ்நிலை மீனவர்களுக்கு ஏற்படுத்தப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்கி ஆசிரமம் குறித்து திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கல்கி ஆசிரமத்தில் உடனடியாக என்ன நடக்கிறது என்று ஆய்ந்து பார்க்க வேண்டுமென்று, காவல்துறையை, இந்த அரசை யாரும் கேட்க முன்வருவதற்கு முன்பே நடவடிக்கை எடுத்து, போலீஸார் அங்கே சென்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால், அங்கே சென்று சேர்ந்து இருக்கிற பெண்கள் ஆனாலும், ஆண்கள் ஆனாலும் அவர்கள் எங்களுக்கு 18 வயது ஆகிவிட்டது, எங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு, நாங்கள்



விருப்பப்பட்டுத்தான் இங்கே வந்தோம் என்று சொல்கிற நேரத்தில் சட்டப்படி அவர்களைக் கைது செய்யவோ அல்லது அவர்களை மீட்டு வரவோ முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் படிப்படியாக அந்தக் கல்கி ஆசிரமம் எந்த நிலைக்குச் செல்கிறது என்பதைக் காவல் துறை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் அதையும் மீறி எந்தத் தவறும் அந்தக் கல்கி ஆசிரமத்திலே நடந்துவிட முடியாதபடி பார்த்துக் கொண்டும், நடந்தால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற வகையில், அரசு அதனுடைய பணிகளைக் காவல் துறை மூலமாக முடுக்கி விட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-35*

இன்றைக்கு விவாதிக்கப்பட்டு, உங்களுடைய அங்கீகாரத்தைப் பெற இருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, ஏறத்தாழ 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கான அனுமதியை உங்களிடத்திலே பெறுகிற சட்ட முன்வடிவாகும். இந்த 18 ஆயிரம் கோடி எப்படி வந்தது என்றால்--14 ஆயிரம் கோடிதான்--ஏற்கெனவே வாங்கி இருக்கின்ற கடன்களைத் திருப்பித் தருகின்ற வகையில் ஏறத்தாழ ஒரு 4 ஆயிரம் கோடி ரூபாய், அதுவும் சாட்டுதல் என்கிற வகையிலே இதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது.

1997-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து தொடங்குகிற நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகு நிதியத்திலேயிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கான சட்டமுன்வடிவு கடந்த 26-ஆம் தேதி இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, அதற்கான விவாதம் இன்று நடைபெற்று, மாமன்றத்தின் உறுப்பினர்கள் பலர், இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டியும், அதற்கு அப்பாற்பட்டும் பொதுவான பல கருத்துக்களையும் இங்கே வழங்கி இருக்கின்றார்கள்.

1997-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலேயிருந்து 1998 மார்ச் முடிகின்ற வரையிலே உள்ள நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், தேவைப்படக்கூடிய 18,131 கோடியே 10 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையை மாநிலத் தொகு நிதியத்திலேயிருந்து ஒதுக்கீடு செய்யலாம் என்பதற்கான சட்ட முன்வடிவுதான் இந்தச் சட்ட முன்வடிவாகும்.

இந்தத் தொகையிலே 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க முன்னளி மானிய வாக்களிப்புச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட, அதாவது Vote on Account 4,532 கோடியே 77 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய் தொகையும் இதிலே உள்ளடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே சட்டமன்றப் பேரவையால் பல்வேறு மானியத் தலைப்புகளில் அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் இங்கே முன்வைத்து விவாதம் நடத்தி, உறுப்பினர்கள் எல்லாம் ஒப்புதல் அளித்து, வாக்களிக்கப்பட்ட தொகை 14,400 கோடியே 67 லட்சத்து 7 ஆயிரம் ரூபாயாகும். இது தவிர, மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்ட தொகை 3,730 கோடியே 42 லட்சத்து 98 ஆயிரம் ரூபாயாகும். சட்டமன்றம் வாக்களித்து நிறைவேற்றிய மானியக் கோரிக்கைகள் என்ற அடிப்படையில் பார்த்தால் எந்தெந்தத் துறைகளுக்கு தொகை, எந்தெந்த வகையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களையும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி 2,969 கோடி ரூபாய்; ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் 1,308 கோடி ரூபாய்; நுகர்பொருள் வழங்கல் 1,020 கோடி ரூபாய்; ஊரக வளர்ச்சி 790 கோடி ரூபாய்; நகராட்சிப் பணிகள் 376 கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்வு, மருத்துவம் 834 கோடி ரூபாய்; சமூக நலன் 600 கோடி ரூபாய்; காவல் துறை 539 கோடி ரூபாய்; வேளாண்மை 689 கோடி ரூபாய்; சாலைகள், பாலங்கள் 357 கோடி ரூபாய்; பாசனம் மூலதனச் செலவு 249 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் 184 கோடி ரூபாய்; மாவட்ட நிர்வாகம் 332 கோடி ரூபாய்; தாழ்த்தப்பட்டோர் நலன் 254 கோடி ரூபாய், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் 64 கோடி ரூபாய். எனவே, பல்வேறு ஆக்கப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகைகளை செலவழிக்கக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்ற அதேநேரத்தில் சில கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகின்றேன்.

5-3-1997 அன்று, மார்ச் மாதம் 5 ஆம் தேதி அன்று, 1997-98 ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்ட போது நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். 1997-98 ஆம் ஆண்டுக்கு



மத்திய திட்டக் குழு 4 ஆயிரம் கோடி ரூபாய் என்று திட்ட ஒதுக்கீட்டை நிர்ணயித்துள்ளது. ஆயினும் நமது வரவு-செலவுத் திட்டத்தில் 4,052 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்த நிதி ஆண்டில் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக எய்தி விடுவோம் என்ற நம்பிக்கையையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கான வரைவு ஆணைகள் தயாரிக்கப்பட்டு, வெளியிடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஏதோ அறிவித்தோம், அத்துடன் விட்டுவிட்டோம் என்று இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னென்ன புதிய திட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டதோ, அதற்கான வரைவு ஆணைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு, வெளியிடும் நிலையிலே இருக்கின்றன. அவற்றிலே ஒன்றிரண்டைத்தான் இந்தக் கூட்டத் தொடருக்கு இடையிலே நாம் வெளியிட்டிருக்கிறோம். அரசு ஆணைகளை வெளியிட்டிருக்கிறோம். மற்றவைகளை இன்று உங்கள் அனைவருடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான், நாளை முதல்தான் அந்த ஜி.ஓக்கள் அந்த அரசு ஆணைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காக வெளியிடப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை சட்டமன்ற மரபுகளை உணர்ந்த நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இந்த ஆணைகள் ஆளுநருடைய ஒப்புதலைப் பெற்று, மிக விரைவிலே வெளியிடப்படும். இதற்கிடையிலே என்னென்ன அறிவிப்புகளை நாம் எந்த அளவிற்கு ஆணைகளாக பிறப்பித்து இருக்கிறோம் என்பதற்குச் சில உதாரணங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். 'மானிடரிங் செல்' என்ற அந்த செல் அமைக்கப்பட்டு இந்த அவையிலே முதலமைச்சராகிய நான் அறிவிக்கின்ற அறிவிப்புகள் ஆனாலும், ஏனைய அமைச்சர் பெருமக்கள் அறிவிக்கின்ற அறிவிப்புக்கள் ஆனாலும், அவைகளை எல்லாம் தொகுத்து, உடனடியாக இந்த அறிவிப்புகள் எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன, இதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டனவா, இது மக்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவிற்கு பணிகள் தொடங்கப்பட்டுவிட்டனவா, என்பதையெல்லாம் அறிந்து, அவ்வப்போது அமைச்சர்களிடத்திலே விவாதித்து, என்னிடத்திலே அதைத் தொகுத்துத் தருகின்ற அளவிற்கு அந்த

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 28

மானிடரிங் செல் இன்றைக்குப் பணியாற்றத் தொடங்கிவிட்டது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல. அந்த மானிடரிங் செல்லைக் கடந்து சரியான முறையிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்க 14 ஆணையாளர்கள்--கமிஷனர்கள்--28 மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே 1997-98-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ. 1174 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. 10-ஆம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அளிக்கப்பட வேண்டிய ரூ. 100 கோடியில் முதல் காலாண்டிற்கு அளிக்க வேண்டிய ரூ. 25 கோடி உட்பட, ரூ. 300 கோடி வழங்குவதற்கான ஆணைகள் இந்த வாரத்தில் வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, உள்ளாட்சி மன்றங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 60 கோடி வழங்குவதற்கான ஆணைகளும் இந்த வாரத்திலேயே வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அனைத்து உள்ளாட்சி மன்றங்களும் போதிய நிதியாதாரத்தைப் பெற்று அடிப்படை வசதிகளைச் செய்யத் தொடங்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

உதாரணமாக, காவல் துறை மானியக் கோரிக்கையின்பொழுது கடந்த ஆண்டு காவல் துறை மானியத்தின் போது-- அறிவிக்கப்பட்ட சலுகைகளையொட்டி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை விவரமாக நான் இந்த அவையிலே கூறியிருக்கின்றேன். அதைப்போல 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பையொட்டி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்தத் தொடர்க் கூட்டத்தின் இறுதிக் கூட்டத்தில் வெளியிட விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே அறிவிக்கப்பட்டதுபோல வறுமை ஒழிப்புத் திட்டத்தையும், குடிநீர் வழங்கு திட்டத்தையும் செயல்படுத்த ஊராட்சி மன்றத்திற்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து, அரசு ஆணைகள் 14-3-1997-ல் வெளியிடப்பட்டுவிட்டன. 5-3-1997-லே அறிவித்து, அதற்கான ஆணைகள் 14-3-1997-ல் வெளியிடப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 28] [கலைஞர் மு. கருணாநிதி]

ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத 154 குடியிருப்புகளுக்கு 1997-ஆம் ஆண்டு மார்ச் 31-க்குள் குடிநீர் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அந்தப் பணி முடிவுற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஒன்று இந்தச் சட்டமன்றத்திலே அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தேன். அந்தச் சட்டமுன்வடிவு இறுதி செய்யப்பட்டு, இந்த மாமன்றத்திலே அந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது என்பதையும், அதன் மேல் நீங்கள் எல்லாம் விவாதிக்க இருக்கின்றீர்கள் என்பதையும் நான் அறிவிக்கவே தேவையில்லை.

தென் மாவட்டங்களில் மொத்தம் ரூ. 42½ கோடி அளவில் வறட்சி நிவாரணப் பணிகள் செய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையின்போது நான் குறிப்பிட்டிருந்தேன். தென் மாவட்டங்களிலே ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியைக் கண்டு வந்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் மற்ற அதிகாரிகளும் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலேதான் ரூ. 42 கோடி உடனடியாக அதற்கென ஒதுக்கப்பட்டது. அந்த வறட்சிப் பணிகளைத் தொடங்க ரூ. 7.5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பணிகள் தொடங்கிவிட்டன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அஃதன்னியில் திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்திலே வறட்சிப் பணிக்காக ரூ. 1.5 கோடி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டாகிவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான சிறிய ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம் 270 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அளிக்கப்பட்டு, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதற்கு மத்திய அரசுக்கு அந்தக் கோப்பு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

திண்டிவனம், பாண்டிச்சேரி, கிருஷ்ணகிரி ஆகிய சாலைப் பகுதிகளில் 19.90 கோடி ரூபாய்ச் செலவில் ஒரு கீழ்ப்பாலம் மற்றும் வழிமாற்றம் செய்யும் பணிகளுக்கு அரசாணை 11-3-1997-ல் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

53-122—10

அதேபோல், 1000 முதல் 1500 வரை மக்கள் தொகை கொண்ட 108 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு நிறுவனத்திடமிருந்து Rural Infrastructure Development Fund-லேயிருந்து பெறப்பட்ட நிதியிலேயிருந்து சாலை மேம்பாடு மற்றும் பாசன வசதிகள் திட்டத்திற்கு மொத்தம் 272 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டது. அதிலே 210 கோடி ரூபாய்க்கு ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்காகவும், உள்விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்காகவும் கொள்கையளவில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் ரூ. 10 கோடி விளையாட்டு மேம்பாட்டு நிதி ஏற்படுத்துவதற்காக மாநில அரசு ஈடான தொகை வழங்குவதற்கு கொள்கையளவிலே ஆணை பிறப்பித்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதற்கான அரசாணை 10-3-1997-லேயே வழங்கப்பட்டாயிற்று.

குழந்தைத் தொழிலாளர் மறு சீரமைப்பு மற்றும் நலநிதி உருவாக்க 12-3-1997-லேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

வயதான, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு மாத ஓய்வூதியம் 150 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி 13-3-1997-லேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான வீட்டு மனை வழங்கும் திட்டத்தை இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் விரிவாக்க 13-3-1997-லேயே ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன.

ஈழத் தமிழ் அகதிகளுக்குக் கூடுதலாக மாதம் 50 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான ஆணைகளும் வெளியிடப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





பத்திரிகைத் துறையிலே தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், போட்டோகிராபர்கள், போன்றவர்கள் இயற்கை எய்தினால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டாயிற்று. முதல் உதவியாக பழம்பெரும் செய்தியாளர் திரு. வேம்புசாமி அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த நிதி வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கூறியதுபோல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தொழிற் பயிற்சிப்பள்ளி என்று அறிவித்ததற்கு ஏற்ப விளம்பரப்படுத்தப்பட்டு, 95 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மனுக்கள் பெறப்பட்டு அந்த 95 ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன என்பதையும், எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே படித்த ஏழை மாணவர்கள் அந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெற்று வேலைவாய்ப்புகளையும் எளிதாகப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே, நடந்த முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஆளுநர், மறைந்த டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் ஆற்றிய உரையில் அறிவிக்கப்பட்ட மனித உரிமையியல் ஆணையம் Human Rights Commission தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு, ஆணையத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள்; அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

பயன்படாத தரிசு நிலங்களை மேம்படுத்த, புதிய தொழில் நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்த முன்னாள் துணை வேந்தர் பி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே 1996-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையை மே மாதம் 19-ஆம் தேதி தரவிருக்கிறது. அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, தரிசு நிலங்களை மேம்படுத்தவும், புதிய தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்தவும் அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டதையொட்டி, அதற்கான சட்டமுன்வடிவை இந்த அரசு இன்று அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது மாத்திரம் செய்யப்பட்ட அறிவிப்புகள் 118. இந்த 118 அறிவிப்புகளில் 30 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவைகள் வெளியிடப்படாததற்குக் காரணம் இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு நிறைவேறியபிறகுதான் வெளியிடவேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர்களும், தங்கள் துறையின் சார்பாக மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்தபோது இம்மாமன்றத்தில் பல்வேறு அறிவிப்புகளைச் செய்து இருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-50*

அந்த வரிசையிலே பார்த்தால் தொழில் துறை மற்றும் காவல் துறை சார்பாக நான் வெளியிட்ட அறிவிப்புகள் 52. கல்வி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் 24. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 5. வருவாய்த் துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் 22. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 23. வேளாண்மைத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 27. பொதுப்பணித் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 10. போக்குவரத்துத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 26. தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 18. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 39. பால்வளத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 6. தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 8. சட்டத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 5. வணிக வரிகள் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 18. கைத்தறித் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 2. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 23. வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 15. வீட்டு வசதித் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 26. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 15, இந்து





சமய அறநிலையத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 17. சமூக நலத் துறை அமைச்சர் 14 அறிவிப்புகள், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் 39 அறிவிப்புகள், சுற்றுலாத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 13. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் 14 அறிவிப்புகள். மீன் வளத் துறை அமைச்சர் 23 அறிவிப்புகள். ஆக மொத்தம் 484 அறிவிப்புகள் இங்கே இந்த அவையிலே முதலமைச்சராலும் மற்ற அமைச்சர்களாலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்படி அறிவிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளும், வேலை வாய்ப்புப் பணிகளும், நல்வாழ்வுத் திட்டங்களும் மாவட்டங்களிலே தொடர்ந்து நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கத்தான் அமைக்கப்பட்டுள்ள மானிடரிங் செல்லைப் பற்றியும் மாவட்டங்களில் 14 கமிஷனர்கள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றேன். இந்தப் பணிகள் எல்லாம் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா என்பதை கவனித்துக் கொள்கின்ற பெரும் பொறுப்பு அனைத்து அமைச்சர்களுக்கும் உள்ளது என்பது மாத்திரம் அல்ல, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த விவாதத்தில் நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் 2, 3 பொதுவான பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். பொதுவான பிரச்சினை என்றாலும் தமிழ்நாட்டிற்கு மிக மிகத் தேவையான பிரச்சினைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். முதலாவதாக, காவிரியைப் பற்றி அவர்கள் பேசும்போது உடனடியாக ஒரு முடிவை தமிழ்நாட்டு விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்காக நாம் எடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற பிரச்சினை என்பதையும் 1968 முதல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு இன்று வரையில் 20 அல்லது 25-க்கு மேற்பட்ட தடவை கர்நாடக அரசோடு கலந்து பேசி மத்திய அரசினுடைய நீர்வளத் துறை அமைச்சர்களை முன்வைத்து அவர்கள் முன்னிலையிலே கலந்து பேசி முடிவு காணாத சூழ்நிலையில்தான் கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1989-90-ல் இங்கே இருந்தபோது நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க அன்றிருந்த பிரதமர் வி.பி. சிங் அவர்களைக் கேட்டுக்

கொண்டு, அவரும் அதற்கு உடன்பட்டு, நம் சார்பாக நாம் எடுத்துச் சொன்ன கருத்தை நீதிமன்றத்திலே எடுத்து வைக்கின்ற பொறுப்பினை உணர்ந்து ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே நடுவர் மன்றம் அமைந்தது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்த நடுவர் மன்றத்திற்குப் பிறகு இடைக்காலத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசு முன்வராத காரணத்தால் ஏற்பட்ட பிரச்சின்னைகள், குழப்பங்கள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். தொடர்ந்து அதைப்பற்றி விளக்கிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். கடந்த 5-1-1997 வரையில் உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்திற்கிணங்க நம்முடைய தண்ணீர்த் தேவை குறித்து கர்நாடக அரசுடன் பேசுகிற வாய்ப்பு ஏற்பட்டபோது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஏன் முழுமையாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முன்வரக்கூடாது என்று கர்நாடக அரசு தெரிவித்த அந்தக் கருத்தை புறந்தள்ளிவிடாமல் நாம் அவர்களோடு 5 முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தையினால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக நாங்கள் இன்னொரு அணை கட்டப் போகிறோம்; அதற்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு ஏதோ மேகதாதோ, மேகதூதோ (குறுக்கீடு) மேகதாது என்ற ஒரு அணை கட்டப்போகிறோம், அதற்கும் அனுமதி தாருங்கள் என்கின்ற அளவிற்கு, சம்மதம் தாருங்கள் என்கின்ற அளவிற்கு, அவர்கள் வந்துவிட்ட காரணத்தால் இனிமேல் இவர்களோடு பேசி எதுவும் நடக்காது என்ற அளவில் நாம் தொடர்ந்து கண்டிப்பாகச் சொல்லி வந்திருக்கிறோம். சிலரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தினாலும்கூட, நடுவர் மன்றத்தினுடைய வரம்பிற்கு உட்பட்டுத் தான் நடத்துவோம் என்று சொன்னதற்கிணங்க, அந்த வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பேசத் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலையில், மீண்டும் நடுவர் மன்றத்தையே நாம் நாடினோம். நடுவர் மன்றத்தை நாடியது மாத்திரம் அல்ல; உச்ச நீதிமன்றத்திலே இன்றைக்கு அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12-55*

உச்சநீதிமன்றம் இந்த வழக்கை, ஐந்து பேர் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் ஒன்றை அமைத்து, அதற்கு அனுப்பியிருக்கின்றது. கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் இந்த வழக்கை



விசாரித்து மைய அரசின் நிலையைக் கேட்டபோது, மைய அரசின் சார்பாக அட்டர்னி ஜெனரல் ஆஃப் இந்தியா எட்டு வார கால அளவிற்குள் நடுவர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கான வரைவு திட்டத்தைத் தருவதாக உச்ச நீதிமன்றத்திலே இந்த மாதம் 2-வது வாரத்திலே கூறியிருக்கின்றார்கள். எனவே, அதை நாம் உடனடியாக, நம்முடைய தீரன் அவர்கள் கீருதுவதைப்போல தள்ளிவிட முடியாது. அவர்கள் எந்த அளவிற்கு உச்ச நீதிமன்றத்திலே தங்களுடைய கருத்தை, அந்த வரைவை எடுத்துச் சொல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்ட பிறகுதான் மேல் நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் காவிரிப் பிரச்சினையில் தற்போதைய நிலையின் சுருக்கத்தை நான் உங்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

ஆனால், இன்றைக்கு ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்கள், கடந்த ஐந்தாண்டுக் காலம் ஆண்டவர்கள், காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்; திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று இன்றைக்குச் சொல்லி வருவதை நாம் காணுகிறோம். அளிக்கின்ற பேட்டியானாலும், பேசுகின்ற மேடையானாலும், நிருபர்களைச் சந்திக்கின்ற நேரமானாலும் எல்லா நேரத்திலும் ஏதோ காவிரிப் பிரச்சினைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு துரோகம் செய்து விட்டதைப் போலப் பேசி வருகின்றார்கள்.

உங்களுக்கு நான் ஒரு உதாரணத்தை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே ஒரு முறை கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இன்றைக்கு விவரமாகவே சொல்ல விரும்புகின்றேன்.

ஜெயலலிதா அவர்கள், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இந்தக் காவிரிப் பிரச்சினையிலே எப்படி நடந்து கொண்டார்கள், எவ்வளவு ஆர்வத்தோடு, எவ்வளவு விரைந்து இந்தக் காவிரிப் பிரச்சினையிலே அக்கறை காட்டினார்கள் என்பதற்கு நான் இங்கே படிக்க இருக்கின்ற இந்த இரண்டு மூன்று கடிதங்களும், குறிப்பிட இருக்கின்ற தேதிகளுமே சான்று பகரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

9th June 1992. *1992 ஜூன் மாதம் 9-ஆம் தேதி முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு ஒரு கடிதம் வருகிறது. கடிதத்தை எழுதுபவர் சுக்லா அவர்கள். சுக்லாவை உங்களுக்குத் தெரியும். அவர், இந்த அம்மையார் உண்ணாவிரதம் இருந்தபொழுதுகூட வந்து சில உறுதிமொழிகளைத் தந்து, அந்த உறுதிமொழிகளின் காரணமாக உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டதே, அந்த சுக்லாதான் இந்த சுக்லா. அவர் 1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார்.*

"Dear Jayalalithaji,

Keeping in view the interim order of the Cauvery Water Disputes Tribunal, it is proposed to assign the responsibility of monitoring its implementation to the Central Water Commission in co-operation with the basin States. Shri Vaithialingam, Chief Minister of Pondicherry has generally agreed with this proposal. The Joint Regulation Committee to be headed by the Chief Engineer, CWC, would include representatives of the respective State Governments also. I will be obliged, if you could please communicate your concurrence with such an arrangement."

*''உங்களுடைய ஒப்புதலை உடனடியாக அதற்கு அனுப்புவீர்களேயானால்-நான் அதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்ற அளவிலே இந்தக் கடிதத்தை வி.சி. சுக்லா அவர்கள் 9-6-1992-1992 ஜூன் 9-ஆம் தேதி அன்று எழுதுகிறார். 9-ஆம் தேதி எழுதிய அந்தக் கடிதம் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எப்பொழுது வைக்கப்படுகிறது என்றால், 9/6 இல் எழுதப்பட்ட கடிதம், அவருடைய பார்வைக்கு 18-7-1992 அன்று வைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து என்று வைத்துக் கொள்ளுங்களேன். 18-7-1992 அன்று அவருடைய பார்வைக்கு வைக்கப்படுகிறது.*

*பிற்பகல் 1-00*

*பார்வைக்கு வைக்கப்பட்டவுடன் அவசரமாக அவர்கள் முடிவு எடுத்தார்களா என்றால் 20-7-1992 அன்று காவிரி டெக்னிக்கல் செல் இருக்கிறதே அந்த டெக்னிக்கல் செல் ஒரு கடிதத்தை எழுதுகிறது. யாருக்கு?*

The Remarks of the Chairman, Cauvery Technical Cell, Madras on the above subject are as follows:





"The Government may agree to the proposal of Government of India, as indicated in the letter cited, to assign the responsibility of monitoring the implementation of the interim order of the Cauvery Water Disputes Tribunal to the Central Water Commission" *என்று 20-7-1992-ல் காவிரி டெக்னிக்கல் செல், தமிழகத்திலேயுள்ள செல் முதலமைச்சருக்குத் தெரிவிக்கிறது, அல்லது அரசுக்குத் தெரிவிக்கிறது,* Chief Secretary-*க்குத் தெரிவிக்கிறது. இப்படித் தெரிவித்த பிறகு, ஒரு ஓ.சி. காப்பி, உங்களுக்குத் தெரியும், ஓ.சி. என்றால் ஆபீஸ் காப்பி. ஒரு ஆபீஸ் காப்பி எப்படி வருகிறதென்றால், கடிதம் எழுதுவதற்காக, ஒரு ஆபீஸ் காப்பி, முதலிலே ஒரு டிராப்ட் போட்டு வருகிறது. அந்த டிராப்ட் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அதிலே கையெழுத்து இட்டு 14-12-1992, அன்று ஒப்புதல் தருகிறார். 6-ஆம் மாதம் கடிதம், 7-ஆம் மாதம் நினைவூட்டல், பிறகு 12-ஆம் மாதம், 14-12-1992 அன்று ஓ.சி. தயாராகிறது. 5 மாதம் ஆகிறது அந்த ஓ.சிக்கே. ஓ.சி. தயாராகிறது, அந்த ஓ.சி. எப்படித் தயாராகிறது தெரியுமா? 21-7-1992-ல் பி.டபிள்யூ.டி. செக்ரட்டரி கையெழுத்து போட்ட ஓ.சி., அதே 21-7-1992-லே கையெழுத்துப் போட்ட அன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர், அவருடைய கையெழுத்தைப் போட்ட அந்த ஓ.சி. இவைகளை 14-12-1992-லேதான் முதலமைச்சர் அதை அப்ரூவ் பண்ணுகிறார். அந்த லெட்டரை அப்ரூவ் பண்ணுகிறார். அப்ரூவ் பண்ணினபிறகு, அனுப்பப்பட வேண்டிய தட்டச்சு கடிதம் வரவேண்டுமல்லவா, அந்தக் கடிதம் அவருக்கு எப்பொழுது வருகிறதென்றால் 30-3-1993. வேடிக்கை பாருங்கள். ஜூன் மாதம் 9-ஆம் தேதி சுக்லா கடிதம் எழுதுகிறார். அதற்குப் பதில் எழுத்தக்கூடிய கடிதம், பல கட்டங்களைத் தாண்டித் தாண்டித் தாண்டி,* Fair Copy *30-3-1993, அடுத்த வருடம் வருகிறது, ஒருவருடம் கழித்து. ஓ.சி.க்கு பிறகு* Fair Copy-*க்கு 3½ மாதம் தாமதம், ஓ.சிக்கு 5 மாதம் தாமதம். ஓ.சி. எல்லாம் தாமதமாகத்தான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஓ.சி. இல்லாமல் இருந்தால் அங்கே தாமதத்திற்கே இடம் கிடையாது. ஓ.சி.க்குப் பிறகு* Fair Copy *செய்ய 3½ மாதம் தாமதம். அதற்குப் பிறகு அம்மையார் 30-3-1993-லே, கையெழுத்து போடுகிறார்கள், அந்த அம்மையார் கையெழுத்து போடுகிறார்கள்* Fair Copy-*லே. 30-3-1993-லே கையெழுத்து போட்ட பிறகு, எப்போது கடிதத்தை* (despatch) *அனுப்புகிறார்கள் தெரியுமா? 14-4-1993-ல் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். இப்படி காவிரிப் பிரச்சினையில் அக்கறை*

காட்டிய அம்மையார்தான் என்னைப் பார்த்து துரோகி, துரோகி என்கிறார். யார் யாரோ துரோகி என்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து இவரும் துரோகி என்கிறார் என்று நான் விட்டுவிட்டுப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் இட ஒதுக்கீடு குறித்து வலுவான சில கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலும் இங்கேயுள்ள அனைவரும் எந்த அளவிற்கு ஒருமித்த கருத்தோடு, உள்ள உறுதியோடு, இந்த 69 சதவிகிதத்தை நாம் நிலைநாட்ட வேண்டுமென்று முடிவெடுத்தோம் என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். 1991-ஆம் ஆண்டு வரை 69 என்று இருந்த இந்த இட ஒதுக்கீட்டினுடைய சதவிகிதம் பிறகு உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்றின் காரணமாக 50 சதவிகிதமாக உருக்கொண்டது, பிறகு 1993-ஆம் ஆண்டு இதே அவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒரு சட்டமும் நிறைவேற்றப்பட்டது. 69 சதவிகிதத்திற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போதுகூட, நாம் சொன்னோம், இந்தச் சட்டம் மாத்திரம் போதாது, ஒவ்வொரு மாநில அரசும், அந்த மாநிலத்திலேயுள்ள நிலைமைக்கேற்ப, இந்த இட ஒதுக்கீட்டை நிர்ணயித்துக்கொள்கின்ற அதிகாரத்தைப் பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் அன்றைக்கே எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

இன்னொன்று, இவர்களுக்கு இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் எவ்வளவு குழப்பம் இருந்தது என்பதற்கு அமைச்சரவைக் கூட்டங்களில், அவர்கள் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்களிலே எடுத்த முடிவு ஒன்றைப் பார்த்தாலே--தீரன் அவர்கள் சொன்னார்களே--புரோமோஷனில் கூட இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கருத்தை ஜெயலலிதா அமைச்சரவை ஆதரிக்கவில்லை என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை இந்த அமைச்சரவை ஆதரிக்கவில்லையென்றே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். புரோமோஷனில், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு தேவையென்ற அந்தக் கருத்தை அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவினுடைய அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான குறிப்பே இன்றைக்கு தலைமைச் செயலகத்திலே இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 1-05

அதுமாத்திரமல்ல. ஏதோ 69 சதவீதம் என்று ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். அதற்குக்கூட திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லி, அந்த அடிப்படையிலேதான் அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், அந்தச் சட்டத்தை Ninth Schedule-இல் சேர்க்கவேண்டும், ஒன்பதாவது அட்டவணையிலே சேர்க்க வேண்டும் என்பதற்காக நானும்கூட வடக்கே எல்லாம் இருந்த எல்லாத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினேன். ஆச்சரியம் என்னவென்றால், திரு. வாஜ்பாய் அவர்கள்கூட அதை ஏற்றுக் கொண்டு, உடன்பட்டு, ஆதரிப்பதாக எனக்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். மற்றும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். மற்ற கட்சிகளுடைய தலைவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அங்கே, ஒன்பதாவது அட்டவணையிலே, தமிழகத்திலே இயற்றப்பட்ட அந்தச் சட்டம் இடம் பெற்றது. ஆனால், அதைக் கெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்களும் இயற்றியவர்களேதான்; இயற்றியவர்களே, அது கெடுவதற்கும் காரணமாக இருந்தார்கள் என்ற உண்மையை யாரும் மறந்துவிட முடியாது. அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் அந்தச் சட்டத்தை எதிர்த்து, 69 சதவிகிதத்தை எதிர்த்து ஒரு வழக்கு நடைபெற்றபோது, 17-11-1994-ல் உச்சநீதிமன்றத்தில், உச்சநீதிமன்றம் அளித்த அதனுடைய ஆணையிலே என்ன குறிப்பிடப்படுகிறது என்றால், "It is significant to notice that after the order, dated 18th August, 1994 was passed, the State itself moved for modification of that order in the circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application, no plea was raised based upon the inclusion of the said Act in the Ninth Schedule and orders were obtained on 3rd October 1994" 69 சதவீத இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான குறிப்பையும் உச்சநீதிமன்றத்திலே அன்றைக்கு வாதாடிய வழக்கறிஞர்கள் எடுத்துக்காட்டவில்லை என்ற அந்தக் குறிப்பை உச்சநீதிமன்றமே தெரிவித்திருக்கின்றது. அது போகட்டும், இருந்தாலும் நாம் அந்த முயற்சியைக் கைவிடாமல், இங்கே திரு. தீரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய இரத்தத்தோடு ஊறிய விவகாரம் இது என்ற காரணத்தினால், இட ஒதுக்கீடு பிரச்சினையிலே நாம் என்றைக்கும் திடமாக இருப்போம், உறுதியாக

இருப்போம் என்ற அளவில் சட்ட ரீதியாக நீதிமன்றத்திலே வாதாடிக் கொண்டு வருகின்றோம். 28-4-1997 ஆகிய இன்று Constitution Bench முன்பு விசாரணைக்கு வந்திருக்கின்றது. ஆனால் நாள் ஒத்திப் போடப்பட்டிருக்கின்றது. மூத்த வழக்கறிஞர், மத்திய அரசினுடைய வக்கீல் திரு. அசோக் தேசாய் அவர்களையும், (Attorney-General) தமிழ்நாடு அரசு சார்பிலே திரு. கபில் சிபல் அவர்களையும் வைத்து நாம் வாதாடிக் கொண்டிருக்கின்றோம். இதை சுலபத்திலே விட்டுவிட முடியாது என்கிற அளவிலே, வழக்குகள் எல்லாம் நடைபெற்று இன்றைக்கு, ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து வாதாடுவோம், நிச்சயமாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தக்கூடிய வாய்ப்பு அங்கே இப்போது இருக்கிறதா என்று பார்த்தால், 13 கட்சிகளைச் சேர்ந்த ஐக்கிய முன்னணி, வேறு சில கட்சிகள் அங்கே இருக்கின்றன. எல்லாக் கட்சிகளும் நாம் சொல்கின்ற இந்த 69 சதவீதத்தை ஐக்கிய முன்னணியிலே இல்லாத கட்சிகள் எல்லாம் ஏற்று, நியாயமாக முறைப்படி பெறவேண்டிய பெரும்பான்மையைப் பெற்றால்தான், திருத்தத்தைச் செய்ய இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள். திரு. தீரன் அவர்களும் அறிவார்கள். இருந்தாலும்கூட, இந்த இடஒதுக்கீட்டை விட்டுவிடக்கூடாது என்பதிலே நாம் கண்ணும்கருத்துமாக இருப்போம், திடமாக இருப்போம், நிச்சயமாக இந்த இடஒதுக்கீட்டை நாம் பெற்றே தீருவோம் என்ற உறுதியை இந்த மாமன்றத்திலே நான் அறிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

தமிழகத்திலே, இன்று நம்முடைய சட்டமன்றத்திலே மானியங்கள் மீதான விவாதத்தினுடைய இறுதிநாள். தொடர்ந்து சட்டமுன்வடிவுகள் பற்றியெல்லாம் பேசி, நாம் நிறைவேற்றவிருக்கின்றோம். அதற்கிடையில் ஒருசில செய்திகளை உங்களுடைய நினைவிற்கு நான் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், மக்கள் மறதிக்குணம் படைத்தவர்கள். ஆகவே, எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள் என்கிற ஒரு மனப்பான்மையோடு இன்றைக்கு எல்லாவற்றையும் மறைத்துவிடப் பார்க்கின்ற மாயாஜால வித்தைகள் நடைபெற்று வருகின்றன. அந்த மாயாஜால வித்தைக்கு இடம் தரமாட்டார்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். பல வழக்குகள் கடந்த ஆட்சியினர்மீது இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. சில அலுவலாளர்கள் மீதும் போடப்பட்டிருக்கின்றன. திரு. ஞானசேகரன் கூட இங்கே கேட்டார்.



தீயணைப்புத் துறையிலே ஒருவர் மீது மாத்திரம் வழக்கு போட்டிருக்கிறார்கள், இன்னொருவர் மீது என்னவாயிற்று என்று. ஒரு வழக்கு, அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர் இன்றைக்குக் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெறுகிறது. அவர் குறிப்பிடுகின்ற வழக்கு, வேறு ஒரு வழக்கு. அந்த வழக்கு பற்றிய புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே, அந்த விசாரணையிலே தகவல்கள் கிடைத்தால், ஆதாரம் இருந்தால், நிச்சயமாக யாரும் விடப்பட மாட்டார்கள் என்ற உறுதியை நான் திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்; சந்தேகப்படுகின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பெரிய பெரிய ஊழல்களைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். 'டான்சி' ஊழல், 'நிலக்கரி' ஊழல், 'ஸ்பிக்' ஊழல் என்று பெரிய பெரிய ஊழல்களைப் பற்றித்தான் பேசியிருக்கிறோம். சில சிறிய ஊழல்களும் உண்டு. 'Minor' ஊழல்களும் உண்டு. அதாவது கொசுறு ஊழல்கள். (சிரிப்பு) அந்த ஊழல்களைப் பற்றி நானல்ல. நம்முடைய இந்தியத் தலைமைக் கணக்காய்வு அலுவலர் கொடுத்த தணிக்கை அறிக்கையிலேயே இந்த ஊழல்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டுகளில் நாங்கள் இல்லாத நேரத்தில், இன்றைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், அன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்காரர்களாக இருந்த அந்த காலகட்டத்தில், நீங்களெல்லாம் பேசியிருக்கிறீர்கள். அப்பொழுதே 'ஸ்பிக்"-ல் 12 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டு, ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று அரசின் மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இதுபற்றி இந்தியத் தலைமைக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்களெல்லாம்கூட இதைப் பற்றிக் கேட்டு, வாய் திறக்க முடியாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றதை பத்திரிகைகளில் படித்துப் பார்த்திருக்கிறேன். இன்றைக்கு அதே தணிக்கை அறிக்கையில் கடந்த கால ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. அதாவது, 40 வயதுக்குள்ளான பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 12 ஆயிரத்துக்குக் குறைவாக இருந்து, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மாத்திரம் பெற்று, ஆண் குழந்தை இல்லாமல் குடும்பக்

கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தால், அந்தப் பெண் குழந்தைக்கு 5 ஆயிரம் ரூபாயும், ஒரு தங்க மோதிரமும் வழங்கப்படும் என்பது அந்தத் திட்டம். இதைப்பற்றி இந்தியத் தலைமை தணிக்கை அலுவலர் அறிக்கை என்ன சொல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மோதிரம் வாங்குவதில் பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது. 'ஒரு குழந்தைக்கு 2 கிராம் எடையில் 800 ரூபாய் மதிப்புள்ள தங்க மோதிரம் வழங்கப்பட வேண்டும்' என்பது அறிவிப்பு. ஆனால் வாங்கப்பட்ட மோதிரங்களின் எடை 1.4 முதல் 1.62 கிராம் வரையிலான எடைதான். இதை நான் சொல்லவில்லை. இந்தியத் தலைமை தணிக்கை அலுவலரின் அறிக்கை சொல்கிறது. மோதிரம் வாங்குவதிலே ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றவேயில்லை. அதில் ஆங்கிலத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், "The gold rings were purchased with a lesser weight varying from 1.4 to 1.62 grams. For the purchase of gold rings, no tender procedure was adopted and the rings were purchased from some private jewellers without calling for any tender or quotations" என்று இந்தியத் தலைமை தணிக்கைத் துறை அதிகாரி குறிப்பிடுகிறார். அவர் மேலும் குறிப்பிடுகிறார், என்னவென்றால், 'வாங்கப்பட்ட மோதிரங்களின் தரம் பற்றி பரிசீலிக்கவேயில்லை, செய்கூலி ஒவ்வொரு வியாபாரிக்கும் ஒவ்வொரு விதம். சிலரிடம் தங்கத்தின் விலையில் 2%, சிலரிடம் தங்கத்தின் விலையில் 11% என்று இப்படி மோசடிகள் நடைபெற்றுள்ளன' என்று குறிப்பிடுகிறார். இந்த மோதிரங்களை யாரிடத்திலே பெறவேண்டுமென்றால், DSWO— "District Social Welfare Officers were to collect the gold rings either from the Directorate or from the Office of the Minister for Social Welfare after paying the cost." பணத்தைக் கொடுத்துவிட்டு, அமைச்சரிடத்தில் இதைப் பெறவேண்டும். இதில் ரூ. 85.2 இலட்சம் செலவாகியிருப்பதாக ஒரு கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. மோதிரங்களில் எவ்வளவு ஊழல் நடைபெற்றுள்ளது என்பது பற்றி நான் சொல்லிவிட்டேன். இந்த ஆட்சி வந்த பிறகு, வழங்கப்பட்டது போக, மீதமுள்ள 659 மோதிரங்கள் அப்படியே உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரைப்பட நகர் ஜெ.ஜெ. சினி சிட்டி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் பெயரை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், பொருத்தமான பெயராக, 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்று





மாற்றியிருக்கிறோம். இதைப் பொறுத்தமட்டில், இதிலே விரிவாக எழுதியிருப்பதைப் பற்றிச் சொல்லி நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அதனுடைய தொடக்க விழாவுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புத் தொகை 75 ஆயிரம் ரூபாய். ஜெ.ஜெ. சினி சிட்டி தொடக்க விழாவுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட தொகை 75 ஆயிரம் ரூபாய். ஆனால் செலவழித்தது 43.14 இலட்சம் ரூபாய். 75 ஆயிரம் ரூபாய் எங்கே, 43.14 இலட்சம் ரூபாய் எங்கே என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதிலேயும்கூட ஆங்கிலத்தில் இப்படி எழுதியிருக்கிறது: "The Company incurred an expenditure of Rs. 43.14 lakhs by way of printing of invitation cards, souvenir, decoration, silver mementoes, cultural programmes, etc., towards inauguration of the project as against the ceiling limit of Rs.75,000/- fixed in September 1991 by the State Government for such function,". எல்லோரும் வியப்பிலே அப்படியே குமுறலோடு உட்கார்ந்திருக்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. 75 ஆயிரம் ரூபாய் என்பது 44 லட்ச ரூபாய்க்கு எப்படி நீண்டது என்பது எனக்கே புரியவில்லை.

பிற்பகல் 1-15

ஸ்டுடியோ கருவிகள் வாங்கியிருக்கிறார்கள். இன்றைய எம்.ஜி.ஆர். ஸ்டுடியோ, அன்றைய ஜெ.ஜெ. ஸ்டுடியோ, அதற்கு ஸ்டுடியோ கருவிகள், ஒலிப் பதிவு மற்றும் ஸ்டுடியோ கருவிகள்--வாங்க மும்பை, டெக்னோ குளோப் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதற்கென்று டெண்டர் எல்லாம் கிடையாது. நேரிடையாக மும்பை டெக்னோ குளோப் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி விவரங்களின்படி, உண்மையான தயாரிப்பாளரிடமோ, அல்லது தயாரிப்பாளர்களின் ஏஜெண்டுகளிடமிருந்தோதான் அந்தப் பொருள்களை வாங்கியிருக்க வேண்டும். அப்படியெல்லாம் வாங்கவில்லை. அந்தக் கம்பெனி இறக்குமதி செய்த விலை 2.16 கோடி ரூபாய். ஒப்பந்தப்புள்ளி மூலம் கொடுக்காமல், தனியார் ஒருவருக்குக் கொடுத்தார்களே அவர்கள் இறக்குமதி செய்த விலை கஸ்டம்ஸ் டியூட்டி உட்பட 2.16 கோடி ரூபாய். திரைப்பட நகருக்கு விற்ற விலை 3.36 கோடி ரூபாய். தணிக்கையில் எழுதியிருக்கிறார்கள். "The order was placed on Techno-Globe who were neither the manufacturers nor the direct authorised agent of any manufacturer. Interestingly, it was observed

that as per the bill of entry, the cost of imported equipment inclusive of customs duty received by Techno-Globe was Rs. 2.1 Crore. But Techno-Globe billed the Company for the same equipment for Rs. 3.36 Crores."— ஒரு கோடியே 20 லட்ச ரூபாய் எங்கே போனது, தெரியாது. கடவுளின் குழந்தைக்குத் தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறையிலே, மக்களுடைய உயிரைக் காக்கும் மருந்து ஒன்று, 'ப்லாலிடாக்சைம் ஐயோடைட்' என்ற ஊசி--20 எம்.எல். கொண்ட ஆம்ப்யூல்--வாங்கியதைப் பற்றி அவர்கள் எழுதுகிறார்கள். தணிக்கைக் குழு எழுதுகிறது. அவர்களாகவே ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள். எக்ஸ், ஒய், இசட் என்று. எக்ஸ்--104 ரூபாய், ஒய்--154 ரூபாய், இசட்--260 ரூபாய். குறைந்த விலை கோரிய எக்ஸ் நிறுவனம் 1990 டிசம்பர் மாதத்திற்குப் பிறகு தயாரிப்பு உரிமை இல்லை என்ற காரணத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது. என்ன வேடிக்கையென்றால், ஒப்பந்தம் மூலம் அரசு வாங்கிய ஆம்ப்யூல் விலை ஒன்று ரூ. 260. அவர்கள் வாங்கியது. ஒரு ஆம்ப்யூலின் விலை 260 ரூபாய். இதே ஒப்பந்த காலத்திலேயே, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ஏப்ரல் 1992-ல் ரூ. 85.80-க்கும், ஆகஸ்ட் 1992-ல் ரூ. 88.50-க்கும் அக்டோபர் 1992-ல் ரூ. 114.15-க்கும் வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. ரூ. 80-க்கும் ரூ. 90-க்கும் ரூ. 114-க்கும் வாங்கும் மருந்தை, ஒரு ஆம்ப்யூல் ரூ. 260 என்று இவர்கள் வாங்கியிருக்கிறார்கள். இதையும் அந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, இலவச காலணி வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தை மறைந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அருமைத் துணைவியார் சில காலம் முதலமைச்சராக பொறுப்பை ஏற்றபோது அறிவித்தார்கள், அல்லது அறிமுகப்படுத்தினார்கள். அறிமுகப்படுத்தப்பட்டபோது யார் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்கள் என்றும் சொல்லப்பட்டது. (1) தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்) (2) சமூக நல இயக்ககம் (டைரக்டரேட் ஆஃப் சோஷியல் வெல்பேர்), (3) கதர் வாரியம், இந்த மூன்று நிறுவனங்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டும். அதுமாதிரி முதலில் வாங்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன்



எல்லாவற்றையும் மூடிவிட்டு, கதர் வாரியத்திலிருந்து வாங்க வேண்டுமென்று சொல்லி, கதர் வாரியத்தில் பெயரளவுக்கு பதிவு செய்து கொண்ட பல கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நேரிடையாகக் காலணிகளை வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. இதில் என்ன வேடிக்கை என்றால், இந்தச் சங்கங்கள் கொடுத்த முகவரிகளுக்குச் சென்று பார்த்தால், அதிகாரிகள் சென்று விசாரணை நடத்தியபோது, இப்படிப்பட்ட சங்கங்களே இல்லை. முகவரி இல்லாத சங்கங்கள். முகவரி இல்லாத பேர் இன்றைக்கு நாட்டிலே இருப்பதைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) முகவரி இல்லாத கூட்டுறவுச் சங்கங்களுக்கு, முகவரி இல்லையென்றால் விட்டுவிட்டார்களா, என்றால் இல்லை. முகவரி இல்லையா? அப்பொழுது பிடி, உனக்கே 7, 8 தருகிறோம். இவ்வாறு அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி 1992-93-ல் ஒரு உத்தரவு போட்டு காலணிகளை முழுமையாக விநியோகம் செய்யவில்லை. இப்படி முழுமையாக விநியோகம் செய்யாத நிலையில் முன்னாள் சமூக நலத் துறை அமைச்சர் கோப்பிலே எழுதும்போது 'சென்ற ஆண்டு வாங்கியதைப் போலவே இந்த ஆண்டும் கதர் வாரியத்திலிருந்து 10 லட்சம் ஜோடி காலணிகள் வழங்க உத்தரவிடலாம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களே, 10 லட்சம் ஜோடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்து கோப்பு நிதியமைச்சரிடம் வருகிறது. நடமாடும் பல்கலைக் கழகம், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடத்திலே இது வருகிறது. அவர் என்ன எழுதுகிறார் இதிலே என்றால்-- இந்த அம்மாள் ஏற்கெனவே ஊழல் நடந்திருக்கிறது, 10 லட்சம் ஜோடி போதும் என்று எழுதியிருக்கிறார்கள், 10 லட்சம் ஜோடி காலணிகள் வழங்க உத்தரவிடலாம் என்று எழுதினார்கள். இவர் எழுதுகின்றார்; 10 இலட்சம் ஜோடி போதாது; 19½ இலட்சம் ஜோடியாக உயர்த்தி, நிதியமைச்சரே கைப்பட எழுதி கையெழுத்து போட்டிருக்கிறார். இதுவும், இந்த ஊழல் வழக்குகளில் வருகின்ற ஒன்று. இதெல்லாம் கொசுறு வழக்குகள் என்பதற்காக, முன்பெல்லாம் இதைப்பற்றிச் சொல்லவில்லை. இவையெல்லாம் கொசுறு வழக்குகளிலே வரப்போகின்றவைகள்.

பிற்பகல் 1-20

இன்னொன்றும் தெரியும் உங்களுக்கு உல்லாசப் பேருந்து எப்படிப்பட்டது என்று. அந்த உல்லாசப் பேருந்து, நடமாடும் சொர்கம். அந்த நடமாடும் சொர்கத்தை திடீரென்றுதான் நம்மால்

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 28

கண்டுபிடிக்க முடிந்தது. சொர்கத்தை அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்க முடியுமா? எனவே, அந்த சொர்கத்தை இப்பொழுதான் ஒரு மாதத்திற்கு முன்பு கண்டுபிடித்திருக்கிறோம். பெரிய பேருந்து. அதற்குள்ளே எல்லா வசதிகளும்; இரண்டு கட்டில், படுக்கை, மெத்தை, பாத் ரூம், கிச்சன், டி.வி, வீடியோ, இவ்வளவும் அங்கே இருக்கின்றன. அது மாத்திரம் அல்ல, உள்ளேயிருந்து வெளியே பார்க்கலாம்; வெளியே இருக்கிற யாரும் உள்ளே பார்க்க முடியாது. அது மாதிரியான வசதி வாய்ப்புக்களோடு நடமாடும் சொர்கலோகப் பேருந்து ஒன்று. அது, ரூ. 50 இலட்சமோ, ரூ. 60 இலட்சமோ; அதுவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் விரைவில் நீதிமன்றத்திற்கு வர இருக்கின்றன. அதற்கான தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவை வெண்திரையில் காண்க என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் வரவேற்று, ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.



1997 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

நடந்து முடிந்த விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு சம்பவத்தைக் குறித்து காவல் நிலையத்தில் சில பேர் தண்ணீர் கேட்கும்போது ** என்று ஒரு காவலர் கூறியதாகச் சொன்னார்கள். அந்த இரண்டு சொற்களை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைங்கிணங்க அகற்றப்பெற்றது.

**(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1997), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1997) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 11-3-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பிற்பகல் 1-25

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1997), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1997)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு. பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

@ 17-4-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஈ) தமிழ்ப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1997), மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 28

*மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/ 1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1-4-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/ 1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1997--தொடர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மௌனமாகவே சிலர் என்னிடம் முறையிட்ட விஷயத்தைத்தான் நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையைச் சொல்லுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் வேண்டுமென்று ஏகோபித்து எல்லோரும் முன்வைத்த அந்தக் கோரிக்கையைச் சொல்லிக் கொண்டே வந்து, வேறு விஷயங்களைச்

சொல்லச் சொல்ல, ஏனோ அது நழுவி விட்டது. அந்த நழுவிய விஷயத்தை, மீண்டும் தண்டவாளத்திற்குக் கொண்டு வந்து, தீர்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் கேட்கிறார்கள்; உண்மைதான். ஒரேயடியாக எல்லாவற்றையும் தெரிவித்து விட்டால்--தொடர்ந்து இன்னும் நான்காண்டுகள் நாம் இருக்கப் போகிறோம். ஒவ்வோராண்டும் ஏதாவது ஒன்றை அறிவிப்புச் செய்ய வேண்டும்--பிறகு அறிவிப்புக்கே இடமில்லாமல் உள்ள நிலை ஏற்பட்டுவிடும். எனவே அதுபற்றி அடுத்த ஆண்டு யோசிப்போம். அதுவரையில் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள் (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப்பிரதேச மாநிலத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஓராண்டுக்கான பயணப் படி, 50 ஆயிரம் ரூபாய் வழங்குகிறார்கள். பீகார் மாநிலத்தில்... (குறுக்கீடுகள்) உ.பி.-யிலும் கரெக்ட்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்வதை ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நேற்றையதினம், திரு. ஞானசேகரன் அவர்கள் ஏதேதோ கணக்குச் சொன்னார். ஆகையினால், முதலமைச்சர் அவர்கள் விவரமாக விசாரித்துவிட்டுத்தான், அது பற்றி யோசிப்பார்.

பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1-30

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீகார் மாநிலத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பயணப்படி ஆண்டொன்றுக்கு 35,000 ரூபாய் வழங்குகிறார்கள். இந்த இரண்டையும் ஆதாரபூர்வமாக நான் தெரிந்து கொண்டு வந்திருக்கிறேன். அந்த இரண்டு மாநில முதலமைச்சர்களால் முடிகிறபோது, நம்முடைய முதலமைச்சரால் அது முடியாது? எனவே, அவருடைய கருத்து என்ன என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள்





டெல்லியில் அந்த முதலமைச்சர்களை எல்லாம் வேறு காரணங்களுக்காகச் சந்திக்கிறார் என்று கருதினேன். இப்போதுதான் புரிகிறது இந்த விவரங்களுக்காகத்தான் சந்தித்தார் என்று. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

--ஏதுமில்லை--

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

184. 1986-87 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

185. 1986-87 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

186. 1986-87 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

187. 1987-88 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

188. 1987-88 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

189. 1987-88 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

[1997 ஏப்ரல் 28

*190.* பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்திரெண்டாவது முதல் நாற்பத்தொன்றாவது வரையிலான அறிக்கைகள், 1996-97. (10 அறிக்கைகள்)

*191.* பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை, *1996-97.*

*192.* பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை, *1996-97.*

*193.* பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை, *1996-97.*

—0—

D
V21,31N97
N97.35
27657.